[illegible]

[illegible] 39 [illegible]

16 July 1953

JL
[illegible], N15 AB
N53.39.1.
187609

ஆனந்தபோதினி
135
விஜயஸ்ரீ
ஆடிமீ
கணபதி
3
அணா

"ஜீவா" தீட்டிய

எழுத்து ஓவியங்கள்

யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

விலை ரூ. 2-0-0.

தாசிரமணி

விலை ரூ. 1-8-0.

உயிரோவியம்

விலை ரூ. 1-8-0

காதலனா? காதகனா?

விலை ரூ. 1-4-0.

இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?

விலை ரூ. 1-0-0.

சீமாட்டி கார்த்தியாயினி

விலை அணா 14.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் தபால் சார்ஜ் அணா 0-7-0
6-புத்தகங்களுக்கும் தபால் சார்ஜ் ரூ. 1-6-0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

135
4.53.

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 39 | விஜய வருஷம் ஆடி மீ கஉ
1953 வருஷம் ஜூலை மீ 16௳ | பகுதி 1

உள்ளுறை.

8 OCT 1953
MADRAS

எண்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	2
2.	வடக்கெல்லைப் போராட்டம் (தலையங்கம்)	3
3.	விரைக தேரே!	6
4.	மேடைப் பேச்சு	8
5.	ஊடலும் கூடலும் (கவிதை)	17
6.	சித்தூர் யாருக்கு?	21
7.	வள்ளுவரும் வாய்மையும்	25
8.	பண்டார சாத்திரம்	28
9.	வள்ளுவர் மருந்து	33
10.	மணமகளுக்குச் சில மணிமொழிகள்	37
11.	காதற் சமாதி	40
12.	பொம்மைகள்	45
13.	முடிவும் விடிவும் (தொடர் கதை)	52
14.	பஞ்சாங்கம்	60

ஆனந்த போதினி

கடவுள் வணக்கம்

இவ்வுல கதிலே இறையர சாட்சி
    இன்பத்து மற்றைஇன் பத்தும்
எவ்வள வெனினும் இச்சையொன் றறியேன்
    எண்ணுதோ றருளுருக் கின்றேன்
அவ்வுல கதிலே இந்திரர் பிரமர்
    அரிமுத லோர்அடை கின்ற
கவ்வையின் பத்தும் ஆசைசற் றறியேன்
    எந்தைநின் கருத்தறிந் ததுவே. (1)

சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்
    தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக்குரிய ஒழுக்கமும் அழியா
    நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
    தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத்து உயிர்க்கெல்லாம் இன்பம்
    செய்வதுஎன் இச்சையாம் எந்தாய். (2)

உருமலி உலகில் உன்னைநான் கலந்தே
    ஊழிதோ றூழியும் பிரியாது
ஒருமையுற்று அழியாப் பெருமைபெற்று அடியேன்
    உன்னையே பாடிநின் றாடி
இருநிலத்து ஓங்கிக் களிக்கவும் பிறருக்கு
    இடுக்கண்உற் றால்அவை தவிர்த்தே
திருமணிப் பொதுவில் அன்புடை யவராய்ச்
    செய்யவும் இச்சைகாண் எந்தாய். (3)

எவ்வுயிர்த் திரளும் என்உயிர் எனவே
    எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை
    ஆற்றியே அச்சகே இடவும்
செவ்வியுற்று உனது திருப்பதம் பாடிச்
    சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறுது இங்கே
    ஓங்கவும் இச்சைகாண் எந்தாய். (4)

187609

வடக்கெல்லைப் போராட்டம்

சென்னை ராஜ்யத்திலிருந்து ஆந்திர ராஜ்யம் என ஒரு தனிப்பகுதி கூடிய சீக்கிரம் ஏற்படப் போகிறது. ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக ஆந்திர சகோதரர்கள் தங்களுக்கென ஒரு தனி அரசு வேண்டுமென்று கோரிச் செய்து வந்த கிளர்ச்சியின் பயனை அக்டோபர் மாதத்தில் அடையப் போகிறார்கள். அதற்கான பூர்வாங்க வேலைகளெல்லாம் ஜரூராக நடைபெற்று வருகின்றன. இவ்விதம் புதிதாக அமையப் போகும் ஆந்திர ராஜ்யத்தின் தற்காலிகத் தலைநகராக, கர்நூல் பிரதேசத்தை ஆந்திர சட்ட சபை யங்கத்தினர்கள் பலத்த விவாதத்தின்மீது தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அடுத்து ஆந்திர ராஜ்ய அமைப்பு மசோதா தயாராகியிருக்கிறது. இம்மாதம் 14-ந்தேதி சென்னைச் சட்டசபை அம் மசோதாவைப் பரிசீலனை செய்யும். அத்துடன், பெல்லாரி ஜில்லாவில் பெரும்பகுதி மைசூர் ராஜ்யத்தோடு சேர்க்கப்படுவதனால், மைசூர் சட்டசபையும் இதுபற்றி ஒரு மசோதா கொண்டுவந்து தன் அங்கீகாரத்தைத் தெரிவிக்கும் என நம்புகிறோம். இவ்விதமாக, அமலுக்கு வரும் ஆந்திர ராஜ்யப் பிரிவினையைக் காரியாம்சத்திற்குக் கொண்டுவந்து, அது சம்பந்தப்பட்ட மற்றப் பொறுப்புக்களை நிறைவேற்றி வைக்க வேண்டுவது இந்திய அரசாங்கத்தின் கடமையானதால், பாராளுமன்றத்திலும் இதுபற்றி விவாதம் நடைபெறும் என்பதில் ஐயமில்லை. இவ்விதமாக, முறைப்படி காரியங்கள் நடந்து கடைசியாக, ஆந்திர ராஜ்ய அமைப்பு சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்டுவிடும்.

நியாயமான அடிப்படையில், ஆஸ்தி, பொறுப்பு, பிரிவினை விஷயம் தீர்க்கப்பட்டு, ஹைகோர்ட்டு, சர்க்கார் காரியாலயங்கள் முதலியவைகளையும் கவனித்து, தகராறுக் கிடமின்றி நல்ல விதமாக எல்லா வேலைகளும் நடக்கும்படியாகச் செய்திருக்கும் சென்னை சர்க்காருக்கு ஆந்திர சகோதரர்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அதுபோலவே, இவ்வளவு காலம் ஒன்றாக இருந்து இப்போது பிரிந்துபோகும் ஆந்திர சகோதரர்கள் தப்பபிப்பிராயம், வீண் சந்தேகங் காரணமாகக் கொண்டிருந்த மனமாற்சரியம், பகைமைகளை அறவே விட்டொழித்து நேசபாவத்துடன் தமிழ்ச் சகோதரர்களிடம் விடைபெற்றுப் போகவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆந்திரர்கள் தங்களுடைய நீண்டகாலக் கோரிக்கையைப்

பெற்று தனி ராஜ்யம் நடத்தப்போவது கண்டு தமிழர்கள் பெருமகிழ்ச்சிகொண்டு நல் வாழ்த்துக்கூறியனுப்புவார்கள் என்பது திண்ணம்.

ஆனால், ஆந்திர சகோதரர்களில் அரசியல் வாதிகளாயுள்ள சிலர், தாங்கள் தனி ராஜ்யம் பெற்றுக்கொண்டு போகும் சமயத்திலும், தமிழ் சகோதரர்கள்மீது தவறாகக் கொண்டுள்ள விரோதத்தைச் சிறிதும் விடாமல் அதிகமாக்கிக் கொண்டுதான் போகிறார்கள். தாங்கள் போகிற போக்கில் தமிழர்களுக்குரிய பிரதேசங்களையும் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டு போகப்பார்க்கிறார்கள். தங்களுக்குச் சொந்தமல்லாத இடங்களை யெல்லாம், தங்களில் சிலர் வியாபார விஷயமாகவும் உத்தியோகங் காரணமாகவும் குடியேறிருப்பதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்களுக்குச் சொந்தமான இடங்கள் என்று சொல்லிக்கொண்டு வருவது ஆந்திர அரசியல் வாதிகளின் நீண்டகால வழக்கம். அந்தப் பரம்பரைக் குணத்தை விடாமல் இப்போதும், திருத்தணி, திருப்பதி, சித்தூர் போன்ற தமிழ்ப் பகுதிகளைத் தங்கள் புது ராஜ்யத்துடன் சேர்ந்தவை என்று கூறிச் சாதிக்கின்றனர். அன்னிய ஆட்சி காலத்தில் நிர்வாக சௌகரியத்துக்காக, வடாற்காடு ஜில்லாவிலிருந்த சித்தூர், திருத்தணி, திருப்பதி முதலிய ஊர்களை மற்ற ஆந்திரப் பகுதிகளுடன் சேர்த்து, தனி ஜில்லாவாகச் செய்திருப்பதொன்றே ஆந்திரர் தங்கள் பிரதேசமென உரிமை கொண்டாடுவதற்கு ஆதாரமாக இருக்கிறது. இது தவிர, ஜனத்தொகையிலும் சரி, சரித்திர ஆதாரத்திலும் சரி, கலாசார முறையிலும் சரி, இயற்கை எல்லையிலும் சரி, இவர்கள் கூற்றுக்கு அநுகூலமான ஆதாரம் கிடையாது. ஆனாலும், பொய்யைக்கூடப் பல முறை சொன்னால் மெய்யாய் விடும் என்ற கோயபெல்ஸ் (ஹிட்லர் ஆட்சிக்காலத்தில் ஜெர்மன் சர்க்கார் விளம்பர மந்திரியாயிருந்தவர்) கொள்கைப்படி, ஆந்திரர்கள் சித்தூர், திருத்தணி, திருப்பதி முதலிய தமிழ்ப்பகுதிகள் ஆந்திரப் பிரதேசமே என அடுத்தடுத்துச் சொல்லி உண்மையாக்க முயல்கின்றனர். தென்னிந்தியாவைப் பொறுத்த விஷயத்தில் பொதுவாக அக்கறையில்லாததோடு, பல விஷயங்களில் தெளிவில்லாமல் இருந்து வரும் மத்திய சர்க்கார், ஆந்திரர்களின் அட்டகாசத்தைக் கண்டு மருண்டு அவர்கள் சொல்வதுதான் மெய் போலும் என்று எண்ணி சித்தூர் ஜில்லா தகராறுக்கு இடமில்லாத பிரதேசம் என்று சொல்லி விட்டார்கள். சித்தூர் ஜில்லாவைப்

போலவே உள்ள பெல்லாரி ஜில்லா விஷயத்தில் பிரதமர் நேரு அவ்விதம் சொல்லவில்லை. அது தகராறுக்குரிய இடமென்று சொல்லி, அந்த ஜில்லா விஷயமாக ஆந்திரர்க்கும் கன்னடர்க்குமுள்ள தகராறை விசாரித்துச் சமரசமாகத் தீர்த்து வைக்க நீதிபதி மிஸ்ராவை நியமித்து நியாயம் வழங்கினார்கள். இதற்குக் காரணம் கன்னடர் முன்னெச்சரிக்கையாயிருந்து செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ததுதான். தமிழர்களோ முன்னெச்சரிக்கையாயிருந்து தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டிய சமயத்தில் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அதனால், பிரதமர் நேரு சித்தூர் ஜில்லா தகராறுக்கு இடமில்லாத பிரதேசம் எனக் கூற நேர்ந்தது.

இவ்விதம் பண்டித நேரு சொன்ன பிறகே, ம. பொ. சிவஞானம், கே. விநாயகம் போன்ற சிலருக்குச் சித்தூர் ஜில்லா தமிழ் நாட்டை விட்டுப் போய்விடும்போலிருக்கிறதே என்ற துடிப்பு ஏற்பட்டது. தமிழகத்தின் வடக்கெல்லையான வேங்கடத்தை — அதாவது திருப்பதி, திருத்தணி, சிற்றூர் போன்ற வடக்கெல்லைப் பகுதிகளை விட்டால் தமிழர்களுக்கு வாழ்வில்லை என்பதை அப்போதுதான் பலர் உணரலாயினர். இதன் பயனாக, ஏற்பட்டதே சமீபத்தில் நடந்து முடிந்த சித்தூர்ப் போராட்டம். இப்போராட்டம் குறித்து சித்திரை இதழிலேயே விவரித்திருக்கிறோம். இது பெல்லாரி, விஜயவாடா கிளர்ச்சி போலல்லாமல் கூடுமானவரை சாத்வீகமான முறையிலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. வடக்கெல்லை பாதுகாப்புக் கமிட்டி என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கி நடத்திய இப்போரில் பெரும்பாலும் தமிழரசுக் கழகத்தினரும், ஒரு சில திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டார்கள். இவர்களில் சிலர் போலீஸ் தடியடிக்குள்ளானார்கள்; சிலர் சிறைப் பட்டார்கள். சித்தூர் போரில் ஈடுபட்டவர்கள், சித்தூர் ஜில்லா தகராறுக்குரிய பிரதேசம் என்று பிரகடனப் படுத்தி அடுத்து எல்லைக் கமிஷன் விசாரணை செய்து நியாயம் வழங்க ஏற்பாடு செய்வதாக மத்திய சர்க்கார் வாக்குறுதி யளிக்க வேண்டுமென்றுதான் கோரினர். பண்டித நேரு லண்டனிலிருந்து வந்ததும், சித்தூர் போராட்டச் செய்தி யறிந்து, உடனே சித்தூர் ஜில்லா முதலியவற்றிலும் எல்லைக் கமிஷன் விசாரணை செய்து தீர்ப்புக் கூறும் அதற்காக ரயிலை நிறுத்துவதுபோன்ற முறையற்ற காரியங்களைச் செய்து மக்களுக்கு

அட்டைப் படக் கட்டுரை :

விரைக தேரே!

சின்னமனூரான்

★

பூம்.........பூம்............மென வெற்றிச் சங்கு அதிர்ந்தது. முரசம் முழங்கியது. போர்மேற் சென்ற தலைவன் ஆவலோடும் உறுதியோடும் எதிர்பார்த்து நின்ற வெற்றி கிட்டியது. முரணிய பகைவர் அடிபணிந்தனர். கொடுமை பட்டது. அறம் உயர்ந்தது. அதற்குப் பின்னரும் பாடி வீட்டிலும் படைக் கலங்களுக்கு மத்தியிலும் கிடக்க, பைத்தியமா தலைவனுக்கு! கார்வருமுன் கடுகி வருவேன் என்று சூள் உரைத்து விட்டு வந்தபோது வாடி நின்ற வடிவழகியை எண்ணி வீடு திரும்பினான் தலைவன்.

தேர் விரைந்து கொண்டிருந்தது. சவுக்கு கொடுக்கப் படாமலே புரவிகள் கடுவேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தன. இல்லையில்லை! பறந்து கொண்டிருந்தன. மரமும் மலையும் பிறவும் பின்னுக்கு ஓடி மறைந்து கொண்டிருந்தன. ஆனால் அந்த வேகம் தலைவியின் மனப் புரவியின வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை, முடியாது.

அதிகாலையில் தொடங்கிய ஓட்டம் நீண்டு கொண்டேயிருந்தது. உச்சி வேளையாயிற்று. குதிரைகளின் வாயில் நுரை தள்ளிக் கொண்டிருந்தது. குதிரைகளுக்கு ஓய்வு தர எண்ணி வழியிலிருந்த சோலை ஒன்றில் தேரை நிறுத்தினான். ஆனால் தலைவன் எண்ணமெல்லாம் தலைவியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

அசௌகரியம் உண்டுபண்ணுவது அடாது என்று கூறினார்.

பிரதமரின் இந்த உறுதிமொழி வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியாருக்குத் திருப்தியை அளித்திருக்கிறது. ஆகவே, அவர்கள் உடனே போராட்டத்தை நிறுத்தி விட்டார்கள். எனினும், எல்லைக் கமிஷன் முடிவு கூறும் வரை, சித்தூர் ஜில்லா போன்ற இடங்களில் இருக்கும் தமிழர்களுக்கு ஆந்திரராஜ்ய சர்க்கார் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் வாக்குறுதி கேட்கின்றனர். இது நியாயமானதே.

அத்துடன் எல்லைக் கமிஷன் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக விசாரணை செய்ய வருகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. அதாவது குறைந்த பட்சம் ஆறு மாதத்துக்குள் எல்லைக் கமிஷனை மத்திய சர்க்கார் ஏற்படுத்தி விசாரணை செய்து நியாயமான தீர்ப்புக் கூற வைக்கவேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தாகம் மிகுதி, விடாய் தீர்க்க சோலையின் மற்றொரு பாங்கில் பரற்கற்கள் நிறைந்த பள்ளத்தில் கிடந்த நீரருகே சென்றான். ஒரு வாய் அள்ளிக் குடித்தான். மறு கை அள்ளியது வாய்க்குப் போகவில்லை. நீரில் துள்ளிய மீன்கள் காதலியின் கண் பிறழ்ச்சியை நினைவூட்டியது. உற்று நோக்கினான். கையிலிருந்த நீர் வழிந்து விட்டது. தன் நிலைமை நினைத்துச் சிரித்துக் கொண்டே மறுமுறை நீரை யள்ளும் முன்னர் நிமிர்ந்து பார்த்தான்.

அப்போது தான் நீர் குடித்து விட்டு ஆண் மான் தன் துணையோடு வாயில் நீர் சொட்டச் சொட்ட ஆளரவம் கேட்டதும் மிரட்சியோடு பார்த்தது. கயற்கண்ணாளை மானோடு ஒப்பிட்டான். துள்ளிய கயலும் மிரண்ட மானும் அவனை இல்லம் திரும்ப எச்சரிக்கை செய்வனபோற் தோன்றின. பகுத்தறிவற்ற மான் கூட துணையைப் பிரிவதில்லை. நான் இன்னும் இங்கு தாமதிக்க முடியாது. கூடாது என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

தேரருகே வந்தான். அவசரம் அவன் கண்களில் ஒளி வீசியது. தேர்ப் பாகனுக்கு அதைப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். ஓடிவந்த களைப்பு தீருமுன் திருப்பப் பூட்டுகிறார்களே என்ற கோபத்தில் குதிரைகள் முன்னுக்கும் பின்னுக்கும் முரணித் தன் கண்டனத்தை தெரிவித்தன. அது கூடத் தாளவில்லை தலைவனுக்கு.

"ம்.....பூட்டுக் குதிரைகளை; பறக்கட்டும்.....தேர்"—முடுக்கினான்.

"அதோ...பார்...துணையோடு நிற்கும் இரலையை.....அடவியில்.....பகுத்தறி வில்லாதவை என்று சொல்லுகிறோம். ஆனால் அவை நடந்துகொள்ளும் விதம்...! மாலைக்காலத்தைக் கண்டதும் கயற்கண்ணாள் என்னை எண்ணுவாள். வாடுவாள்...வதைவாள்...ஏங்குவாள்...ஆகவே, மாலை வருமுன் வீடடைந்தாக வேண்டும்; அவளைக் கண்டாகவேண்டும்......ம்...பறக்கட்டும்... தேர்...சொடுக்கு சவுக்கை. என்ன தேர் ஊர்கிறது......"—தலைவன் சொன்னான். தேர் பறந்து கொண்டிருக்கும் வேளையில் தலைவன் எண்ணம்...அந்த எண்ணத்தின் வேகம்...வேகத்தின் அவசியம்...தலைவனுக்குத்தான் தெரிய முடியும்.

இவ்வளவு சொன்ன பிறகும் பாவம் ஏவலாள் தாமதிக்கவா முடியும்! பறந்தது தேர்; விரைந்தது அவன் உள்ளத்தோடு!

"பரவலற் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மா னெறிமுத லுகளும்
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயல் முரணிய வுண்கட்
டெரிதீங் கிளவி தெருமர லுயவே!"

—குறுந்தொகை—250.

நாடகம்

மேடைப் பேச்சு

க. கனகராஜன்

☆

காட்சி 1

காலம்: மாலை நேரம்.

இடம்: பொதுக்கூட்ட மண்டபம்.

உறுப்பினர்: தலைவர் வைரநாதம், சில தொண்டர்கள், பேச்சாளர், பார்வையாளர் முதலியோர்.

தொண்டர் ஒருவர் பாடுகிறார்:—

சொல்லைக் கேளுமே!—ஐயா
சொல்லைக் கேளுமே!—நாம்
சமத்துவமாய் வாழ்வழி சொல்லைக் கேளுமே!
கொல்ல வேண்டுமே!—பேயைக்
கொல்ல வேண்டுமே!—நம்
குடிகெடுக்கும் சாதிப்பேயைக் கொல்லவேண்டுமே!
வெல்ல வேண்டுமே!—ஐயா
வெல்ல வேண்டுமே!—நமை
வெருட்டி வரும் ஏற்றத்தாழ்வை வெல்லவேண்டுமே!
தொல்லை போக்குமே!—ஐயா
தொல்லை போக்குமே!—நம்
தூயசெம்மல் தந்தநெறி தொல்லை போக்குமே!

(சொல்ல)

தலைவர் வைரநாதம் பேசுகிறார்:—

அன்பர்களே, தோழர்களே,

வணக்கம். இன்று—மார்ச்சு 12ம் நாளாகிய இன்று சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாள். இன்றுதான் நமக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கிய, காரிருளினின்று பேரொளியை நோக்கி நம்மை எல்லாம் அழைத்துச் சென்ற உலகத் தலைவர், பெரும் வாய்மைச் செம்மல் தம் கடைசி மூச்சை விட்டநாள்.

இந்த நாட்டிலுள்ள நாம் ஒவ்வொருவரும், அவர் கூறிப் போந்துள்ள திட்டங்கள் பலவற்றிலும் குறைந்தது ஓனறையாவது கடைப்பிடித் தொழுகவேண்டும்.

நம் பெரும் வாய்மைச் செம்மல் பொதுநலத் தொண்டில் தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொண்டும், இந்த நாட்டிலும், பிற நாட்டிலும் எண்ணிறந்த உண்மைத் தொண்டர்களை உற்பவித்தும் பலகாலும் முயன்றும் இன்னும் எத்தனையோ அரும் பெரும் செயல்கள் நிறைவேற்றப் பெருமல் இருக்கின்றன. உதாரணமாக தாழ்த்தப்பட்டோர் நிலையை எடுத்துக் கொள்வோம். இன்று நம் நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்டோர் எனப் படுவோர் பிறப்பு காரணமாகப் படும் அல்லல்கள் இன்னும் முழுதும்—முழுதுமென்ன, கொஞ்சமும் தீர்ந்து போகவில்லை. நிலம் உழுபவனுக்கே சொந்தமென்று அந்தப் பெரியார் ஓயாமல் முழங்கி வந்தார். ஆனால் பண்ணைத் தொழிலாளரா யிருக்கும் லட்சக்கணக்கான மக்களின் துயர், குறை கொஞ்சமேனும் நீங்கி யிருக்கின்றதா?

என்று இந்த நாட்டில்—சிற்றூர் முதல் பட்டணம் வரை—உள்ள எல்லாரும் சாதி சமயப் பாகுபாடுகளை நீக்கிக் கலந்துறவாடுகின்றனரோ, என்று அடிமை ஆண்டான் என்ற முறையில் அமைந்துள்ள முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடும், நாள் முழுதும் செந்நீரை வியர்வையாய்க் கொட்டிப் பாடுபடுவோன் அரைவயிற்றுச் சோற்றுக்கும் வழியின்றித் திண்டாடுவதும், நாள் முழுதும் ஒரு வேலையுமின்றி ஊர்சுற்றித் திரிந்து பல பல களியாட்டங்களில் ஈடுபட்டிருப்போன் உண்டு கொழுப்பதும் ஒழிகின்றனவோ அன்றே உண்மையான நன்னாள். எனவே, இன்று நாம் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும்.

நம்முள் ஒவ்வொருவரும எங்கெங்கு வாய்ப்புக் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் சாதி சமயப் பாகுபாடுகளை நிர்மூல மாக்க வேண்டும். முதலாளி தொழிலாளி என்ற கொடிய வழக்கை ஆணிவேரோடு களைந் தெறியவேண்டும்.

[தலைவர் வைரநாதம் முடிவுரை கூறி அமர்கிறார்.]

காட்சி 2

காலம்: அந்தி மயங்கும் வேளை.

இடம்: அடுத்தடுத்துள்ள தேநீர்க் கடையொன்றும், பத்திரிகை விற்பனைக்கடை யொன்றும்.

உறுப்பினர்: தலைவர் வைரநாதம், பொன்னன், மதுரமுத்து இன்னும் தேநீர் அருந்த வருவோர், கடைக்காரர் முதலியோர்.

[தலைவர் வைரநாதம் பத்திரிகை விற்பனைக் கடையோரத்தில் அமர்ந்த வண்ணம் தேநீர்க் கடையை நோக்கிக்கொண் டிருக்கிறார். தேநீர்க் கடையில் பலர் சள சளவென்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

பொன்னன்: (தேநீர்க்கடைக்காரரை நோக்கி தணிந்த குரலில்) ஐயா, ஒரு டீ குடுங்கோ!

[தேநீர்க் கடைக்காரர் ஒரு கண்ணாடிக் கலத்தில் தேநீர் ஊற்றிக் கொடுக்கின்றார். பொன்னன் அதை வாங்கி, தூண் மறைவில் நின்று கொண்டு அவசர அவசரமாகப் பருகுகின்றான். தலைவர் வைரநாதம் அதைக் கவனிக்கின்றார்.]

த. வைர. (தமக்குள்) அதோ, அங்கே தேநீர்ப் பருகுகின்றவன் பொன்னனல்லவா? அட, அவன் ஒரு தாழ்ந்த வகுப்பா

ளுயிற்றே! உயர்ந்த வகுப்பார் பருகும் அதே கலத்தில் அந்த அற்பப் பயலும் பருகுவதா! ஊரே கெட்டு விட்டதே! இன்னும் சிறிது காலம் போனால் உயர்ந்த வகுப்பான் என்று யாரும் வெளியில் தலைகாட்ட முடியாதுபோ லிருக்கின்றதே!—இருக்கட்டும். இந்த அயோக்கியப் பயலுக்கு தக்க படிப்பினை யளிக்கிறேன். இல்லையேல் நிலைமை மிஞ்சி விடும்.

[தலைவர் வைரநாதம் தம் இருக்கையினின்று எழுந்து செல்கின்றார். சற்றுத் தூரத்தில் நிற்கும் மதுர முத்துவை நோக்கிக் கையசைக் கின்றார். இருவரும் ஒரு ஒதுக்குப் புறமான விடத்துக்குப் போகின்றனர்.]

மதுரமுத்து: ஏன்? என்ன விசேஷம்?

த. வைர: தக்க சமயத்தில் நீ இங்கிருந்தாயே. வந்து (மதுரமுத்துவின் காதருகிற் சென்று ஏதோ இரகசியமாய்ச் சொல்கின்றார்.)

மதுர: (தலையை ஆட்டிக்கொண்டு) ஆகட்டும். ஆகட்டும்.
[இருவரும் பிரிந்து செல்கின்றனர்.]

காட்சி 3

இடம்: தலைவர் வைரநாதனுடைய வீடு.

உறுப்பினர்: தலைவர் வைரநாதம், பண்ணையாள் வேலாண்டி.

[தலைவர் வைரநாதம் சாய்வு நாற்காலி யொன்றில் அமர்ந்து அன்றைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கின்றார்.]

வேலாண்டி: எஜமான், எஜமான்! (சற்று உரத்த குரலில் கூப்பிடுகின்றான் வெளிவாயிலில் நின்ற வண்ணம்.)

த. வைர: யாரது?

வேலா: நான் தானுங்க வேலாண்டி.

த. வைர: நீதானா இப்படிக் கத்துகிறாய்! என்னடா தலை போகிற அவசரம்! (பத்திரிகையை மேசைமீது போட்டு விட்டு வெளியே வருகின்றார்.)

வேலா: (அடக்க ஒடுக்கமாய் நின்ற வண்ணம்) ஒண்ணு மில்லீங்க.............(தலையைச் சொறிகிறான்.)

த. வைர: ஒன்று மில்லாமலா என்னைப் பரக்கப் பரக்கக் கூப்பிட்டாய்! என்னடா இது பொம்மலாட்டம்! சங்கதியைச் சொல்லடா!

வேலா: இல்லீங்க.........வந்து......சின்ன எஜமான்கிட்டே கேட்டேனுங்க. அவரு இந்த மாசத்துப் படியை மாசக் கடைசியிலேதான் குடுக்கிறேங்கிறாரு. அதுதான் ஒங்ககிட்டே வந்து சொல்லி, அதைக் குடுக்கச் சொல்லலான்னு வந்தே......னு............ங்க.........

த. வைர: ஏய் வேலாண்டி! நீ என்ன எப்போது பார்த்தாலும் இதுமாதிரி படி, படி என்று உயிரை வாங்குகின்றாய்! நான்

உன்னிடம் எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன். அந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியாது. சின்ன எஜமானிடமே கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று.

வேலா: அவருதான் கேட்டா குடுக்க மாட்டேங்கிறாருங்களே. ஒங்ககிட்டே வந்து கேக்காமே வேறே யாருக்கிட்டே கேக்கறதுங்க?

த. வைர: திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்றாயே! உனக்குச் சுரணை கிரணை இடையாதா? வயது மட்டும் ஆகி விட்டதே கழுதைக்காலுற்போல் ஐம்பது. என் வீட்டுச் சொத்து தெருவிலே கிடக்கின்றது என்று எண்ணிக் கொண்டாயா நீ நினைத்தபோதெல்லாம் அளந்து அளந்து கொடுக்க.

வேலா: என்னங்க இப்படிப் பேசறீங்க! பண்ணை வேலையிலே நான் கொறைச்சி இறைச்சி செய்யறேனுங்களா செம்மானங் கட்டற நேரத்துக்கு முன்னாலேயிருந்து பொழுது அடிசாஞ்சு ரெண்டரை நாழிகை கழியற வரைக்கும் ஒங்க பண்ணையிலே கெடக்கறேனுங்களே ஒழைச்சுக்கிட்டு.

த. வைர: அடே, நீ வேலை செய்கிறதைப் பற்றி இப்போது யாரடா கேட்டது. மாதத்திலே பல தடவை வந்து படி, படி என்று நச்சரிக்கிறாயே; வேறு எந்தப் பண்ணை முதலாளியாவது உனக்கு இப்படி அளந்து கொடுப்பானா?

வேலா: அப்புடி என்னுங்க நீங்க அதிகமாக் கொடுக்கிறீங்க. எல்லாரும் மொத்தமா குடுத்தா நீங்க சில்லறையா குடுக்கிறீங்க. அதுக்கும் எத்தனையோ வாட்டி ஒங்களையும், சின்ன எசமானையும் தனியே வந்து மோதி கேக்கவேண்டி யிருக்குது. இந்தப் படியை வாங்கறத்துக்குள்ளே நீங்க ஆயிரம் பேச்சி வேறே பேசறீங்க.

த. வைர: (நகைத்துக்கொண்டு) என்னடா வேலாண்டி ஒரேயடியாய் அளந்து தள்ளுகிறாய் படியும், மரக்காலுமில்லாமல். நாங்கள் சில்லறையாய்க் கொடுக்கிறதனாலே யாருக்கு நட்டமென்று உனக்குத் தெரியுமா? உங்களுக்கு படி கொடுப்பதற்கென்றே தனியாய் ஒரு கணக்குப்பிள்ளை வேண்டி யிருக்கின்றதே. மாதத்திலே ஆயிரம் தடவை களஞ்சியத்தைத் திறப்பதும், உங்கள் எல்லோருக்கும் அளந்து போடுவதும், பிறகு மூடுவதும் எங்களுக்கு எவ்வளவு சிரமம் தெரியுமா? இதெல்லாம் தெரியாமல் பேசுகின்றாயே—கழுதை! உங்களுக்கெல்லாம் நல்லது எங்கேயடா தெரியும்!

வேலா: எதுக்குங்க ஒங்களுக்கு அவ்வளவு கயிட்டம். மாதத்துக்கு ஒரே வாட்டியா அளந்து குடுத்துட்டா நாங்க வாங்கிக்கிட்டு போறோம். ஒங்களுக்கு வேலையும் கொறையுது.

த. வைர: எல்லாம் உங்கள் நன்மையை உத்தேசித்துத் தானடா. உங்களிடம் மொத்தமாய் (ஒரு மாதத்துக்கு உள்ளதையும் கொடுத்து விட்டால் நீங்கள் கணக்கு வழக்கு இல்லாமல் ஒரு படிக்கு இரண்டு படிகளாய்ப் போட்டுக் கொதிக்கவைத்து

தின்று தீர்த்து விடுவீர்கள். மாதம் முடிவதற்குள் கொடுத்த படியெல்லாம் தீர்ந்து விட்டால், பிறகு நீங்கள்தானே கஷ்டப் படவேண்டும். எங்களிடமே உங்கள் படியை வைத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்தால் நீங்கள் சிரமப்பட வேண்டியிராதல்லவா?

வேலா: (தன்னையறியாமல் ஏளன நகை நகைக்கின்றான்) என்ன இருந்தாலும், ஒங்களுக்கு இவ்வளவு தூரம் ஏழைங்க மேலே எரக்கம் இருக்குதுங்களே; அதுக்காக ஒங்களை மெச்சணுங்க.

த. வைர: நீ மெச்சுக் கிழித்தாய்! போ! நேரமாகிறது போ! உன் வேலையைப் போய்ப்பார். எனக்கும் இன்று நிறைய வேலை இருக்கின்றது. (திரும்பவும் அறைக்குள் பிரவேசிக்க எத்தனிக்கின்றார்)

வேலா: என்னுங்க! அப்பொறம் நான் கேட்டது! ஒண்ணும் சொல்லாமே போறீங்களே!

த. வைர: நான் சொல்வதற்கு என்ன இருக்கின்றது. எல்லாம் சின்ன எஜமானிடம் போய்க் கேட்டு வாங்கிக்கொள். பண்ணை விஷயமெல்லாம் எனக்கொன்றும் இப்போது தெரியாது. (வேலாண்டியின் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே நுழைந்து விடுகிறார்.)

வேலா: (தனிமையில், வெளியில் நின்ற வண்ணம்) இந்தப் பணக்காரப் பண்ணையார்களைப் போலே பசப்பு வார்த்தை பேசறதுக்கும் தட்டிக் கழிக்கறதுக்கும் வேறே யாராலேயும முடியாது. சமயத்துக்கு ஏத்த வேஷம், சமயத்துக்கு ஏத்த பேச்சு. பகட்டிப் பேசுவாங்க, பசிக்குதுண்ணு சொன்னா கையினாலே தாராளமா வாரிக் குடுப்பாங்க. இல்லேன்னு சொல்லாமே தெள்ளு மணலே. அவங்களுக்கு வேண்டியதெல்லாம் வேலே தான். கூலிக்காரனும், ஏழைங்களும் எக்கேடு கெட்டால்தான் அவங்களுக்கென்ன? இன்னம் இந்தக் கூலிக்காரங்க எல்லாம் சம்பளமே வேண்டாமின்னு சொல்லிப்புட்டு சும்மா வேலை செஞ்சா அவங்களுக்கு எவ்வளவு சந்தோசமாயிருக்கும் தெரியுமா? (போகிறான்)

காட்சி 4

காலம்: இரவு.
இடம்: குப்பானூரிலிருந்து கூப்பிடு தொலைக்கு அப்பால் உள்ள ஒற்றையடிப்பாதை.
உறுப்பினர்: பொன்னன், மதுரமுத்து.

[மதுரமுத்து தனிமையில் நின்று கொண்டிருக்கின்றான். அவன் கையில் ஒரு தடி இருக்கின்றது.]

மதுர: (தூரத்தில் ஆள் வருவதைக் கண்டு தனக்குள்) அதோ, அந்தப் பயல் வர்ரான் போலே இருக்குது. நாம்ப இந்தச் செடி மறைவிலே மறைஞ்சுக்கிடலாம்.

[மதுரமுத்து நின்றுகொண்டிருந்த இடத்தைக் கடந்து இரண்டடி அப்பால் செல்கிறான் பொன்னன், மதுரமுத்து அவனுக்குப் பின்னால் சென்று தன் கைத்தடியால் அவன் தலையில் ஓங்கியடிக்கின்றான்.]

பொன்: ஐயோ! செத்தேன். ஆள் மாறாட்டமா என்னை அடிக்காதீங்க! நான் குப்பானூர் பொன்னன். (வேகமாய் நகர்ந்து திரும்பவும் அடி தன்மேல் படாமல் அடித்தவன் பக்கமாய்த் திரும்பி நின்று கொள்கிறான்.)

மதுர: (திரும்பவும் தடியை ஓங்கிக்கொண்டு) ஆள் மாறாட்டமாவது ஒண்ணாவது! நீயேதாண்டா நான் எதிர்பார்த்த ஆள்.

பொன்: (பயந்துகொண்டு) ஐயோ, நானே தானா! நான அப்படி ஒண்ணும் தப்புத் தண்டா செய்யலீங்களே! என்னை எதுக்குங்க வழி மறிச்சு அடிக்கறீங்க?

மதுர: தப்பு தண்டா செய்யலியா? பின்னே யாருடா செய்தது? ஏண்டா, அற்பக் கழுதே! இன்னிக்கு சாயந்திரம் நீ கடைத் தெருவிலே என்னடா செய்தே? மருவாதியா அதைச் சொல்லு! தப்பா இல்லியா?

பொன்: (வியப்புறுகின்றான்) கடைத்தெருவிலே நான் ஒண்ணுமே செய்யலீங்களே! நான் போனதும் என் வேலையைக் கவனிச்சிட்டு தேமேனு நடந்து வர்ரேனுங்களே!

மதுர: அயோக்கியப்பயலே நீ ஒண்ணுமே செய்யலேயாடா! மருவாதியாச் சொல்லு. இன்னிக்கு உன் உயிர் இரவல் உயிர்! நெனவு வெச்சுக்கோ! ஏண்டா நாயே, நீ டீ கடையிலே டீ வாங்கிக் குடிச்சியா இல்லையாடா?......உனக்கு எத்தனை ஆணவம்! குடியானவர்கள் குடிக்கிற பாத்திரத்திலே நீ வாய் வெச்சு கவ்விக் குடிக்கப் போச்சா! ஹூம்......உன்னே என்ன செய்யறேன் பாரு.

[மதுரமுத்து திரும்பவும் தடியை ஓங்கிக்கொண்டு நெருங்குகின்றான். பொன்னன் லாவகமாய் ஒரு பக்கம் ஒதுங்கிக்கொள்கிறான்]

பொன்: சாமி, நான் செய்தது மகா பெரிய பிசகு. அதுக்காக நீங்க என்னே என்ன செய்தாலும் தகும்—இருந்தாலும் இந்தவாட்டி மட்டும் ஒரு மன்னிப்புக் குடுங்கோ. இனிமேல் நான் அந்த மாதிரி ஒருநாளும் செய்யவேமாட்டேன். (கைகளைக் குவித்து மிகப் பணிவோடு வணங்குகின்றான்.)

மதுர: (மிக்க சினத்தோடு தன் தடியைச் சுழற்றிக் கொண்டு) மன்னிப்பா கேக்கறே மன்னிப்பு! இன்னிக்கு இதுக்கு ஒனக்கு மன்னிப்பு குடுத்தா நாளைக்கு நீ என்ன தாண்டா செய்ய மாட்டே! அயோக்கிய நாயே! எவண்டா ஒனக்கு இந்த மாதிரி சொல்லிக் குடுத்தவன்? திருட்டுக் கழுதே! இன்னிக்கு ஒன்னே நான் இந்த இடத்திலேயே கொன்னு புதைக் காட்டா நான என்னுத்துக்கு இருக்கறேன்.

[மதுரமுத்து அருகில் நெருங்க நெருங்கப் பொன்னன் இப்பக்கமும், அப்பக்கமுமாய் ஒதுங்கிக் கொண்டே மதுரமுத்துவுக்குப் பின்னால் செல்கின்றான். தக்க சமயத்தில் திடீரென்று பாய்ந்து அவன் கையில் இருந்த தடியைப் பிடுங்கிக் கொள்கிறான்.]

மதுர: ஓகோ! இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கிறீயா! செய்வேடா! செய்வே! இல்லாட்டா அவ்வளவு துணிச்சலாப் போய் டீ கடையிலே டீ வாங்கிக் குடிப்பீயா. நன்றி கெட்ட கழுதே! (தன் இடையிற் செருகி இருந்த ஈட்டியை எடுத்துக் கொள்கிறான்) அடே அந்தத் தடியை வெச்சுக் கிட்டு நீ என்னடா செய்வே? எங்கே வா பார்க்கலாம். (லாவகமாய்ப் பொன்னனை நெருங்க முயல்கிறான்.)

பொன்: (ஒரு தடவை கனைத்துக் கொண்டு) இந்தாப்பா மருதமுத்து, இவ்வளவு நேரமா நான் கெடக்குது, கெடக்குதுன்னுப் பொறுத்துப் பாத்துட்டேன். இனிமேல் எனக்குக் கோபம் வந்துடும். மருவாதியாய் இத்தோடே போய்விடு; நான் தனியே இருக்கிறேனின்னு நீ ஒரேயடியாய்த் துள்ளாதே! நீ இல்லே, இன்னம் உன் மாதிரி பத்துப் பேர் வந்தாலும் என்னாலே தாக்காட்ட முடியும். சமத்து இருக்கு, நெனப்பு வெச்சுக்கோ!

மதுர: (ஏளனமாய்ச் சிரித்துக் கொண்டு) அடே சபாஷ்! பயலுக்கு இவ்வளவு திமிர் இருக்குதா! என்னவோ பாவம், ரெண்டு அடி அடிச்சி தொரத்தி விடலாமின்னு தான் நானும் இவ்வளவு நேரமா சும்மா நின்னுக்கிட்டு இருந்தேன். இவ்வளவு தூரம் வீரப்பு வேறே எப்போ பேச ஆரம்பிச்சியோ, இனி உன்னை விடறதாவது. உன் உயிர் இந்த எடத்திலே போகணுமின்னு இருக்கறப்போ உனக்கு வேறே புத்தி தான் வருமா?

[கையிலிருந்த ஈட்டியை ஓங்கிக் கொண்டு பொன்னன் நிற்கும் இடத்தை நோக்கி மிக வேகமாய்த் தாவிக் குதிக்கிறான் மதுரமுத்து. பொன்னன் மதுரமுத்துவின் ஈட்டி பிடித்த கையில் தடியால் ஓங்கியடிக்கிறான். ஈட்டி கையிலிருந்து விடுபட்டு அப்பால் போய் விழுகின்றது.]

மதுர: (கையை உதறிக் கொண்டு) ஐயையோ! வலிக்குதே! ஏய் பொன்னு! நீ என்ன பெரிய சமத்தனின்னு நெனைப்பாடா! இன்னம் கொஞ்ச நேரத்திலே பாரு இங்கே எத்தனை பேர் வர்ராங்கன்னு மருவாதியாய் நீ இப்போவே ஓடிப் போயிடு. இல்லே நான் சொன்னது தப்பாது!

பொன்: சொன்னதாவது இன்னதானது! எத்தனை பேர் வந்தாலும் வரட்டும். என் உயிர் போனால் அனாவசியம். நான் இன்னிக்கு ரெண்டிலே ஒண்ணு பாத்துப் புட்டுத்தான் போகப் போறேன்.

[பொன்னன் மதுரமுத்துவை நெருங்கி அவனது இரு கரங்களையும் பற்றி இழுக்க முயல்கிறான். மதுரமுத்து அவனைத் திமிறிக் கொண்டு, அடிபடாத கையால் பொன்னன் முகத்தில் ஓங்கியறைய முயல்கிறான். இருவரும் மல்லாடிக் கொண்டு உருள்கின்றனர். முடிவில் பொன்னன் மதுரமுத்துவின் இருகரங்களையும் பிணைத்து, அவனைப் பக்கத்திலிருக்கும் மரத்தோடு சேர்த்துக் கட்டி விடுகிறான்.]

பொன்: (மதுரமுத்துவை நோக்கி) ஏ, சாதிப் பித்துப் பிடித்த பிசாசே! மண்டைக் கர்வம் பிடித்த முண்டமே! தாழ்ந்த சாதியானின்னா அறிவு சொரணை இல்லாதவன், சொன்னதையெல்லாம் கேட்டுக்கிறவனின்னு எண்ணிக் கிட்டியா? எங்களுக்கும் உங்களைப் போலே மானம் இருக்குது; மதி யிருக்குது; எதுத்து வர்ரவங்களை நையப்புடைக்க சமத்து இருக்குது. இதையெல்லாம் இனி மேலாயாவது தெரிஞ்சுக்கோ! எனக்குத் தெரியும் உன்னை ஏவிவிட்ட பெரிய மனுசன் யாருன்னு. உனக்கும் சொல்றேன். உன் மூலமா அந்த வேசக்காரப் பெரிய மனுசனுக்கும் சொல்றேன். எங்களை எல்லாம் ஏய்ச்ச காலம் அந்தக் காலம். இப்போ அது செல்லாது. மேல் சாதிக்காரங்களைத் தொட்டுட்டா கீழ் சாதிக்காரங்களுக்கு—பாவமின்னு ஏட்டிலே கூட எழுதி வெச்சிருக்கானே அவன் வந்தால் கூட இனி எங்களை ஏமாத்த முடியாது. நாங்கள் உங்களை விட எந்த வகையிலேயும் கொறைஞ்சவங்கள் இல்லே. நீங்கள் இல்லாமலே நாங்கள் வாழ முடியும். ஆனா நாங்கள் இல்லாமே உன் மாதிரி ஊர்சுத்திங்களும், ஒழைக்காமே தின்னிங்களும் காலந்தள்ளவே முடியாது. இனிமேலானது திருந்திக்கங்க. இல்லாட்டா உங்கள் தலையிலே தான் மண் விழும். துப்புக் கெட்ட கழுதைகளே! அயோக்கியத்தனத்துக்கு அச்சாரம் வாங்கற அற்ப நாய்களே!—தெரியுதா மருதமுத்து! நீ செய்ய வந்த மோசக்காரத் தனத்துக்கு நீ நல்ல தண்டனை அடையணும். நீ இந்த ராத்திரி பூராவும் பனியிலே நனைஞ்சு, குளுரிலே நடுங்கி அவதிப் பட்டாதான் புத்திவரும். ஆனதினாலே நீ இந்தமரத்தடியிலேயே இன்னிக்கு ராப்பொழுதே கழிக்கலாம். நீயா போகணுமின்னாலும இந்த எடத்தே விட்டு இப்போதைக்குப் போக முடியாது. கெட இங்கேயே! எனக்குக் குளுரெடுக்குது நான் போறேன். (ஊரை நோக்கி நடக்கிறான்)

மதுர: பொன்னு! பொன்னு! அப்பா பொன்னு! சாமி! சாமி! ஒன்னே கெஞ்சறேன்! என்னே மன்னிச்சிப்புடு. நான் செஞ்சது முழுக்க முழுக்கத் தப்பு. என்னாலே இந்த ராத்திரி பூராவும் இங்கே கெடக்க முடியாது. நீ அவுத்துவிடாமே போயிட்டேயின்னா விடியறதுக்குள்ளே நான் செத்து வெறச்சுப் போயிடுவேன்.

[பொன்னன் கவனியாமல் போய்விடுகிறான்.]

மதுர: (தனக்குள்) அந்தப் பாவிப்பயல் பேச்சைக் கேட்டு வகை தெரியாமே வந்து மாட்டிக் கிட்டேன்—இங்கே. என்ன இருந்தாலும் யோசிச்சுப் பாத்தா பொன்னன் சொஞ்சதும், அவன் சொன்னதும் ஒண்ணுமே பிசகு இல்லே, அவனும் நம்பளைப் போலே மனுசன் தானே! அவனுக்கு எதிலே கொறைச்சு! நாம்ப நெனைக்குறது தான் அநியாயம்! பட வேண்டியது தான்! தென்னையை விதைத்தவன் தென்னையை அறுக்க வேண்டியது தானே! (குளிர் தாங்க முடியாமல் அப்படியே சோர்ந்து விழுகிறான்.)

மணமகன்: இராமச்சந்திரன் ☆ மணமகள்: ருக்மணி

நமது 'ஆனந்தபோதினி', 'பிரசண்ட விகடன்', 'சித்ர நுப்தா' (தெலுங்கு) ஆகிய பத்திரிகைகளின் உரிமையாளரான நாகவேடு-நா. முனிசாமி முதலியார் அவர்களுடைய கடைசி குமாரன் திரு. நா. மு. இராமச்சந்திரன் பி.ஏ., பிரபல மருந்து வியாபாரியான சி. ஏ. துரைசாமி முதலியாருடைய இளைய மகள் திருமதி ருக்மணி பி.ஏ.,யை 21-6-'53-ந் தேதி யன்று சென்னை 'ஆரணி ஹவுஸ்' என்னும் மாளிகையில் நடைபெற்ற திருமண விழாவில் தனது இன்னுயிர் துணைவியாக ஏற்றார். உறவினரும் நகரப் பிரமுகர்களும் ஏராளமாக வந்திருந்து மண மக்களை வாழ்த்தினர். தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நண்பர்களிடமிருந்தும் பல பத்திரிகாசிரியர்களிடமிருந்தும் மணமக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் குவிந்தன. மணமகன் வீட்டு வரவேற்பின்போது, பிரபல சங்கீத வித்வான் ஜி. என். பாலசுப்பிரமணியம் தக்க பக்க வாத்தியங்களுடன் பாடி இசை விருந்து அளித்தார்.

ஊடலும் கூடலும்

இறையனார்

☆

ஊடலினிச் செய்வதனால் அழகே! என்றன்
உள்ளத்தைக் கொந்துவது அன்றி வேறு
பூடளவு பயனேனும் உண்டோ? அன்பே!
புகன்றபடி ஓவியங்கள் ஐந்தும் நாளை
மூடுமிருள் வருவதற்குள் வரைந்து முற்றும்
முடித்திடுவேன்! கிடைக்கின்ற பொருளை வாங்கி
நாடுகின்ற வழியேநீ செலவ ழிப்பாய்;
நங்காய்! நீ இன்றுமட்டும் இன்பந் தாடி! 1

பகல்முழுதும் ஓவியங்கள் பலவ ரைந்து
பாடுபட்டு உடலலுத்து இருக்கி ன்றேன்நான்
அகலாதே! இத்தருணம் அன்னம்! என்றன்
அயர்வுதனை அகற்றடிநீ இதைம றுத்துப்
புகலாதே! பூவாய்! நீ இதழின் தேனைப்
பூவண்டு நானுண்ண உதவ வேண்டும்!
புகலாக உன்னிடமென் நெஞ்சை வைத்தேன்
பூவம்பு எனைத்தாக்க விட்டி டாதே! 2

ஏகுதடி! கூட்டிற்குப் பேடைத் தேடி
எழிலன்றிற் பறவையதோ போவ தைப்பார்!
சாகுதடி என்னுயிரும் உடலில் தங்கச்
சலிப்புற்று உணவையெல்லாம் வெறுத்து நெஞ்சம்
வேகுதடி பெண்ணரசே! விழிகள் ஏங்கி
வெறித்தன்றோ சோலைதன்னைப் பார்த்துப் பார்த்து
நோகுதடி நொய்யிடையே! பழமை நூலை
நூறுதரம் படித்தாலும் அறிவுண்டாமோ? 3

சோலையிலே பூத்ததனிப் பூவோ? உன்றன்
சொக்கழகு விரிக்கின்ற நிலாமு கந்தான்!
ஆலையிலே பிழிந்தெடுத்த கன்னல் சாறோ?
ஆயிழையே உன்மொழியின் சுவைதான்? இன்ப
வாலையிலே வடித்தெடுத்த பன்னீ ரோ?உன்
வடிவுடலில் வீசுகின்ற நறும ணந்தான்!
கோலமயில் உன்னிடந்தான் சாயல் கற்றுக்
கொண்டல்கவிப் புகழ்மாலை பெற்ற தோடீ? 4

அன்றொருநாள் மாலையிலே அயர்வு நீங்க
அழகுமலர்ச் சோலைக்கு வந்தேன்; அங்கே
நின்றவுன தழகினிலே மயங்கி என்றன்
நெஞ்சுருகி உனைநெருங்கி வண்டு ஒச்சித்

ஓ

தென்றலிலே அசைந்திட்ட கொடியின் மீது
திகழ்ந்திட்ட மலரொன்றைப் பறித்து உன்றன்
துன்றுநீள் குழலுக்குச் சூட்டிக் கண்ணை
துணைக்கையால் மூடினேன் கண்டு கொண்டாய்! 5

ஏன்என்னைத் தொட்டாய்நீ? என்று என்னை
ஏசினையோ? ஏந்திழையே! இல்லை! இல்லை!
தேன்கண்ட வண்டேபோல் மகிழ்ந்து என்னைத்
தின்னென்றாய் இதழமுதை! உண்டேன்! இன்ப
வான்கண்டேன்! கடல்கண்டேன்! சோலை கண்டேன்!
வள்ளை எழில் முல்லைஅங் குவளை கண்டேன்!
மான் கண்டேன்! மழைமுகிலும் மூங்கில் தோளும்
மருங்கினிலே சிறுகுன்றுங் கண்டேன் கண்ணே! 6

தமிழ்சுவடித் தமிழுள்ளம் இவ்வி ரண்டும்
தகுமுறையில் அமைந்திட்டால், கடும்ப சிக்கு
அமுதொன்று அமைந்திட்டால், அன்றி லோடு
அதன்பேரும் சேர்ந்தால்,நல் கன்னற் சாற்றில்
சமமாகச் செந்தேனும் கலந்து விட்டால்,
சலிப்புக்கு இடமேது? பூவாய்! நாட்டின்
இமைபோன்ற நாட்டாட்சி எய்துந் தொண்டில்
ஏற்படுமோ மனச்சோர்வு? இல்லை! இல்லை! 7

கலைவளர்க்கக் காவலனும் எனைஅ ழைத்தான்
கடமைதனை முடிப்பதற்கு நானும் வந்தேன்
அலைவளர்க்கும் கடல்போல எனது உள்ளம்
அம்புலியுன் தோற்றத்தால் எழுந்து துள்ளி
மலைவளர்க்கும் மாமரத்தின் தளிராம் உன்றன்
மலர்மேனி தனைமருவத் தூண்டிற் றேடி!
சிலைவளர்க்கும் அம்பைப்போல் உனது கண்கள்
சிந்தைதனைப் பிளந்ததடி! அன்பே! நங்காய்! 8

பொன்னைத்தான் மணியைத்தான் அள்ளித் தந்து
புகழைத்தான் அடையத்தான் முயற்சிப் பார்கள்
உன்னைத்தான் தெளியத்தான் கேட்கி ன்றேன் நான்!
உப்புக்கும் அதனாலே பயனுண்டாமோ?
தன்னைத்தான் உலகிற்குக் காட்டிக் காட்டித்
தம்பட்டம் அடிப்பதன்றி வேறு ஆமோ?
என்னைத்தான் கலைக்காகக் கொடுத்தே னென்றால்
ஏனென்னை எள்ளுகின்றார் உலகத் தாரே? 9

காதலெனில் இலக்கியத்தில் சுவைகள் சொட்டக்
கதையொன்று நூறாக எழுதி வைத்துச்
சாதலதன் முடிவாக அமைத்துப் பின்னர்
சஞ்சலத்தை விலைக்கன்றோ வாங்கு கின்றார்?
'மேதினியில் காதலினை மிஞ்ச விட்டு
மேல்நிலையைச் சுட்டிவிட்டான் இறைவன் முன்னாள்

ஆதலினால் காதல்செய் வீ'ரென் றுரைத்தான்
அயல்நாட்டில் ஓர்புலவன் கேளாய் பெண்ணே! 10

ஓவியத்தில் உனதழகைத் தீட்டித் தீட்டி
உலகிற்குத் தந்தேனே யன்றி வேறு
காவியத்தால் சாத்திரத்தால் மக்கள் தம்மைக்
கலங்கவைத்துக் காசுபணம் பறித்தே னான்?
ஆவியொத்து நாமிருவர் கலந்து இன்ப
ஆழியிலே 'கூடலெ'ன்னும் ஓட மேறி
மேவிவரும் போதினிலே புயலே போல
மெல்லியலே ஏன்இன்று ஊடிக் கொண்டாய்? 11

நாதமடி நீயென்றன் வாழ்வு யாழில்!
நறுந்தேன்நீ என்இன்ப மலரில்! நல்ல
வேதமடி வள்ளுவனார் பெற்ற நீயும்!
விரும்பியதைப் படிக்கின்ற தமிழன் நானே!
பேதமடி இசைவேறு மொழிவே றென்றால்
பித்தர்களின் கூற்றன்றோ? பெண்ணே இன்பச்
சாதமடி செந்தமிழ்நூல் தமிழப் பண்பு
தவிர்க்காத உப்பன்றோ தமிழ ணங்கே! 12

மலையென்றால் அஃதொன்றும் மலைப்ப தில்லை
மறவன்நான் தமிழன்ஏன் மலைக்க வேண்டும்?
சிலையென்றால் அசையாது நிற்ப தில்லை
சீறுபல அம்புகளைச் செலுத்து மன்றோ?
குலையென்றால் அஃதொன்றுங் குலைப்ப தில்லை
கொழுங்கனியின் கொத்தன்றோ? அன்பே! வாழ்வின்
கலையென்றால் நானெதையும் கலைப்ப தில்லை
கருத்துக்கு மகிழ்வன்றோ கூட்டுகி ன்றேன்! 13

குன்றென்றால் என்தோளைக் குன்ற மாட்டேன்!
கொழுங்களிறு என்றழைத்தால் இன்பச் சோலை
சென்றங்கே பெண்மலரை அழிக்க மாட்டேன்!
சிறப்பாக 'செந்தமிழன்! என்ற ழைத்தால்
நன்றென்று கூறுது என்தாய் மொழியில்
நச்சேறவோ என்நெஞ்சம் ஒப்பும் யாரும்
ஒன்றென்று கூறுதற்கோ தயங்கும் மக்கள்
உரிமைதனைக் காப்பதுஎன் கடமை அன்றோ? 14

என்றென்றும் என்தமிழர் தலைநி மிர்ந்து
ஏறுநடை யுடையவராய் வாழ்வில் யாரும்
ஒன்றென்று, கல்விபெற அனைவ ருக்கும்
உரிமையுண்டு; ஒருவர்(உ)ண்டு ஒருவர் சாதல்
நன்றன்று; நச்சரவாம் சாதி பேதம்
நாட்டினிலே இல்லையென்று காதாற் கேட்கும்
அன்றென்றன் விடுதலைநாள் உறுதி என்றன்
ஆருயிரே! என்னுடனே ஊடல் வேண்டாம்! 15

கலைக்காக வாழ்கின்றோம் என்று கூறிக்
    கண்மூடிப் பழமைவழிக் காட்டித் தீயர்
உலைக்காக விறகாக்கி, ஊன் பெருக்க
    ஊதியமாய் சிலகாசு பெற்றுச் சொற்ப
விலைக்காக தன்மானம் விற்கும் 'பேதை
    விற்பன்னர்' போலென்றும் வாழ மாட்டேன்!
அலைக்காதே பெண்ணரசே! எனது வாழ்வின்
    அடிப்படையே பகுத்தறிவாம் அறிவாய் நீயே! 16

இத்தனையும் சொன்னேன்கேள் என் இழையே!
    எதற்காக என்பாயேல் எந்தன் நாட்டார்
புத்தனைஎம் வள்ளுவனைக் கண்டும் பண்டைப்
    பொற்கழக இலக்கியங்கள் பெற்றும், சற்றும்
புத்திக்(கு) ஒவ்வாத புராணக் குப்பை
    'பொக்கிஷமெ'ன் றெண்ணியதைப் போற்று வார்கள்
அத்தமிழர் மரபன்றோ? நாமும் இன்ப
    ஆக்கத்தில் ஊடுதலும் கெடுதி யன்றோ? 17

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(3-ம் பதிப்பு)

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பூசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை

கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

சித்தூர் யாருக்கு?

'அமரன்'

★

இன்றைய நிலையில் சித்தூர் யாருக்கு என்ற கேள்வி மிகவும் முக்கியமான தாகும். ஏனென்றால், சித்தூர் மாவட்டத்தில் சில பகுதிகளில் தனித்தெலுங்கே பெரும்பாலும் வழங்குகிறது. பல பகுதிகளில் பெரும்பான்மை தமிழும் சிறுபான்மை தெலுங்கும் ஆகக் கலந்து வழங்குகின்றன.

நாம் கூறுகிறோம்—நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டு மேதை தொல்காப்பியரின் நூலுக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார்,

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்."

என்று கூறிச் சென்றாரென்று.

மேடையிலே இசை பாடும் இசைப்புலவன் மாதக்கணக்கில் ஒரே பல்லவியைப் பாடி "பல்லவி பட்டாபிராம சாஸ்திரி" என்று பட்டம் பெற்றதாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிப் பட்டம் பெற்றவர்கள் கூட அனுபல்லவி சரணங்களைப் பாடினால் தான் தாம் இசையில் வல்லவர்கள் என்பதைச் சாதித்தவரானவர்கள்.

ஆனால், நாம் பாடும் பல்லவி மாதக்கணக்கில் பாடப்பட்டு வருவதல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பாடப்பட்டு வருவதாகும். மற்றைய அனுபல்லவி—சரணங்களை நாம் பாடத் தேவை இல்லை. மற்றவைகளில் உள்ள மாபெருங் கருத்துக்கள் அத்தனையும் இந்த ஒரு பல்லவியிலேயே மண்டிக் கிடக்கின்றன.

சித்தூர் யாருக்கு? சிரிப்பை விளைவிக்கிறது இந்தக் கேள்வி. தெற்கு முனை முதல் திருவேங்கடம் வரை விரிந்து பரந்து கிடந்த தமிழகம் தமிழனின் மதிகேட்டால் குறுகிவிட்டது. அது மட்டுமல்ல; திருவேங்கடத்தைச் சுற்றி சுமார் நாற்பது சதுர மைல்கள் வரையில் தெலுங்குக் காய்ச்சல் வேறு அடிக்கிறது. தெலுங்குக் காய்ச்சல் என்றால் பலருக்கு வியப்பாகத் தோன்றலாம்.

சித்தூர் ஜில்லா மலேரியாப் பிரதேசம் என்று சாதாரணமாகச் சொல்வதுண்டு. மலேரியாவிற்கு சாதிப் பிரிவினை, நாட்டுப் பிரிவினை, மொழிப்பிரிவினை என்ற வேறுபாடுகள் இடையாது ஆனால், தெலுங்குக் காய்ச்சலோ தமிழர்களை மட்டில் தாக்குகின்றது.

திருப்பதியைச் சுற்றியுள்ள ஊர்களில் பள்ளியில் பயிலும் மாணவர்கள்—தமிழ்க் குழந்தைகள் படாத பாடு படுகின்றனர். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் ஆந்திரக் காய்ச்சல் அவர்களை அடியோடு ஒழிக்க முனைந்துள்ளது என்று சொல்ல

லாம். மாணவர்கள் தமிழில் போதிக்க வேண்டுமென்று மன்றாடினால்,' 'நாங்கள் தெலுங்கில் தான் போதிப்போம். இது தெலுங்கு நாடு. உங்களுக்கு விருப்ப மிருந்தால் கேட்டுச் செல்லுங்கள். இல்லையானால் சீட்டை வாங்கிக்கொண்டு போய் விடுங்கள்" என்று கூறுகிறார்கள். இவ்வாறு மொழிவெறி மூர்க்கத் தனமாகப் பரவுகிறது.

பள்ளிகளில் ரேடியோவில் பாடும் பாடல்கள் திருச்சியிலிருந்து வரும் ஒலிபரப்பாக இருந்தால் உடனே ஒரு புரட்சி கிளம்பும் தெலுங்கரிட மிருந்து. "திருச்சி தமிழ்நாட்டைச் சேர்ந்தது; எங்களுக்கு வேண்டாம் திருச்சி நிலையச் செய்திகள்" என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்—செந்தமிழ் நாட்டின் சிகரமான — தமிழர்களின் முல்லைநிலக் கடவுளாகிய திருமாலும், குறிஞ்சி நிலக்கடவுளாகிய குமரவேளும் உறையும் புனிதமான சித்தூர் மாவட்டத் தெலுங்கர்கள்; ஆம்—இவர்கள் தெலுங்கர்களே—ஆந்திரரல்லர். இத்தகைய கொடுமை நிறைந்த குறுகிய மனப்பான்மை எந்தத் தன்மானத் தமிழனிடத்திலாவது காண முடியுமா?

தமிழன் கலையை மதிப்பவன்; வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கி வள்ளலெனும் புகழ் படைத்தவன். அதனால் தான் சமீபத்தில் காரைக்குடியில் நடந்த கம்பன் விழாவில் சித்தூர்த் தெலுங்குக் கவியாகிய பூதலபட்டு ஸ்ரீராமுலு ரெட்டியாரை அழைத்து வந்து பொன்னாடை போர்த்திப் புகழ்வித்தான் இந்த மனப்பான்மை யெங்கே? திருச்சி நிலையச் செய்திகளையே கேட்கக் கூடாதென்னும் தெலுங்கரின் குறுகிய மனப்பான்மை யெங்கே?

இனி, சித்தூர் யாருக்கு என்ற வினாவிற்குத் தக்க விடை காண்போம். ஒருவனுக்குச் சொந்தமானதொரு நிலம் அவன் சற்று சோம்பேறி. அண்டை வீட்டுக்காரன் அவனுடைய நிலத்தை உழுது பயிரிட்டு வந்தான். சோம்பேறி சோம்பேறியாகவே இல்லை. சுறுசுறுப் படைந்தான். உணர்ச்சி யுண்டாகிறது. "நமது நிலமல்லவா? பக்கத்து வீட்டுக்காரன் பறித்துக்கொண்டது தகுதியா? நாம் ஏமாற்ற மடைந்தோமே" என்றெண்ணுகிறான். மன்றாடுகின்றான் தன் நிலத்தை விடச் சொல்லி. ஆனால் அந்த அண்டை வீட்டுக்காரன் அதிகாரம் செய்கிறான்; அக்கிரமம் செய்கிறான்; அநீதியை வளர்க்கிறான். அதே நிலையில்தான் தமிழகத்தின் தலைமை நிலையமான சித்தூர் தற்போது உள்ளது.

சித்தூர்த் தெலுங்கர்கள் ஒரு பொருளற்ற வாதத்தைக் கிளப்புகிறார்கள். 'கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் சந்திரகிரி, காளத்தி முதலியன விஜயநகர ஆட்சியில் இருந்தன; அதற்கு ஆதாரமான கல்வெட்டுக்களும் உள்ளன' என்பதே அவர்களுடைய வாதம். இது நகைப்பை விளைவிப்பதாகும். தமிழகத்தின் வரலாற்றைச் சரிவர உணராமையே அவர்கள் இவ்வாறு தாறுமாறாகப் பேசக் காரணமாகும்.

"மாவண்புல்லி விழவுடை விழுச்சீர் வேங்கடம்."

என்று அகநானூறு கூறுகின்றது—வேங்கடம் புல்லி யென்ற தமிழரசனுக்கு உரிமை யுடைத்தாய் இருந்தது என்று. கி.பி. 16 ஆம் நூற்றாண் டெங்கே? கி. பி. முதல் நூற்றாண்டெங்கே? அதற்கும் மேலாக நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருப்பதி தமிழகத்தின் வடக்கெல்லையாக இருந்தது என்பதை மறுக்க முடியுமா?

மேலும் நாம் கிளப்பிய கேள்விக்கு விடையாகச் சமீபத்தில் திருத்தணியில் நடந்த பஞ்சாயத்து போர்டு தேர்தல் அமைந்துள்ளது.

திருத்தணி நகரப் பஞ்சாயத்து உறுப்பினர் பதின்மரில் ஒன்பதின்மர் தமிழர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். ஒருவரே தெலுங்கர்—ஆந்திரரல்லர். தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திரு. T. சரவணய்யருங் கூடத் தமிழரே. இதை விட வேறு சான்று வேண்டுமா சித்தூர் தமிழருக்கு என்பதற்கு?

தெலுங்கர் தங்களை ஆந்திரரென்று கூறிக் கொள்வதோடமையாமல், வழிதுறை தெரியாமல் ஒரு சிலர் பதவி வேட்டைக்காகக் கிளப்பிவிட்ட மொழி வெறியை ஆதாரமாகக் கொண்டு, நேர்மையற்ற முறையில் பல்வேறு இழிவான செயல்களையும் செய்ய முற்படுகின்றனர். அவர்கள் கிளப்பிய மொழி வெறி—பாவம், ஒரு பொட்டி ஸ்ரீராமுலுவை—சென்னையிற் பிறந்து—சென்னையில் வளர்ந்து—சென்னைத் தண்ணீர் குடித்து வாழ்ந்த செந்தமிழரைப் பலி கொண்டது.

நாம் வாழ்வது அகிம்சை அரசியலில். இந்த அரசியலில், ஆவேசத்தாலோ—வெறியினாலோ அக்கிரமத்தாலோ ஆட்சி செலுத்தவே முடியாது. ஆந்திர ராஜ்யம் தோன்று முன்னே ஒருவரைப் பலி கொண்டதென்றால் இன்னும் ஆர அமர அது உருவாகும்போது எத்தனைபேரைப் பலி கொள்ளுமோ யார் கண்டார்கள்? இது அகிம்சைத் தத்துவத்திற்கே முற்றும் புறம்பல்லவா? இப்படிப்பட்ட அடிப்படையில் ஒரு ஆட்சி தொடங்கினால் அது எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

"பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள்."

என்கிறார் அமரகவி பாரதியார். அதுபோல் ஆந்திரர் ஆட்சியிலே அதர்மந்தான் தலைசிறந்து நிற்கும். ஒரு தெலுங்குத் தோழர் சொல்லுகிறார். "சென்னையில் ஆந்திரருக்குப் பங்கில்லையேல் ஆந்திரவில் காங்கிரஸ் ஆட்சியே இருக்காது" என்று நினைத்த மாத்திரத்தில் நிமிஷத்திற்குத் தொண்ணூற்றொன்பது கட்சிகளை உண்டாக்கிக் கொள்வதும் ஒரு கட்சியிலேயே ஒன்பதினாயிரம் பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டு யார் தலைவராக வருவது என்ற கிளர்ச்சியை மூட்டிவிட்டு தாறுமாறாகப் பேசுவதும் இவர்களின் இயற்கைப்புத்தி. அப்படி இருக்க, அந்த ஆந்திரத் தோழர் இவ்வாறு பயமுறுத்தத் தேவையே இல்லை.

எந்தத் தமிழனாவது சொல்லி இருக்கிறானா?

"சித்தூர் தமிழ் நாட்டோடு சேரவில்லையானால், தமிழர்கள் கொதித் தெழுவோம், புரட்சி செய்வோம். புதுக்கட்சியை உண்டாக்குவோம்" என்று. அவ்வாறு கூறுவது தமிழர் பண்பாட்டுக்கே புறம்பானது—நேர்மையான முறையில் உரிமையைப் பெறுவதுதான் தமிழர் பண்பாடு என்பதை நன்கறிந்தவன் தமிழன்.

தமிழன் உடலில் ஒரு துளி இரத்தம் உள்ள வரையில் சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளை விட்டுக் கொடுக்கவே மாட்டான். எதிர்த்து வந்த யானையைக் கொல்லத் தன் உடலில் தைத்திருந்த அம்பினைப் பிடுங்கி யெறிந்து யானை வீழ்ந்து மடிந்ததைக் கண்டு தன் உடலில் உண்டான வலியையும் சிந்திக்காமல் தோள் கொட்டி யாடியவன் தமிழன். இத் தெலுங்கரின் வெற்று வேட்டுகள் என்ன செய்ய முடியும்?

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்."

என்றார் பாரதியார். சித்தூர் தமிழகத்தோடு சேர வேண்டுமானால்—வீடு வீடாகச் சென்று தமிழகத்தைப்பற்றி—தமிழ்ப் பண்பாட்டைப்பற்றி—எடுத்துக் கூறவேண்டும். அத்தகைய திருப்பணியைத் தற்போது திரு. மங்கலங்கிழார், திரு. K. விநாயகம், பொதட்டூர்ப்பேட்டை திரு. E.S. தியாகராசன் போன்றவர்கள் செய்து வருகின்றனர். அவர்களுடன் தமிழர்களும் ஒத்துழைக்க வேண்டும். இல்லையானால் "ரோம் நகர் பற்றி யெரியும்போது வீணை வாசித்த நீரோ மன்னனிலும் தாழ்ந்தவராய் விடுவோம்."

அன்றொரு நாள் உலகநாடுகள் முழுமைக்கும் தனது விலை மதிக்க முடியாத முத்துக்களையும் மணிகளையும், கலிங்கமென்ற—காரிகையர் மயங்கும் ஆடைகளையும் ஏற்றுமதி செய்து இணையற்ற புகழை யெய்திய தமிழகம் தனது சோர்வினால் எத்தனையோ வேற்று நாட்டினருக்கு விருந்து வைத்து விட்டுக் கொடுத்தது தனது உரிமையை அந்தக் காலம் மலையேறி விட்டது.

வடவேங்கடவன் சக்கரந் தாங்கியுள்ளான் தமிழைக் காக்க. வடவேங்கடவனுக்கு வடகலை நாமம் சாத்துவதா தென்கலை நாமம் சாத்துவதா என்பது பற்றிய சிக்கல் நேர்ந்தபோது "உடையவர்—இராமானுஜர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவர் அணிந்திருந்தது தென்கலை நாமம். எனவே தமிழ் நாட்டைச் சேர்ந்த திருப்பதி அவரால் வழிபடப்பட்ட இடமாகையால் வடவேங்கடனுக்குத் தென்கலை நாமம்தான் சாத்தவேண்டும்' என்று அரசாங்கத்தினர் 1945-ல் தீர்ப்பு கூறி இருக்கின்றனர். இது ஒன்றே வடவேங்கடம் தமிழகத்திற் குரியது என்பதற்குத் தக்க சான்றாகும். தணிகை நாதன் சுடர்வேல் ஏந்தியுள்ளான் தமிழைக் காக்க. தணிகைமலையில் தமிழகத்திற்கே உரிய 32 வகை இசைக்கருவிகள் முழங்குகின்றன. தமிழ்மறையும் கூட ஓதப்படுகிறது. அப்பட்டமான ஆந்திருடைய கோயிலாக இருந்தால் எப்படி தமிழ்மறை ஓதப்படும்?

நமக்கு, மொழி வெறியைத் தனது பிறப்புரிமையாகக் கொண்டு உயிரையே பறிகொடுத்த திருவாளர்—பொட்டி ஸ்ரீராமுலு போன்ற தோழர்கள் தேவையில்லை. மற்றவர் மண்ணாய்ப் போகட்டும். நான் மட்டில் நல்வாழ்வை நடத்துகிறேன் என்று கூறும் குறுகிய மனப்பான்மை யுடையோர் தேவையில்லை. "சென்னை ஆந்திருக் கில்லையானால் தமிழருக்கும் இல்லாமற் போகட்டும்" என்ற எண்ணம் படைத்த ஆந்திரத் தோழர்களைப் போன்ற புல்லுருவிகள் தேவை இல்லை.

வரலாற்றின் அடிப்படையில் சித்தூர் மாவட்டத்தில் உள்ள செந்தமிழ்ப் பகுதிகளைச் செந்தமிழ் நாட்டோடு சேர்ப்பதற்கு ஆவன செய்து வெற்றி காணும் வீர மணிகளே தேவை. நம் தாயகத்தின் தலைமை யிடமான சித்தூரின் தமிழ்ப் பகுதிகள் யாருக்கு? தமிழருக்கன்றி வேறு எவருக்குச் சொந்தமாக முடியும்?

வள்ளுவரும் வாய்மையும்

உ. மீனாட்சிசுந்தரம் B. A.,

★

"சட்டத்திற்காக மனிதன் அல்ல; மனிதனுக்காகவே எல்லா சட்டங்களும்"—என்பது அறிஞர் கோட்பாடு. அதுபோன்றே ஒழுக்கத்திறகாக மனிதன் அன்று; மனிதனுக்காகவே ஒழுக்கம். ஒழுக்கத்தில் தலை சிறந்து விளங்குவது உண்மை பேசும் உயர்வு. ஆயினும் உலக தீர்க்கதரிசிகளில் பலர் தாங்கள் நிறுவிய மதங்களிலே 'உண்மை பேசுதல்' என்பதற்கு மட்டும் மேற்கூறிய விதியை ஒப்புக் கொள்ளவில்லை. 'உண்மைக்காக மனிதனா, அன்றி மனிதனுக்காக உண்மையா?' என்ற கேள்விக்கு 'உண்மைக்காகவே மனிதன்' என ஒரு முடிபாக உரைத்துச் சென்றனர்.

நம் நாட்டு மத நூல்கள் மேற்சொன்ன கருத்தையே ஆதரிக்கின்றன; கடவுள் உண்மை மயம்; ஆதலின் மனிதன் கடவுள் நிலை காண வேண்டுமாயின் உண்மையை அணுவளவேனும் பிறழாது கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அவர்கள் போதனை. ஒரு ஆங்கிலேயர் மகாத்மா காந்தியடிகளிடம் சென்று, "உங்கள் இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக ஒரு பொய் சொல்வீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர், "அவ்வாறு பொய் சொல்லி வரும் சுதந்திரம் எனக்கு வேண்டாம்" என்றார். இத்தகைய உண்மை தவறாத உத்தமர்கள் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. உண்மையின் உயர்வைக் காட்டி யெழுந்த கதைகளும் கவிகளும் நம் நாட்டிலே கணக்கற்றனவாம்.

உண்மை என்பது என்ன? உள்ளது உண்மை. இதை வடமொழியில் 'சத்' என்பர். 'சத்' என்ற பகுதியின் அடியாகவே

சத்தியம் என்ற சொல் பிறந்தது. ஆயினும், உண்மையை மூன்று நிலைகளாகப் பகுத்து விளக்கிய பெருமை நம் இந்திய நாட்டையே சாரும். மனம், வாக்கு, காயம் என்னும் இம் மூன்றிலும் ஒருவன் தூய்மையாக நடக்கவேண்டும் என்று வரையறுத்தனர் நம் சான்றோர். மனத் தூய்மையை 'மானசிக சுத்தி' என்றார்; வாக்குத் தூய்மையை 'வாசிக சுத்தி' என்றார்; உடல் தூய்மையை 'காய சுத்தி' என்றார். இதையே பொதுவாக திரிகரண சுத்தி என்று தொகுத்துக் கூறுவர். ஆயினும் மானசிக சுத்தி, காய சுத்தி, வாசிக சுத்தி என்ற தொடர்களில் இரண்டிரண்டு பதங்கள் காணப்படுகின்றன. அதையும் நீக்கி மேற்கூறிய ஒவ்வொரு தூய்மைக்கும் ஒவ்வொரு சொல்லையே இட்டு வழங்கிய பெருமை நம் தென்தமிழ் நாட்டுச் சான்றோர்க்கே உரியதாகும். மனத் தூய்மையை உண்மை என்றார். உள்+மை= உண்மை; உள்ளத்தில் தூய்மையோடிருத்தல். வாக்குத் தூய்மையை வாய்மை என்றார். வாய்+மை=வாய்மை=வாய்ச்சொல்லில் தூய்மை. உடல் தூய்மையை மெய்ம்மை என்றார் மெய்+மை=மெய்ம்மை; மெய்=உடம்பு அதாவது உடலால் செய்யும் காரியங்கள் மெய்மை=மெய்மையில் தூய்மை. என்ன அற்புதமான வரையறுப்பு; பாருங்கள்!

வாய்மை என்பது யாது? வாயளவில் ஒருவன் உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறாது உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காது உரைப்பதாகும். இதுவே நம் நாட்டு மதநூலார் கருத்து. தனக்கோ, தன் சுற்றம், நண்பு, இனம், நாடு—இவற்றிற்கோ இடையூறு நேரினும் அஞ்சாது கூறவேண்டுவது யாது? உச்சி மீது வானிடிந்து வீழினும் உள்ளங் கலங்காது உரைக்க வேண்டுவது யாது? நஞ்சுணண நேரினும், நாடுவிட்டு நாடுசெல்ல வாய்பினும்; சிலுவையிலேறினும் சித்தம் கலங்காது முழங்க வேண்டுவது யாது? அதுவே சான்றோர்க்கு விளக்காகிய பொய்யா விளக்கு—வாய்மை. இதனையே உலகிலுள்ள அறிஞர் சரியென்பர்.

அறிஞர் மாமணியாகிய வள்ளுவனார் அவர்களுக்கும் ஒரு படி மேல் சென்று மனித சமுதாய வாழ்வின் அடிப்படையில தம் சிந்தனையைச் செலுத்தினார். வாய்மையே வழங்கவேண்டும் என மதநூலார் வரையறுத்தது ஏன்? உண்மைக்கு மாறுபட்ட பொய்மையைப் புகல்வதால் உண்மையை அறிய முடியாது. பல இடைஞ்சல்களும், மனித சமுதாயத்தின் அமைதியான வாழ்வில் பல குழப்பங்களும் விளைகின்றன. ஆகவே உண்மையின் உயர்வை அறுதியிட்டுக் கூறிப் போந்தனர் உலகின் அறிஞர். ஆயினும் உண்மை பேசுவதால் பிறர்க்கோ, சமுதாயத்திற்கோ தீங்கு நேரினும் உண்மை பேசி என்ன பயன்? மனித சமுதாய வாழ்விற்கு நன்மை பயப்பதாலேயே உண்மையை உயர்வென்றார்; அவ்வாறு நன்மை பயவாது தீமை பயக்கும் எனத் தீரத் தெளியக் கண்டும் அதை உண்மை என்ற பெயரால் உறையிட்டு உயர்த்துவதா என்ன?

மனித குலம் அமைதியோடும் இன்ப வாழ்வு வாழவேண்டும்; தீமை நீங்கிய நன்மையில் என்றென்றும் திளைக்க வேண்டும். அதுவே மனித வாழ்வின் குறிக்கோள். அதற்காகவே தொன்று தொட்டு இன்றுவரை நின்று நிலவுகின்ற கோடானுகோடி சட்டங்கள்; திட்டங்கள். ஆயினும் அச் சட்டத்திற்காகவா மனிதன்? அன்று; ஒரு நாளும் அன்று; அத்தகைய கொள்கையால் மனித அறிவின் முன்னேற்றம் தடைப்பட்டு அது பின்னுக்குத் தள்ளப்படுகிறது. அன்றன்றைய சூழ்நிலைக் கேற்ப மனித சமுதாய வாழ்வின் அமைதி பங்கமுறுவண்ணம் சட்டங்களை மாற்றிச் செல்வதே தீர்க்கமாகச் சிந்தித்தறிந்த தெள்ளறிஞர் கருத்து. வள்ளுவரும் அவ்வாறே அறிந்தார். அதை அப்படியே எழுத்து வடிவிலே—காலத்தை ஊடுருவி மனித குல வாழ்வை விளக்கும் மாமணிச் சுடராகக் கவியொன்றை எழுதியமைத்துச் சென்றார்.

> வாய்மை எனப்படுவ(து) யாதுஎனின் யாதொன்றும்
> தீமை யிலாத சொலல்.

"ஆ! யான் பிறனுக்கு ஒரு பெரும் நன்மை செய்யவேண்டும் எனக் கருதுகின்றேன்; மனித சமுதாயத்திற்கு உதவ நினைக்கின்றேன்; ஆயினும் அதற்காகப் பொய்யொன்று புகலலாமா?" என்று நான்மறைகளையும் புரட்டிப் பார்க்கின்ற நல்லறிவாளனுக்குத் தேடிக் கிடைத்த திருவிளக்கு! அறிவின் ஊற்று; அநுபவக் களஞ்சியம்; வாழ்வுக்கு வழிகாட்டும் மரகதச் சுடர்மாமணி!

ஏன்? யாதொன்றும் யார்க்கும் தீமை பயவாதெனின்—அதுவே வாய்மை—என வரையறுத்தார் தமிழ் நாட்டுத் தவப் பெருஞ் சான்றோர். வாய்மை என்பது யாது? யாதொன்றும் தீமை இலாத சொல்வதே வாய்மை—ஆம்; அதுவே வாய்மை! வாய்மை என்றாலே தீமையிலாத சொல்வதுதான்; பொய்ம்மைக்கு மாறுபட்ட ஒன்றைப் புகல்வது அல்ல; என்ன அழகிய கருத்து! என்னே வள்ளுவனாரின் அறிவின் ஆழம்! எவ்வளவு தீர்க்கமான சிந்தனையின் பின்னே இத் தமிழ் மாமறையின மூல முதல்வர் இச் செய்யுளை அறத்துப் பாலிலே துறவற இயலிலே 'வாய்மை' என்ற அதிகாரத்தின் தலைப்பிலே இட்டிருக்க வேண்டும்?

அதற்கும் ஒரு படி மேலேறி மிகத் தெளிவாக மின்னும் ஓர் செய்யுளிலே விளக்கி விட்டார் தம் கருத்தை!

> "பொய்மையும் வாய்மை யிடத்த; புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் 'எனின்"

உலகிலுள்ள பேரறிஞர்களே! இதோ எங்கள் வள்ளுவனாரின் வாயமொழியை—மாறாத மாமறைப் பொருளை—சற்றே சிந்தியுங்கள்! எங்கள் தமிழ் மறையின் அநுபவ முழக்கத்தைக் கேளுங்கள்!

பண்டார சாத்திரம்

எழிற்குன்றன்

★

சைவசமய அருணூல்கள்—மெய்கண்ட நூல்கள், திருமுறைகள், பண்டார சாத்திரம் என மூவகைப்படும். இவற்றுள் முதற்றொகுதியில் 14 நூல்கள் உள்ளன. பன்னிரண்டு திருமுறைகளாக அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் பிரிவினுள் 50 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் மொத்தம் சற்றேறக்குறைய 18,000 எனலாம். மெய் கண்ட நூல்களையும், அவற்றின் ஆசிரியர்களையும் உரையாசிரியர்களையும், பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. (கா—புரட்டாசி. ஆனந்தபோதினி) மூன்றாவதாகிய பண்டார சாத்திரம் என்பதும் முதற்றொகுதியை யொப்ப 14 நூல்களையே கொண்டுள்ளது. இதனுள் எட்டு நூல்கள் தருமபுர ஆதினம் நிறுவிய முதற்குரவராகிய குருஞான சம்பந்தராலும், மற்ற ஆறு சாத்திரங்களும் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்களாலும் இயற்றப் பெற்றவை. பண்டார சாத்திரம் பதினான்கினுள் முதல் எட்டினைப் பற்றி முதற்கட்டுரையிலும், அவற்றை அருளிய குருஞான சம்பந்தர் பற்றிய வரலாற்றினை இரண்டாம் கட்டுரையிலும், எஞ்சிய நூல்கள் ஆறினையும் அவற்றை ஆக்கியோரையும் பற்றி மூன்றாவது கட்டுரையிலும் ஆராய்வோம்.

1 சிவபோகசாரம்:—இந்நூற்கண் இன்ப, துன்பமேற்படும் காரணமும், பயிற்சி, தவம், மூன்று கலாதி, பசு, பதி, பாசம் எனும் மூன்றும் அவற்றாலாம ஞானமும், சத்திகள், பேரின்பம் பெறும் வழியும், தசகாரிய விளக்கம், பண்டார சாத்திரச் சிறப்பு முதலியன பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் மலமறுத்து அருணெறியிற் புகுத்தும் இயல்பினதாய்ப் பேரின்ப மளிக்கும் சிறப்புடையது. எட்டு நூல்களுள்ளும முதன்மையாகக் கூறப்படும் பெருமை வாய்ந்தது. ஆசிரியர் இந்நூலால் ஞானப்பிரகாசரின் அடியார் குழாத்தின ரெல்லாம் முப்பொருளுண்மையுணர்ந்து, உலக வாழ்வினைக் காய்ந்தொழிந்து, கல்வி கேள்விப் புலமை பெற்று சிவானந்தக் கடலினுள் மூழ்கித் திளைத்து அழிவற்ற முத்தியின்பம் பெறுவர் என்பதனை ஆய்வார்......தொண்டர்களே என்ற சிவபோக சாரத் தனிப்பாடலால் விளக்கியுள்ளார்.

சிற்சில பிரதிகளில் 5 பாடல்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. இவற்றைச் சேர்த்துக் கணக்கிடின் நூலின் பாடல்கள் 144 ஆகும். இப்பாடல்கள் 144-ஐயும் சென்னைத் தமிழ்க் கலைக் களஞ்சியத் துணைப் பதிப்பாளராயிருந்த திரு. வித்துவான் ப. மு. சோமசுந்தரம் பிள்ளை எம். எ. எல். டி. என்பார் ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார். இவரே சொக்கநாத வெண்பாவின் 94 பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

சிவபோகசாரத்திற்கு காஞ்சிபுரம் வித்துவான் அருணை வடிவேலு முதலியார் 1947-ல் விரிவுரை இயற்றியுள்ளார். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா எனுமிரண்டும் ஆங்கிலமொழி பெயர்ப்புடன், குருஞான சம்பந்தரின் நினைவு மலராக 1950ல் வெளியிடப்பட்டுள்ளது. முன் 1932, 1836 ஆண்டுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

2. சொக்கநாத வெண்பா:—இஃது ஆசிரியர் தம் ஆன்மார்த்த மூத்தியான சொக்கநாதர் மீது தோத்திரமாகப் பாடிய நூற்றொரு வெண்பாக்களா லியன்றது. இப்பாக்கள் அனைத்தும் சைவப் பெரு மக்கள் நாடோறும் பூசை முடிவில் பாடிப் பேரின்மடையத் துணை புரிவனவாயுள்ளன. இந்நூற் கண் ஆசிரியர் பிற நூற் கருத்துக்களைப் பொன்னே போற் போற்றி எடுத்தாண்டுள்ளமை, இதனை ஊன்றிக் கற்போர்க்கு நன்கு விளங்கும். உதாரணமாக 7-ம் பாட்டு துகளது போதச் செய்யுளையும் 25ம் கவி சிவப்பிரகாசப் பாடலையும், 68ம் பாட்டும் 84ம் பாடலும் திருவாசகப் பாக்களையும், 87ம் பாவும், 92ம் பாவும் தாயுமானவர் பாக்களையும் நினைவுறுத்துகின்றன. மேலும் இது தோத்திர நூலாயிருத்தலோடு, சொற்செறிவும் பொருள் நயமும் கொண்டு, சொல்லாராய்ச்சியாளர்க்குப் பெருவிருந்தாய் செவிக்கினிய, சிந்தைக்கினிய பேரின்ப மூட்டுவதாகும். இந்நூல் 94 வெண்பாக்களைக் கொண்டதெனினும், வேறு சில பிரதிகளில் காணப்படும் 7 பாக்களையும் சேர்த்து 101 வெண்பாக்களாகக் கணக்கிடலாம்.

3. முத்திநிச்சயம்:—குருஞான சம்பந்தர் காலத்தில் சிதம்பரத்தில் கண்கட்டி மறைஞான பண்டாரம் என்ற சைவப் புலவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். இவரை காளத்தி மறைஞானர், குகைமடம் மறைஞானர் எனவும் மக்கள் கூறுவது வழக்கம். இவர் பரமத திமிரபானு பரமோபதேசம், சகலாகம சாரம், போசன விதி, சங்கற்ப நிராகரணம், சிவ தருமோத்தரம், சைவ சமய நெறி, ஐக்கியவியல், பதிபாச பனுவல், அகவல் அளவை நூல், முத்தி நிலை முதலிய தமிழ் நூல்களும், ஆன்மார்த்த பூசாபத்ததி முதலிய வடமொழி நூல்களும் இயற்றியுள்ளார். இவர் "வீடு பெற்ற ஆன்மா சிவானந்தம் நுகராது தன்னின்பமே நுகரும்" என்ற கருத்துடையராய் முத்திநிலை என்ற நூலைப் பாடியருளினார். இதனைக் கண்ணுற்ற ஞானசம்பந்தர் உலகோர் பாற் கொண்ட கருணை பற்றி "ஆன்மாவுக்கு ஆனந்தம் இயற்கையல்ல, அருட்பதிவால் மலம் நீங்கச் சிவானந்தமடையும் பேறே முத்தியாம்; ஆன்மா பெறும் ஆனந்தம் இறைவன் மாட்டுப் பெற்ற பேறேயாம்" என்று உணர்த்தி 22 வெண்பாக்களாலியன்ற முத்தி நிச்சயம் எனும் நூலைப் பாடியருளினார். அதற்குக் கமலை வெள்ளியம் பலவாண முனிவர் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் இயற்றியுள்ளார். பேருரை வெள்ளியம்பல வாண மாபாடியம் எனப்படும். இந்நூற் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் 1934ல் சிற்றுரையோடும்,

1946ல் பேருரையோடும், 1948ல் ஆங்கிலமொழி பெயர்ப்போடும் வெளிவந்துள்ளது.

4. திரிபதார்த்தரு பாதிதசகாரிய அகவல்:-இந்நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டதாயுள்ளதும். பாசதச காரியம் 56 அடிகளாலும், ஆன்ம தசகாரியம் 36 வரிகளாலும், சிவ தசகாரியம் 44 வரிகளாலும் பாடப்பட்டுள்ளது. மொத்தம் 144 அடிகளைக் கொண்டதா யுள்ளது. இந்நூல் பற்றிய கட்டுரை ஒன்று தருமபுர ஆதீனத் திங்கள் இதழாம் ஞான சம்பந்தனுள் வித்துவான் முத்து-சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் விளக்கமாய் வெளியிடப் பட்டுள்ளது.

5. சோடசகலாப் பிராசாத சட்கம்:—பிராசாத யோக மென்பது ஞானத்தை ஒழுங்குறப் பயக்கும் ஓர் யோகமாகும். பிராசாதம் எனுஞ் சொற்கு வட மொழியாளர் சிவ ஞான கதியைத் தருவது எனப் பொருள் கூறுவர். இதை விளக்கும் தமிழ் நூற்களுள் இஃது அப்பிராசாத மந்திரத்தின் 16 கலைகளையும் ஆறு விருத்தப்பாவி லுணர்த்துதல் பற்றி அப்பெயர் பெற்றது சோடசம் என்ற பதினாறு எனும் எண்ணிற்கும், சட்கம் என்றால் ஆறு சுலோகம் அல்லது பாக்களாலான நூலிற்கும் பெயர், இப்பிராசாத யோகப் பயிற்சி, இப்பொழுது வடமொழியாளர் ஒரு சிலரிடம் மட்டுமே வழக்கிலுள்ளது. இப் பயிற்சி, சைவ சமய நெறியை ஐயமறத் தெளிவித்து நிலை நாட்டுவதாயுள்ளது. இதனைச் சைவப் பெரு மக்களும் பிறரும், பண்டுபோலவே பயில முயன்று பயன்பெற விரும்புதல் நலம். இஃது 1931ல் வெளிவந்துள்ளது.

6. சொக்க நாதக் கலித்துறை இஃது 11 பாடல்களைக் கொண்டதாய், ஆசிரியரது ஆன்மார்த்த பூசாமூர்த்தியான சொக்கநாதரைப் பூசை செய்கையில் பாடி வழிபட்டு மகிழ்ந்த பெருமையை விளக்குவது, பண்டார சாத்திரத்தில் மூலம் மட்டும் வெளிவந்தது.

7. பண்டாரக் கலித்துறை. இஃது ஆசிரியர் தம் ஞானாசிரியரான கமலைப்பிரகாசர் மீது பாடியுள்ளதான ஞானப்பிரகாச மாலை எனவும் வழங்கும். இந்நூல் 36 பாக்களைக் கொண்டுள்ளது இவற்றைக் கற்றுணர்வோர் 36 தத்துவமும் கடந்த இறைவன் திருவடியடைவது திண்ணம். இத்தகைய நூலைக் குருஞான சம்பந்தர் தம் ஞானாசிரியர் மீது பாடி உலகோர் உய்ய உபகரித் தருளினார். இதற்கு முன்புள்ள ஆறு நூல்களின் பயனாக இது அமைந்துள்ளது.

8. நவரத்தினமாலை ஆசிரியர் தம் ஞானாசிரியர் சிவசாயுச்சியம் பெற்றபின அவர் பிரிவை ஆற்றாது, துன்பத்தால் வருந்தி இதனைப் பாடினர் என்பர். இந்நூல் 9 பாடல்களாலியற்றப் பட்டுள்ளது. இவற்றுள் முதல் 8 பாக்களின் ஈற்றடி ஒவ்வொன்றிலும் ஞானப்பிரகாசரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவர்மீது இயற்றப்பட்டுள்ளதெனத் தெரிகின்றது. வேறு பிரதி

களோடு ஒப்பிட்டுத் திருத்திக் கொண்டாலன்றி இவற்றின் உண்மை பற்றி அறிய இயலாது.

இனி, குருஞான சம்பந்தரின் ஞானப்பிரகாசர் கமலை என்ற திருவாரூரில் அவதரித்தருளியவர். இவர் ஆரூர்ப்பிரான் நடனத்தின் பொழுது முறிந்த படு தண்டுகூடப் பாடியும், திருமறைக்காட்டில் ஓர் வேதியனின் குட்ட நோய் தீர்த்தும், காளையார் கோயிலில் (திருக்கானர்) சமணர் இடுக்குற மழை பெய்வித்தும், காசியில் அரவு தீண்டிய அரச குமாரனை உயிர்ப்பித்து, அரசன் வேண்ட, வற்கடந் தீர மழை பெய்வித்தும் பல அற்புதங்கள் புரிந்தவர். இவர் தமிழில் புட்பவதி, சிவானந்த போதம், அத்துவாக் கட்டளை, திருவாரூர்ப் (தியாகேசர்) பள்ளு மழுவாடிப் புராணம் முதலிய நூல்கள் பாடியுள்ளார். இவரது காலம் 16ம் சதாப்தத்தின் பிற்பகுதியின் பிற்பகுதி என்பர். ஞானசம்பந்தர் இவரைத் தமது சிவபோகசாரம், பண்டாரக் கலித்துறை, நவரத்தின மாலை என்ற நூல்களில் பாடியுள்ளார்.

கமலை ஞானப்பிரகாசரின் நினைவாக, காசி மடத்து அதிகளசர் திரு. அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு என்ற பெயருடன் பேறக் கட்டளை ஒன்று நிறுவியுள்ளார். இதற்குரிய முதற் பொருள் 5000 ரூபாய் பெறுமான 3 சத வீத வட்டிதரும் அரசாங்கக் கடன் பத்திரமாயுள்ளது. இவ் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் நாடோறும் பிராம்மண போசனம், மகேசுவர பூசை (சைவர்கட்கு அன்னமளிப்பு) முதலியன செய்யப்படும்.

இனி, குருஞான சம்பந்தரைப்பற்றி வெளி வந்துள்ள தமிழ் நூல்கள் எவையெனக் காண்போம். சம்பந்த சரணாலயர் என்பார் 11 பாக்களாலியன்ற சிகா ரத்தினமாலை என்ற நூலியற்றியுள்ளார். சிகாரத்னம் என்றால் முடிமணி எனப் பொருள்படும் முடிமணி போன்ற குருராயரது பாமாலை யாதலின் சிகாரத்தின மாலை யெனப் பெயரிய தாயிற்று. இவரே மைசூர் அரசர் வேண்ட, கச்சியப்ப சிவாசாரியரின் 10346 பாக்களாலான கந்த புராணத்தைச் சுருக்கி 1048 பாக்களாக, கந்தபுராணச் சுருக்கம் என்ற பெயருள்ள நூலாகப் பாடியுள்ளார். கமலை வெள்ளியம்பலவாண முனிவர் என்பார் 12 விருத்தப் பாக்களால் குருஞான சம்பந்தர் சமூக மாலை எனும் நூலும், 11 பாடல்களாலியன்ற திருப்பள்ளி யெழுச்சியும், 40 கண்ணிகளால் தாலாட்டும் குருஞான சம்பந்தர் மீது பாடியுள்ளார். அன்றியும் மிருகேந்திர ஆகம மொழி பெயர்ப்பு, முத்தி நிச்சயச் சிற்றுரை, வெள்ளியம்பலவாண மாபாடியம் என்ற முத்தி நிச்சயப் பேருரை, ஞான வரண விளக்கம், அரும்பத விவேகம் முதலியனவும் இவர் இயற்றியுள்ளார்.

தமிழாகர முனிவர் 16 பாடல்களாலான சந்திரகலா மாலையும், பாக்களாலான ஞானசம்பந்தர் குருராய வட்டகமும் பாடி

யுள்ளார். முதல் நூல் சந்திரன் 16 கலைகளைக் கொண்டுள்ளது போல் 16 பாடல்களால் ஆனமைபற்றி சந்திரகலாமாலை எனப் பெயர் பெற்றது. சண்முக தேசிகர் என்பவர் கலித்துறைப் பாக்களால் அகப் பொருளமைதி பெற அகப்பொருள் நவமணிக் கோவையும், 32 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஞானசம்பந்த தேசிக மாலையும் பாடியுள்ளதோடு, சந்தான தேசிகர் போற்றிக் கலிவெண்பாவிலும் சிற்சில இடங்களில் பாடியுள்ளார். சந்தான தேசிகர் போற்றிக் கலிவெண்பா என்ற நூல் 105 கண்ணிகளாலியன்று, ஸ்ரீகண்ட தேவர் முதல், 20ம் குருவான சிவஞான தேசிகர் வரையுள்ள சந்தான குரவர்கட்கு வணக்கம் கூறுவதாயமைந்துள்ளது. இனிச் சேது புராணம், திருப்பரங்கிரிப் புராணம் (526 பாடல்கள்), திருவருட் பயன் உரை முதலிய இயற்றி சேது மடாலயம் நிரம்பவழகிய தேசிகர் தசமணி மாலை என்ற நூல் பாடியுள்ளார். இது 10 ஆசிரிய விருத்தங்களால் குருஞான சம்பந்தர் பெருமையை விளக்கிக் கூறுகின்றது.

இனி, "குருஞான சம்பந்தர்" என்ற வரலாற்று உரை நடை நூல் ஒன்று இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினரான S. சோமசுந்திர தேசிகரால் எழுதப் பட்டுள்ளது. குருஞான சம்பந்தரின் நினைவு மலராக வெளிவந்துள்ள சில தருமபுர ஆதீன வெளியீடுகளிலும் வரலாற்றுச் சுருக்கம் எழுதப்பட்டுள்ளது. பண்டார சாத்திரம் முதற்றொகுதியில் வெளி வந்துள்ள எட்டு நூல்களுள் சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தச காரிய அகவல், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை, நவரத்தின மாலை என்ற ஆறினையும் உரையுடனும், முத்தி நிச்சய மொழிந்த ஏனைய ஐந்து நூல்களை ஆங்கில மொழி பெயர்ப்புடனும் வெளியிட அறிஞர்கள் முயன்று ஆவன புரிதல் வேண்டும். தற்பொழுது தருமைத் தலைவராயுள்ள 25ம் பட்டம் உயர் திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் 28-5-1948ல் குருஞான சம்பந்தரின் நினைவு மலராக அவரருளிய எட்டு நூல்களையும் "பண்டார சாத்திரம்" என்ற பெயருடன் வெளிவரும்படி செய்துள்ளார். அவர்களே விரைவில் இவ்வெட்டும் உரையுடனும் ஆங்கில மொழி பெயர்ப்போடும் வெளிவர அருள் புரிவார்களாக.

சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்துக்கு எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா நம்பர் குறிப்பிடாமல் விலாசத்தை மாற்றும்படியோ, அல்லது வேறு எவ்விதமான காரியத்துக்கோ எழுதப்படும் கடிதங்களால் காரியாலயத்தினருக்கு வீண் காலதாமதமும் சிரமமும் ஏற்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

வள்ளுவர் மருந்து

புலவர் - ச. கந்தசாமி

★

3

ஐந்தாவது, உடலியல்போடு மாறுபடாத உணவுகள் என்பதை ஆராய்வோம். உடலியல்போடு மாறுபடும் உணவுகளையும், மாறுபடாத உணவுகளையும் அறிவது அரிது. ஆனால் அதுதான் முக்கியமானது. ஒவ்வொருவர் உடலும் வெவ்வேறு தன்மையுடையதாய் இருக்கிறது உட லியல்போடு பொய்ந்தும் உணவைத் திருந்த அறிந்து, நெறியாக உண்பவர், காயகறி உண்பவர் பெறும் பயனைப் பெறுவர். அதாவது, இளமையும் வலிமையும் உடையவராய், நோய் இன்றி நெடுநாள் வாழ்வர்.

நான் சிறுவனாக இருந்தபோது சித்தர் நூல்களைப் படித்திருக்கின்றேன். அவற்றில் நெடுநாள் வாழ்வதற்குக் காரணமாகிய காயகற்பம் கூறும் பகுதிகளையும் படித்து மறந்து விட்டேன். "ஒரு வருஷம் மிளகு கொள்ளு; பின்னர் கடுக்காய் கொள்ளு" என்றெல்லாம் அப் பாட்டுக்களின் வரிகள் செல்லும். நான் மகாத்மா காந்தியடிகளைக் கடைசி முறை, மாம்பலத்தில் மாலைப் பிரார்த்தனையின்போது பார்த்தேன். உடனே எனக்கு, "மேனி பவளநிறம் ஆகும் பாரே!" என்ற வரி நினைவுக்கு வந்தது. காந்தியடிகளின உடல் முன்பு நான் பார்த்ததுபோல் இராமல் அப்போது பவள நிறமாகக் காட்சி யளித்தது. "மேனி பவளநிறம ஆகும் பாரே!" என்ற வரி காய கல்பத்தின் பயன் கூறும் சித்தர் செய்யுளின் வரி. காந்தியடிகள் எக் காயகல்பத்தினை உண்டார்? அதனால் மேனி எப்படிப் பவள நிறம் ஆயிற்று? உணவை ஆய்ந்து ஆய்ந்து, தம் உடலுக்குப் பொருந்துவதை உண்டு, பொருந்தாததைக் கண்டிப்பாய் நீக்கி வந்ததுதான். அவர் கொண்ட காயகற்பம். "உணவெல்லாம் மருந்தாகும்; மருந்தெல்லாம் உணவாகும்" நாமாக உண்பது உணவு. மருத்துவர் கொடுப்பது மருந்து. அந்த மருந்துச் சத்து எந்த உணவில் இருக்கிறது என்று அறிந்து, அந்த அந்த உணவு தன் உடலுக்கு வேண்டுவதுதானா என்பதையும் தெரிந்து உண்ணும்போது உணவே மருந்தாம். மருந்தென வேறு வேண்டா. உணவாயினும், மருந்தாயினும் உடலில் உள்ள கெடுதல்களை—உடலில் வேறு வேறு இடங்களில் அடைபட்டுக் கிடக்கும் வேண்டாத பொருள்களை—பெருங்குடலில் மாத்திரம் அன்றி உடல் முழுதும் பரவி யிருக்கும் மலத்தை—நீக்கி இரத்தத்தைச் சுத்தி செயயுமாயின், அதுவே நல்ல உணவு! அதுவே நல்ல மருந்து! அத்தகைய உணவை ஆராய்ந்தறிந்து உண்டார் காந்தியடிகள்; சுத்த ரத்தம் பெற்றார். நம்மனோர்க் இல்லாத அதிசுத்தமாகிய அவ் விரத்தம் தோலின் மூலமாகப் பவள நிறக் காட்சி யளித்தது. சுடப்படாமல் இருந்திருந்தால் மகாத்மா

தமது உணவாராய்ச்சியினாலேயே நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்ந்திருப்பார்.

இனி, The Nature Healer (April and May, *1926*) என்னும் ஆங்கில மாதப் பத்திரிகையில், திரு R. D. குப்பா என்னும் உணவு மருத்துவர், அறுபது வயதினரான தம் உறவினர் ஒருவருக்கு இருந்த புண்ணாகி வரும் குஷ்டநோயை உணவு மாற்றத்தால் மாத்திரம் தீர்த்தார் என்றும், ஆறுமாதம் தொடர்ந்து அனுசரிக்கப்பட்ட அவ்வுணவு மருத்துவத்தால் அவர் குஷ்டம் நீங்கிச் சுகம் பெற்றதுடன், இழந்த கண்பார்வை பெறுதல், நரைத்த மயிர் கருமைநிறம் பெறுதல், திரைத்த (சுருக்கம் விழுந்த)தோல் திரை நீங்கிக் கருமை நிறம் மாறித் தூய செம்மை நிறம் பெறுதல் முதலிய இளமை நலன்களைப் பெற்றார் என்றும் குறிக்கப்பட்டுளது. குப்தா அவர்கள், "உடலின் சாதாரண உஷ்ணத்தை மிக மிகாமலும், மிகக் குறையாமலும் காப்பாற்றும் உணவு நல்லஉணவு; அது உஷ்ணவாகினி உணவு (Food which is a good conductor of heat); மாறுபடாத உணவை உண்பதால் அமரத்வம் (சாகாமை) பெறலாம்; ஒருவன் ஆராயாது உண்ணும்போது சாகத் தொடங்குகிறான்" என்னும் உயரிய கருத்துக்களைக் கூறுகிறார்.

இவற்றால், உணவாராய்ச்சி எவ்வளவு அருமையும் பெருமையும் வாய்ந்தது என்பதுணரலாம்! திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தைப் படித்தும், உணவாராய்ச்சி செய்து, தம் உடலியல்போடு மாறுபடாத உணவைத் தெரிந்து உண்ணாமல், பழமையான—வழக்கமான—இட்டலி சாம்பார் எனக்கு என்றைக்கும் இருக்கட்டும் என்று கண்டதை உண்டு நோய் கொண்டு வருந்துவார் மதியின் மதியின்மை வியப்படையத் தக்கதாகும்.

முதலில், ஒருவர் தாம் மலச்சிக்கல் உள்ளவரா? இல்லாதவரா? என்பதைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். மலச்சிக்கல் இல்லாதவர், தம் உழைப்பிற் கேற்கப் பல உணவுகளையும் கலந்துண்க. மலச்சிக்கல் உள்ளவர், கருணைக்கிழங்கு தவிர, மற்றக் கிழங்குகளையும், துவரம்பருப்புத் தவிர மற்றப் பருப்புக்களையும் நீக்கிவிட வேண்டும். வசலை, பசலை, புளிச்சக்கீரை ஒழிந்த மற்றக் கீரைகளையும், வாழைக்காய், வெண்டைக்காய் தவிர, மற்றக் காய்களையும் உண்ணவேண்டும். தயிர் கொள்ளாமல் புளிப்பில்லாத மோர் கொள்ளலாம். மலச்சிக்கல் அதிகமிருப்பின், உணவோடு மிகவும் அதிகமான காய்களையும் கீரைகளையும் உண்டு மலச்சிக்கலைப் போக்குக. அரிசி நீக்கிக் கோதுமை கொள்ளலாம்.

மதுமேகம், ராஜகட்டி முதலியன உடையவர், இருபது முப்பது வருஷம் மலச்சிக்கலைக் கவனியாது கண்டபடி உண்டவர் ஆதலின், அவர்கள், உய்ய ஒரே வழியுண்டு. அது அவர்கள் மேல் பிரிவில் நீக்கவேண்டும் என்று குறித்த பதார்த்தங்களை நீக்குவதோடு அரிசியையும் நீக்கி விடுவது. அவர்களுக்கு வைத்தியம் செய்பவர், அரிசி நீக்கிக் கோதுமை கொள்ளும்படி

சொல்லுகின்றனர். ஆனால், அரிசியைவிட அதிகம் கெடுதல் செய்யும் உளுத்தம்பருப்பையும் கிழங்கு வகைகளையும் நீக்கும்படி சொல்வதில்லை. அவர்கள் இவற்றையும், தயிர், நெய், மோர் முதலிய புளிப்பு தரும் பொருள்களையும் விடவேண்டும்.

நெடுநாள் (பல வருஷம்) மலச்சிக்கலால் உண்டாகும் மற்றொரு கொடிய நோய் மூலம், இந்நோய் உடையவரும் உணவினால் மலச்சிக்கலை முழுதும் ஒழித்து விடுவாராயின், அவர்கள் நோய் ஒழிந்ததேயாம். இவர்கள் கீரைத்தண்டு, முளைக்கீரை, மணத்தக்காளிக்கீரை, புடலங்காய், சுரைக்காய், வெள்ளைப்பூசனி, பெங்களூர் கத்திரி, கோஸ், நூல்கோல், மூன்றுவகை முள்ளங்கி முதலியவற்றை நிரம்ப உண்டு நலம் பெறலாம்.

சிலர்க்கு அடிக்கடி சுரம் வருகிறது. அவர்கள் மலச்சிக்கல் உடையவர்களாயின், அது நீக்குதற்கு மேற்கூறியபடி உணவு கொள்ளலாம். மலச்சிக்கல் சிறிதும் இன்றி, அடிக்கடி சுரம் வருகிறதெனின், அவர்கள் தம் உணவில் கத்தரிக்காய், மிதிபாகல், சுண்டைக்காய், தூதுவளைக்காய், தூதுவளைக்கீரை முதலியன கொள்க. மலச்சிக்கல் உடையவர் கொள்ளத் தக்கனவாகக் கூறிய நீர் சேர்ந்த காய், கீரை, கிழங்குகளை இவர்கள் சிறிது காலம்—சிலமாதம்—அறவே நீக்குக. சுரம் இருக்கும்போது இப் பதார்த்தங்களை உண்ணலாம் என்பது கருத்தன்று. சுரத்தை மருந்துண்டாவது, பட்டினி கிடந்தாவது போக்கிக் கொண்டு, பிறகு, அடிக்கடி சுரம் வராதிருக்க இங்குக் கூறிய உணவு முறையைக் கடைப் பிடிக்கவேண்டும்.

சில உஷ்ண தேகிகளுக்குச் சிறிது காரம் சாப்பிட்டால் பேதி ஆரம்பித்து விடும். அவர்கள் காரத்தை அடியோடு நீக்கவேண்டும். தயிர், எலுமிச்சம்பழம் முதலியவற்றை ஏராளமாகக் கொள்ளவேண்டும். உருளைக்கிழங்கு, உளுத்தம்பருப்பு, நெய், வசலை, பசலை, தக்காளிப்பழம் முதலியன கொள்ளலாம். இதனோடு தினந்தோறும் மிதிபாகல் உண்டுவரின் பேதி ஆகாத தேகம் உடைவர்களாக சிலமாதங்களில் மாறிவிடலாம். இவர்கள் கீரை வகைகளையும், கீரைத்தண்டு, வாழைத்தண்டு, புடலங்காய், சுரைக்காய், கருணைக்கிழங்கு முதலியவற்றையும் நீக்க வேண்டும்.

வெயிற் காலந் தோறும் சொறி சிரங்கினால் வருந்துபவர், தினம் கீரைத்தண்டு, வாழைத்தண்டு, புடலங்காய், சுரைக்காய், வெண்பூசனி, கோஸ், பெங்களூர்க்கத்தரி, முளைக்கீரை, மணத்தக்காளிக் கீரை, தக்காளி முதலியன தவிராது கொள்ளவேண்டும். அதனோடு, உஷ்ணதேகிகள் கொள்ளத்தகும் என்று மேற்கூறிய பொருள்களைக் கொள்ளலாம். முக்கியமாக, காபி, தேயிலை நீக்கித் தினம் இளநீர் கொள்க. பாகல், சுண்டை, கத்தரி, முருங்கைக்கீரை. அகத்திக்கீரை, பூண்டு, தேங்காய் நீக்க வேண்டும்.

ஆறுவது, தம்முள் மாறுபடும் உணவுகள் எவை என்று அறிதல் வேண்டும் என்றும், அவை தனித்தனியாக உணவாகக் கொள்ளத் தக்கவை என்றும், அவற்றைக் கலந்துண்டால் விஷமாகும் என்றும் ஒரு கருத்தைக் கூறி, தேனும் நெய்

யும் தம்முள் ஒத்து விஷமாதல் போல என்று உதாரணங் காட்டிச் செல்கின்றார்.

உடலில் ஒரு சத்துக் குறைவு இருப்பவர், அக்குறைவு நீங்குதற்கு உரிய உணவுப் பொருள்களைத் தெரிந்து உண்ணும்போது, அதற்கு எதிராகிய சத்துணவுகளைக் கொள்ளக்கூடாது. கொண்டால் அப் பத்திய உணவின் பயன் குறையும். உதாரணமாக, சொறி சிரங்கு உடையவர் முளைக்கீரை முதலிய குளிர்ச்சி தரும் பொருள்களைத் தெரிந்து பத்தியமாக உண்ணும்போது, காபி, டீ, கத்தரிக்காய் முதலிய சூடு தரும் பொருள்களையும் உண்பாராயின், அவர்கள் பத்தியம் பயனற்றுப் போம் அன்றோ? இவை போன்றவைகளைத் தம்முள் சேர்க்கக்கூடாத மாறுபடும் உணவுகள் என்று கொள்ளவேண்டும்.

நோய் இல்லாதவர், நான் கூறிய இந்த மாறுபடும் உணவுகளைக் கலந்து உண்ணவேண்டும் அவசியம் உண்டாகின்றது! நோய் இன்றிய உடலுக்கு எல்லாச் சத்தும் வேண்டும் அன்றோ. உதாரணமாக, சூடு தரும் கத்தரிக்காயோடு வாய்வு தரும் கடலைப்பருப்பும், குளிர்ச்சி தரும் வெங்காயமும் சேர்த்துக் கூட்டு செய்தல், வாய்வு தரும் வாழைக்காயோடும் கிழங்குகளோடும் சூடு தரும் மிளகாய், இஞ்சி, பூண்டு, குளிர்ச்சி தரும் வெங்காயம் முதலியன சேர்த்துப் பொரியல் வறுவல் செய்தல், பல காய்களையும் கிழங்குகளையும் போட்டு அவியல், சாம்பார் முதலியன செய்தல் போல்வன உட்கொள்ள வேண்டும். இவ் வுதாரணங்களில் கூறியன தம்முள் மாறுபடும் உணவுகளே; கலந்தால் விஷமாவன அல்ல; பல சத்தும் வேண்டும் என்பார்க்குக் கலந்து உண்ணுதற்கு உரியன. தனி உளுந்து வடையைவிட வெங்காய வடையும் கீரைவடையும் உயர்ந்தவையே. இதற்கு மாறாக, உளுத்தம்பருப்போடு உருளைக்கிழங்கும் சேர்த்து வடை செய்தல் நன்றோ? இங்ஙனம் பத்தியத்திற்கெனில் தனியாகக் கொள்ளத் தகுந்தனவும், சாதாரணமாகக் கலந்து கொள்ளுதற்கு உரியனவும் ஆகிய மாறுபடும் உணவுகளையும் நாம் அறிதல் வேண்டும். பரிமேலழகர் குறிக்கும் மாறுபடும் உணவுகள் சமன் கலந்தால் விஷமாகுந் தன்மையன.

இனி, தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய நாட்டுமொழி இலக்கியங்களில் காணப்படும் "அறுசுவை உண்டி," "ஷட்ரசம்" என்னும் தொடர்கள் ஆங்கிலம் முதலிய வேறுமொழி இலக்கியங்களில் இல்லை. இதனால், நம் முன்னோர் எத்தனை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே உணவாராய்ச்சி யுடையவராய் இருந்தனர் என்பது தெரிகிறது. நாக்கு ருசிக்காக அறுசுவை உண்டி ஏற்படவில்லை. இரத்தம், எலும்பு, தசை, கொழுப்பு, நரம்பு, உமிழ்நீர் என்னும் உடலில் உள்ள ஆறு தாதுக்களை வளர்க்க, முறையே துவர்ப்பு, உவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு என்னும் சுவைகள் காரணமாகின்றன. இவற்றுள் ஒவ்வொரு சுவையும் மற்ற ஐந்து சுவையோடு மாறுபடுவதே யாம். ஆயினும் நோய் இன்றிய மனிதன் அறுசுவையுங் கலந்துண்ண வேண்டும் என்று உரைத்தனர் அறிஞர் ஆகிய நம் முன்னோர்.

மணமகளுக்குச் சில மணிமொழிகள்

மூலம்: ஜொனாதன் ஸ்விப்ட் ★ தமிழாக்கம்: நலங்கிள்ளி

உன் திருமணத்தோடு தொடர்புடைய இடங்களுக்கு நீங்கள் செல்லுவதும், உங்கள் இல்லத்துக்கு வருபவரை வரவேற்று உபசரிப்பதுமாகிய யாவும் அனேகமாக முடிந்து விட்டிருக்கலாம். இப்போது நீ வேறுவிதமான ஒரு வாழ்க்கையை, வாழ்க்கையின மறுபாகத்தைத் தொடங்கும் நிலையிலுள்ளாய். அவ் வாழ்க்கையில், பெண் இனத்துக்கே உரித்தாகிய சில தவறுதல்களை நீயும் செய்யாமல் தடுக்க சில நற்கருத்துகள் அறிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாத தொன்றாகும்

நானும உன்னுடைய பெற்றோர்களும் வெகுகாலமாகவே நண்பர்கள்; நீ மணந்துகொள்ளப் போகும் இளைஞனும் எனக்கு மிகவும வேண்டியவனே. நீங்கள் இருவரும் ஒன்றுபட வேண்டும், திருமண மூலமாக என்பது என் நெடுநாளைய அவா ஏனெனில், நீ உன்னுடைய நற்குணத்தினாலும் அறிவு மிக்க உன் நட்பினரின் அறிவுரைகளினாலும், போதிய காலத்திற்குள், உன்னை அவனுக்கு ஏற்றவளாக—உகந்தவளாக திருத்திக் கொள்வாய் என்பது எனது நம்பிக்கை. புற உலகத் தொடர்பு அதிகமின்றி, வெளி மயக்குகளில் அதிகம் சிக்கா வண்ணம் உன் பெற்றோர்கள் உன்னை வளர்த்திருப்பது மிகமிக நன்மையான தொன்றாகும். ஏனெனில் புற உலக மயக்குகளில் ஆழ்ந்துள்ளவர்கள் சென்ற தவறுதலான நெறியினையே நீ பின் பற்றாமல் உன்னை நின் பெற்றோர்கள் காத்து வந்திருபபதனால், உள்ளத்திலிருந்து அகற்றபபட வேண்டிய துர் எண்ணங்களின் எண்ணிக்கை மறறவர்களைப் போல் அல்லாது உன் உள்ளத்தில் வெகு சிலவே இருக்கும். ஆனாலும உன் உள்ளத்தைப் பண்படுத்துவதில் அவர்கள் ஊக்கம், செலுத்தவே இல்லை. அறிவாளியான உன் கணவனின் காதலையும, பாராட்டுதலையும் காப்பாற்றிக்கொளள நனகு பண்பட்ட உளளம் உனக்குத் தேவைப்படுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளையும் கடக்க அவனுக்கு ஒரு உண்மையான துணை தேவைப்படுகிறது. அஃதின்று தன் மனைவிக்குத் தான் காதலனாக இருப்பதிலோ அவளைத் தன் மனைக்கு அரசியாக நடத்துவதிலுமோ அவன் வெறுப்பையே காண்பான். எனவே, நீ நின் கணவனுக்கு ஏற்ற வகையிலே அவனுக்கு ஏற்றவளாக ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்த வகையிலே, தேவைப்படும் கருத்துரைகள் யாவும் கூறி, உனக்கு வழி காட்டியாய் இருந்து, நீ எவ்வண்ணம நடக்க வேண்டும் எவ்வெதைத் தவிர்க்க வேண்டும் எனபதைத் தெரியப்படுத்தத் தவறமாட்டேன். எனவே, இவைகளைப் படித்தபிறகு கூர்ந்து கவனி. என்னுடைய இந்த மொழிகளைப் புறக்கணிக்காதே. இவைகளைப் பின்பற்றுவதினால் மட்டுமே, உலகில் நீ மிக்க கீர்த்தியுடன் திகழ்வதோடன்றி, நீயும் உன் கணவனும் மாறாத அனபுடன் வாழ்வீர்கள்.

•

முதன்முதலாக கன்னிப்பருவத்தின் நடவடிக்கைகளை பையப் பைய நீ மாற்றிக்கொள்ளுதல் நலம். உலகில், மணமான உடனே சில வாரங்களில் இளம் மனைவிகள் தாங்கள் இனி மேலும் சிறு குழந்தைகள் அல்லர் என்றும், கன்னிப்பருவத்தில் தங்களுடைய நடத்தை தங்களின் இயற்கைக்கு மாறாக கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. அது வெறும் வெளிமயக்கே யொழிய வேறில்லை என்றும் காட்டிக் கொள்ளும் தோரணையில், முன்னேற்றம் என்ற பேரால் பழகுவதையும், பேசுவதையும் காண்கிறோம். ஆனால் அறிவு மிக்க பெரியோர்களின் வாக்குரிமைகளைச் சேகரிப்போமாயின், நிச்சயமாக மணந்தபிறகு தங்களின் அடக்கத்தையும், கூச்சத்தையும் அதிகப் படுத்திக்கொள்ளும் பெண்களே முன்னணியில் நிற்பர்.

இது போலவே (உன் கணவனிடம், உனக்குள்ள அன்பை நீ பிறர் முன்னிலையில் காட்டிக்கொள்ளவே கூடாது.) அவர்கள் உனக்கு நெருங்கிய உறவினராயினும், பணியாட்களாயினும் உயர்குடிப் பிறந்தவராயினும், அறிவு மிக்கவராயினும், யாராயினும் சரியே. இது யாவருக்கும வெறுப்பையே நல்கும். இதற்குக் கூறப்படும் காரணங்கள் இரண்டு. ஒன்று கபடம், மற்றொன்று வெளி யிடத்தகாத கெட்ட பெயர். உபசரிப்பதில் நீ வேற்றுமையைக் காட்ட விழைவாயாயின் மற்றவர்களைவிட உன் கணவனுக்குத்தான் நீ குறைந்தபக்ஷ உபசாரத்தை செய்ய வேண்டும். அது உன்னுடைய வீட்டிலாயினும் சரி, வெளியிலேயாயினும் சரியே. ஒவ்வொரு மனிதனும், உன்னிடமிருந்து, உன்னுடைய கணவனைவிட நல்ல உபசாரமும் கௌரவமும் பெறுவதற்குத் தகுதி யுடையவர்களே.

நிற்க, உன்னுடைய அன்பையும், ஆசையையும் உன் உள்ளத்திலேயே வைத்துக்கொள். உன்னுடைய அன்பான பார்வையையும், இனிய மகிழ்வூட்டும் வார்த்தைகளையும் பிரத்தியோக நேரத்திற்காக ஒதுக்கி வைத்துக்கொள். ஒருநாளின் 24 மணி நேரத்தைக் காட்டிலும் அதிக மதிப்புடைய அந்தப் பிரத்தியேக நேரத்திலேயே பிரான்ஸ் தேசத்து நவீனங்களில் காணப்படும் வகைகளைவிட உயர்ந்த ரீதியில், நீ உன் கணவன்பால் உள்ள காதலை வெளிப்படுத்திக் கொள்ளலாம்.

இதனுடைய தொடர்ச்சியாகவே நான் மற்றொன்று உனக்கு உரைக்க விரும்புகிறேன். தங்கள் கணவன் வெளிநாட்டுக்குப் போயுள்ளபோது சகிப்புத்தன்மை கொள்ளாதவர்கள் போலும். அலுவலாக வீட்டுக்கு வெளியே தங்க நேர்ந்தகாலத்து கதவின் ஒவ்வொரு சத்தத்தையும் கேள்வியுற்று திடுக்கிடுபவர்கள் போலும் தன் கணவன் வந்தவுடன் அவனைத் தன்னிடம், மற்ற அவனுடைய வேலைகளையெல்லாம் விடுத்து வரும்படித் தன் பணியாட்களைத் தூண்டுபவள் போலவும், அவன் தன்னிடம் வந்த காலத்து அவனைக் கேள்விகள்மேல் கேள்விகள் கேட்டு (அன்போடு கூடியதாய் இருப்பினும் சரி) அவனைத் திணற

அடிப்பவள் போலவும், பிரிவுழிக் கலங்கி ஊண் உறக்க மற்றிருப்பவள்போலவும், அன்றி நீ உன் கலக்கம், காதல், அன்பு, யாவற்றையும் உள்ளத்துள்ளே மறைத்து புறத்துக்காட்டா வண்ணம் நடந்து கொள்ளவேண்டும்.

முன் கூறிய வகையைச் சேர்ந்த மற்றொரு சாரார் உள்ளனர். இவர்கள், தங்கள் கணவன் வெளியே சென்றால் அவனுக்கு எவ்வித பணியாக இருப்பினும் சரி, தங்களுக்கு அவனிடமிருந்து ஒவ்வொருநாளும் கடிதங்கள வந்துகொண்டே இருக்கவேண்டும். அவன் திரும்பிவரும் நாளை முன் கூட்டியே அறிவித்துவிட வேண்டும். அப்படிக் குறிப்பிடப்பட்ட நாள் எக்காரணத்தை முன்னிட்டும், தற்காலிகமாக ஏற்படக்கூடிய அலுவல்கள், உடல் வலி, ஆபத்து முதலிய எவைகளினாலும் சிறிதும் தவறக்கூடாது என்று கருதுபவர்களாகும். இப்படிப்பட்டவர்களைக் குறித்த என் கருத்து யாதெனில், நிதானத்தை உபயோகிக்கத் தெரியாத இவர்கள் தன் கணவனிடமிருந்து அவ்வப்போது செய்தி அறிந்துகொள்ள ஒரு பணியாளை நியமித்து தன் கணவன் தன்னிடம் சொல்லியபடி வரவிழையும் துரிதத்தினால் தன் கழுத்தையும் முறித்துக்கொண்டாள் என்னும் செய்தியையும் பணியாள் மூலம் தெரிந்து கொள்வதே யாகும்.

உங்கள் குலத்திற்கே சொந்தமானது ஒரு கெட்ட பழக்கம். அதாவது வித விதமான ஆடைகளை அவ்வப்போது அணிந்து கொள்வதில் அதிகப் பற்று உடைமை. இதை நீ சற்றுக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று உனக்குக் கூறினால் நீ அருவருப்படைய மாட்டாய் என்று நான் நம்புகிறேன். நீங்கள் யாருக்காக ஆடைகளால் அலங்கரித்துக் கொள்ளுகின்றீர்களோ அவர்களின் புத்திமதிகளுக்கு செவி சாய்ப்பீர்களா என்பதை நினைக்கச் சிறிது கடினமாகத்தான் இருக்கிறது. ஆனால் மிக விலை யுயர்ந்த ஆடைகளை அணிவதில் காட்டும் அக்கரையை விட (பெண்கள் நீங்கள் உடல் தூய்மையையும், சொல் இனிமையையும், உளப்பண் பாட்டையும் அதிகப்படுத்தச் சிறிது கவலை அதிகமாக எடுப்பீர்களேயானால் மிக மிக நல்லது) என்று சொல்ல நான் விழைகிறேன். நையாண்டி செய்யும் மனிதவர்க்கம், "அழகுடையதாயும், அதே காலத்தில் அழுக்குடையதாயும் இருபபது கடினமானதல்ல," என்றும் சுத்தத்தையும் அழகு படுத்திக்கொள்ளும் ஒரு மங்கையின் திறன் சில காலங்களில் குறைவு படலாம எனவும் நம்புகிறது. இந்தத் தலைப்பைப்பற்றி நான் மேலும் அதிகமாக ஒன்றும் கூறாமல் ஒரு நண்பர் தனக்கு மிகவும் சம்பந்தப்பட்ட ஒரு மங்கையைக் குறித்து எனக்குச் செல்லியதை இங்கு கூற விழைகிறேன். "அவள் தலையை உடலிலிருந்து வெட்டி எடுத்து விடுவதைவிட, நல்ல காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஏனெனில், என்னுடைய காதுகள் அவள் நாக்கினாலும், என்னுடைய மூக்கு அவளுடைய தலை முடியினாலும், பற்களினாலும், தங்கள் இயற்கையான ரசிக்கும் தன்மையை இழந்துவிட்டன" என்று கூறினார். (தொடரும்.)

காதற் சமாதி

விந்தை வேலன்

★

சந்திரா!

நினைவு எனும் உலகத்தை நெருங்கும்போது, ஏனோ நம்பிக்கையிலே இருள் சூழுகின்றது. கடந்த கால நினைப்பும் நிகழ்கால நடப்பும் ஒன்றுக்கொன்று இணைப்பற்றவைகளாகி விட்ட காரணந்தான்.

மனத்திலே ஒருவிதக் கலக்கமும் செயலிலே ஒருவித குழப்பமும் நீங்காது நிலவுகின்ற காரணத்தால் இக் கடிதம் ஓரளவு அவைகட்கு இடங்கொடுக்க விடாமல் இருக்க முயல்கிறேன்.

அத்தனைக் குழப்பத்தின் மத்தியிலும் அவர் நினைவு வரும்போது, என் உள்ளம் தன் நம்பிக்கை அடையும், காரணம் என் நம்பிக்கையின் சிகரத்தில் அவர் வீற்றிருந்தார். ஆதலினாலே, ஆனால் இன்று எந்த நம்பிக்கையியும் என் உள்ளததிலே ஒளி விடுவதாக இல்லை.

என் உள்ளம் கனவின்படி உலகில் வாழ விரும்பினேன். ஆனால் விதி வேறொன்றை விரும்பி என் எண்ணத்தை மண்ணாக்கியது. களியும் சுவையும், கனலும் ஒளியும், மதியும் நிலவும் போல் ஒன்றிய அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன், ஒரு காலத்தில். ஆனால், இன்று உலகிலே என்னை எதிர்பார்ப்பவர் ஒருவருமேயில்லை; நான் எதிர்பார்த்திருப்பதும் எதுவுமில்லை.

கனி மீண்டுந் தரைவாகி நீருழத்து விடுகிறதே அதுபோல் என் காதலும் ஒளிவிட்டு அமைதி யடைந்துவிட்டது. அதைத்தான் சமாதி யடைந்துவிட்டது என்று மேலே தலைப்புக்கொடுத்தேன்.

என் இச்சை, ஆவல், ஆசை, விருப்பம், இன்பம் என்பதெல்லாம் அவர் காலடியில் பலியிட்டு முந்நூறு ஞாயிறுகள் தோன்றி மறைந்தன. ஆம், ஓராண்டு நெருங்குகிறது. என் உயிர் போன்ற அவரிடம் என் உள்ளத்தே குமுறி பெயரும் எண்ணங்களை என் வாய்ப்படக் கூறி ஓராண்டு நெருங்குகிறது. என் மனத்தின் நெருக்கடியான தாளமுடியாத சுமைகளின் பளுவையெல்லாம் தாங்கின என் கண்ணின் மணியைப் பிரிந்து இதோ ஓராண்டு வரப் போகிற என் வாழ்க்கையில், முதன் முதலில் என் அறிவு தெளிந்தபின் நான் அன்பனாகத் தேர்ந்தெடுத்தது அவரைத்தான். அன்று பிரிந்தது முதல் இன்றுவரை என் உள்ளதை ஒருவராலும் எட்ட முடியவில்லை. தொடக்கூடிய அளவிலே என் நிலையுமில்லை, இனி எவரும்...என் எண்ணத்தை தொட முடியாது.

இன்றைய நிலைமையில் ஒரு முறை அவரைப் பார்த்தால் எவ்வளவோ ஆறுதலாக இருக்கும். ஏன்? உயிர் கொடுத்தாற்

போலிருக்கும். ஆனால் வேண்டாம். இன்று குமுறி எழும் வருத்த அலைகளை ஏற்றுக் கொள்ளும் அன்புக் கரையாக இங்கு யாருமில்லை என்றாலும், அவரை நான் பார்க்க விரும்புவதே கூடாது. அதனால்தான் இந்தக் கடிதம் எழுகியாவது ஆறுதலடையத் துணிந்தேன்.

ஆனால் என் முக்கிய வருத்தம் கூறுவதாக இல்லை. அது அவர் அறிந்ததுதான். இல்லையென்றாலும், நானதை எழுதக் கூடாது, என் வாழ்வின் கடைசி நேரத்திற்குள் அவர் வர மாட்டாரா? அல்லது நான் தானங்குவர மாட்டேனா? அப்போது இறைவனே ஆச்சரியப் படுவான். இவ்வளவு துயரை அடக்கி வைத்திருக்கும் இவள் மனம் வெடிக்காதது யாரிட்ட சாபமோ என்றுதான் வருந்துவான்.

ஒரு ஆண்டா? இல்லை; இல்லை. இரண்டு வருஷங்களாகி விட்டன. ஒரு கதையோ அல்லது கற்பனையோ என் மனதுக்குப் பிடித்திருந்தால் ஏன் என் கண்ணால் கண்டால்கூட எவரிடம் ஓடிச் சென்று காட்டி அவருடன் ஒருங்கே களிப் படைவேனோ அவரைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள ஆகிவிட்டன.

ஒரு சிற்பமோ சித்திரமோ அவர் என்னிடம் அடிக்கடி எடுத்து வந்துகாட்டி 'எப்படி?' என்று எவர் என் எண்ணத்தை அன்புடன் கேட்டு ஆதரிப்பாரோ அவரைப் பிரிந்து இரண்டு வருஷங்களாகி விட்டன.

இரண்டு வருஷங்கள்! ஆகா, இந்த வார்த்தை எவ்வளவு சுருக்மாக அடங்கிவிட்டது; ஆனால் உண்மையில் வார்த்தையில் அடக்குவது ஒன்றுமில்லை உலகத்திலே இரண்டு நூறு இரண்டு ஆயிரம, இரண்டு யுகம்—அதற்கும் மேலே யெல்லாம்கூட நாங்கள் பிரிந்து விட்டதுபோல் தோன்றுகிறது.

அலை! ஓயாது என்றிருந்தேன்., ஆனால், அதுவும் ஓய்ந்து விட்டது. அன்பிற்கு அடைப்பு இல்லை என்றிருந்தேன் ஆனால் அன்பிறகும் அடைப்பு உண்டு போலும். புயற் காற்றிற் பறந்து அலையும் இலையைப் போல என் மனம் ஏதோ என்னையும மறியாத சுழற்சியால் தத்தளிக்கிறது. ஏதோ ஒன்று என்னை அவர்பால் தூண்டிக் கொண்டேயிருக்கிறது. எவினபடி வெட்டும் வாள்போல, குறியை நோக்கிச்செல்லும் அம்பினைப்போல அவரை நோக்கியே என் எண்ணம் செல்கிறது. வாள் போல் என் நாட்கள் என் குறிக்கோளை வீழ்ததிக் கொண்டே செல்கின்றன. சொல்ல முடியாத இன்பம் சோர்வு கலந்து தென்படுவது போன்ற உணர்ச்சி ஏற்படும் என நெஞ்சில்.

அது வேறொன்றுமல்ல 'சாதலின் இன்னாதலில்லை' என்ற அரிய தொடரே அவ்வாறு தூரத்தில் தென்படுகிறது. அதோ காலக் கருமேகம் அதையும் மறைத்துவிடப் போகிறது. ஆனால் சிதைந்த தன் சிற்சில அறிகுறிகள் பக்கென்று தோன்றி மறை

யும் மின்னலைப்போல் அவர் நெஞ்சில் ஓர் நாள் பளிச்சிடும், அன்றாவது பழைய சிந்தனைக் குதிரை சிறகடித்துப் பறக்காதா? அந்த நேரமாவது என்னைப்பற்றி எண்ணவாவது மாட்டாரா? எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம். ஆனால் என் ஒரே வேண்டுகோள் நிறைவேறுவதற்காகவாவது அந்த நினைவு அவருக்கு வரத்தான் வேண்டும். அதற்காகவே இதனை எழுதி முடிக்கின்றேன்.

அவர் என்னைப்பற்றி எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறார். அவருடைய எழுத்தோவியங்களைப் பார்த்துப் பல நாட்கள் ஏன் பல மாதங்கள், இல்லை சில ஆண்டுகளே ஆகிவிட்டன. ஆனால் என் மனக் கண்ணில் அவை நடமாடுகின்றன. இப்பொழுதுங்கூட, அவர் எழுதிக் கொண்டிருப்பார். அவருக்கேற்ற பாத்திரம் இதோ நானிருக்கிறேனே.

வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு சக்தியை மறந்து ஒருவள் அங்கு உலவுகிறாள். நட்பின் இலக்கணங்களை வாயளவில் வழங்கிவிட்டு வாழ்க்கையினின்றும் வழுக்கிவிட்ட ஒருவள் அங்கே நகைப்புக் கிடமான சித்திரமாகக் காட்சி தருகிறாள். இந்த என் கற்பனைக்காட்சி உண்மையாகவு மிருக்கலாம்; உண்மையின்மையுமாக மிருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு பாத்திரம் அவருக்குத் தேவை என்றால், அவர் வேறெங்குந் தேட வேண்டாம். இதோ ஒரு நாள் அவருள்ளத்தில் முழு இடத்தையும் அடைத்துக் கொண்ட ஒரு சர்வாதிகாரி இன்று அவர் ஏட்டிலே ஒரு குற்றவாளியாய் அவர் வாழ்க்கையிலே விரட்டப்பட்ட ஒரு பிற்போக்குள்ளவளாய் கைதிக் கூண்டில் நிற்கிறாள். மனிதன் மனமறிந்து செய்யும் தவறுக்கு நிச்சயம் தண்டனை பெறுவதே நியாயம் என்ற முறை நடைமுறைக்கு ஏற்றது என்பதோடு மட்டுமல்ல, அது ஒன்றே குற்றவாளி திருந்தும் வழி என்பதாலும்தான் எழுதுகிறேன், அவர் எத்துணை தண்டனை வேண்டுமானாலும்கொடுக்கட்டும்,ஆனால் அவை எழுத்துக்களால் தானே இருக்க முடியும். ஒருவேளை அவற்றைக்கூடப் படிக்க முடியுமா என்பதே சந்தேகந்தான்.

அவர் படிக்கக் கொடுத்த ஒரு நூலில் "கல்யாணத்திற்கு முன்பு காதல் வழியில் பூக்கள் பரப்பி யிருப்பதுபோல் தென்படும். ஆனால் கல்யாணமானதும் அந்தப் பூக்கள் உலர்ந்து போகும்; அவற்றின் கீழே மறைந்திருந்த முட்கள்—வேல முட்கள் நெரிஞ்சி முட்கள்—கூரான பலவித முட்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் கொத்தும்" என்றெல்லாம் படித்தேன். ஆனால் கல்யாணமாகாமலே, எனக்கு அது தெரிந்து விட்டது. என்றாலும், அவர் கல்யாணத்திற்குப் பிறகுதான் அதை நான் அனுபவிக்க முடிந்தது.

அவர் என்று குறிப்பிட்டு வருவதெல்லாம் யார் என்பது ஒருவேளை உங்களுக்குப் புரியாமற்போய்! விடப்போகிறது. அவர் என் காதலர்!

தவறாக நினைத்து விடாதீர்கள்; 'கணகேர வெறிக்கும் வாழ்வுக்கும் தொடர்பேயில்லை. என்ற காண்டேகர் கருத்தை நாங்கள் உணர்ந்திருந்தோம், உண்மையில் அளவில்லாத பானங்களைத் தழுவக்கூடிய இன்பம் கணநேரத்துக் காதலில் இருக்கிறது என்று ஒரு மனம் எண்ணினாலும், மற்றொருமனம் கொதித்தெழுந்து காதல் என்றால் வெறும் மோகமல்ல, காதல் என்றால் வெறும் போகமல்ல. என்ற காண்டேகரின் இருமனத்தைப் போலவே நாங்கள் போராடிப் புனித காதலை வளர்த்துவந்தோம். ஆனால் அவரே கூறுவது போல என் திட்டமாகிய சருகு விதியாகிய புயலில் எங்கோ மறைந்துபோய் விட்டது.

ஆனால் எப்படியும் அவரை அடைய முடியாது எனத் தெரிந்த பிறகு நானே அவரை வெறுப்பதாகக் காட்டிக் கொண்டேன். வேறொருத்தியை மணந்து கொள்ள மன்றாடினேன். செய்து கொண்டார். மிகவும மகிழ்ந்தேன். இறுதியாக என் வேண்டுகோளையும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் இக் கடிதத்தை முடிக்கப் போகிறேன்.

நான் நிம்மதியை யிழந்து நெடு நாட்களாகி விட்டன. உலகமே எனக்கு வெறிச் சென்றிருக்கிறது. இருந்த சுகமெல்லாம் எங்கோ ஏகாந்த மோனத்திலே ஓடி ஒளிந்துவிட்டது. குமுறலும் கொந்தளிப்புமாக இருக்குமென வாழ்வு மரண ஓலைக்குப் பிறகாவது சாந்தியடையட்டும்.

என்னை இரவும் யகலும் வாட்டுவது ஒரேஒரு எண்ணந்தான் என் சிந்தனைக் கழல்களில் திரும்பத் திரும்ப வருவது ஒரே ஒரு நினைவுதான். என் கற்பனைக் கடலில் மாறி மாறி வரும் அலைநீர் ஒரே ஒரு சிந்தனையால்தான். ஆம், அந்த ஒரே ஒரு சிந்தனை உன்னைப் பற்றியது தெளிவாகச் சொன்னால், உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு என் பெயரை மறவாமல் இட்டழைப்பது இதுவே என் இறுதியான வேண்டுகோள். என்று அவரிடம் கூறுவீர்கள் என்ற நம்பிக்கையின் கடைசி எண்ணங்களைத்தான் இத்தனை எழுத்துக்களாக்கி விட்டன என் கைகள்.

இந்த ஒரு நினைவில்தான் எனக்கு ஒரு இன்பம் இருந்தது. வெள்ளத்திலும் அது இன்பப் படகாக இருந்து வந்தது. மாலையிலே சோலையாக, கடுங்குளிரிலே கம்பளியாக, காரிருளிலே ஒளி விளக்கமாக இருந்து கொண்டே வந்தது. அது வேறொன்றுமல்ல; அவர் வாயால் 'விஜயா, விஜயா' என்று அழைக்க வேண்டும். என்னையல்ல; அவரது செல்வத் திருக்குமாரியை அவர் மறந்தாலும் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்! நீங்களாவது உங்கள் பெண்ணை அவ்வாறு அழையுங்கள். அந்தப் பெயர் அவர் காதிலாவது விழட்டும். இந்த உலகிலே எனக்குரிய தாயாகக் கருதிக் குழந்தைபோல் அழுது கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த உரிமையை எனக்குக் கொடுங்கள் என்று

அவரோடு எவ்வளவு உடலொடு உடல் உராய்ந்து பழகிய நட்பு—உள்ளத்தோடு உள்ளம் ஒன்றி நடத்திய வாழ்க்கை அதற்கு இந்த ஓர் நினைவின் பரிசாகவாவது அளிக்கக்கூடாதா?

இதுவே உலகத்தின் என் கடைசிச் சிந்தனையும் வேண்டுதலும், என்னால் எழுதப்பட்ட கடைசி எழுத்துக்களும் இவற்றோடு சரி. என் முதலும் கடைசியுமான காதற் கடிதமும் இது ஒன்றேதான்.

இறுதியாக, எங்கள் நட்பினை வளர்த்த நண்பர் தி. நடராசன் அவர்கட்கும் என் நன்றி. அவர் கூறிய கருத்துக்கள் தான் என்னால் மேற்கண்டவற்றைக் கடிதமாக்கத் துணைபுரிந்தன.

தெளிவாகச் சொல்கிறேனே—நானினி வாழ்வதாக இல்லை; அவ்வளவுதான். என் காதல் சமாதியடைந்து விட்டது. நானும் அதனையே நாடி வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கிறேன்.

உங்கட்கு இறுதியான என் பணிவும் நன்றியும்.

சென்னீர்க்குப்பம்.
28—4—53

இங்ஙனம்,
விஜயா.

“ஆனந்த போதினி”

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன்	ரூ. 2—0—0
வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா	ரூ. 3—0—0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை	ரூ. 0—3—0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை	ரூ. 0—4—0
ஜீவிய சந்தா	ரூ. 30—0—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை.

பொம்மைகள்

“இளவல்”

★

எண்ணெய்ப் பசை அப்பிய விகாரமான, கருப்பு நிறமுள்ள அந்த இரும்பு இயந்திரம், பின்னால் கோக்கப்பட்டிருந்த பெட்டிகளை இழுத்துக்கொண்டு, ஒரு வாய்க்கால் பாலத்தின்மீது ‘கட முடா, கட முடா’ என்ற பேரிரைச்சலோடு துரிதமாகத் தன் பயணத்தை ஓட்டிக் கொண்டிருந்தது.

ரம்மியமான இயற்கைக் காட்சிகளும், அவற்றோடு போட்டி போடும் மனிதனின் பெரும் பிரம்மாண்டமான சிருஷ்டி சாதனைகளும் எதிர்ப்புறத்தே சென்றோடி மறைந்து கொண்டேயிருந்தன. என் ‘கம்பார்ட் மெண்டில்’ பிரயாணம் செய்பவர்கள் ஒருவருக்கொருவர் சுமுகமாக அளவளாவிக் கொண்டும், காரசாரமாக விவாதித்துக் கொண்டும் நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லா ‘கம்பார்ட்மெண்டு’களிலும் அப்படித் தான் இருக்கும்!

“அந்தாருக்குப் பாருங்க, ‘சிமெண்ட் பாக்டரி’; அதுக்கடுத்தாப் பிலே வீவிங் மில்லு; அப்புறம் சீனியாபீசு; பொறகு ஜங்ஷன் தான்!” என்று, ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு சுட்டு விரலால் சுட்டிக் காண்பித்துக் கூறினர் சொத்தைப் பல்லும், தடித்த உதடும் படைத்த ஒருவர்.

“அப்படியா?” என்று தென்பாண்டி நாட்டில் பிரயாணம் செய்தறியாத, பெஞ்சின் ஓரத்திலிருந்த வழுக்கைத் தலை ஆசாமி, நழுவிக் கீழே விழுந்த தன் அங்கவஸ்திரத்தை எடுத்துத் தோளில் சரிப்படுத்தியபடியே கேட்டார்.

“ஆமா. இறங்கினதும் நாகர்கோயிலு பஸ் ரெடியா நிக்குமோ என்னமோ? நின்றாலும், கூட்டம் எப்படி யெப்படி இருக்கோ?” என்று தன் சகதர்மிணியிடம் கூறிக் கவலைப் பட்டார் எனக்கு எதிரில் அமர்ந்திருந்தவர். அவருடைய பேச்சிலிருந்தும், அவர்கள் வைத்திருந்த மூட்டை முடிச்சுகளிலிருந்தும் அவர்கள் கன்னியாகுமரிக்கு விஜயம் செய்கிறார்கள் என்று சுலபமாகத் தெரிந்து கொண்டேன்.

கூட்டம் கம்மியாக இருந்ததால் பெஞ்சில் காலை நீட்டிச் சௌகரியமாகப் படுத்திருந்தேன் நான். என்ன செய்வது? இரண்டு நாளாக நல்ல விழிப்பு, ஓயாத அலைச்சல்—ஒழியாத திரிச்சல். அலுப்புத்தாங்க முடியவில்லை. சமயத்தில், காற்றில் சற்று அதிகமாக உலவிவிட்டால் மேல்கூட வலிக்கிறதே! அசந்து சோர்ந்து விட்டேன். ஒருவனுக்கு அடிமைப்பட்டு விட்டால் இப்படித்தான்! இரவென்றும் பகலென்றும் பாராமல், பெண்டாட்டி பிள்ளைகளை மறந்து கண்டபடி திரிந்து கஷ்டப்பட வேண்டும். கஷ்டப்பட்டாலும் கூடப் பரவாயில்லை. சுகம் உண்டா? ஒரு நல்ல பேருண்டா? சம்பளம் உண்டா? கவலை யில்லாமல் நிம்மதியாக இருக்க முடிகிறதா? ஊம். அதெல்லாம் நமக்கெங்கே? எவ்வளவு தான் உண்மையாகப் பாடுபட்டாலும், மாடு மாதிரி உழைத்துக்

கொள்ளை கொள்ளையாக லாபம் தேடிக் குவித்தாலும் மிச்சம் என்ன? தேகத்தைக் கெடுத்துக் கொண்டது தான்! "நாளையப் பொழுதை எப்படிக் கழிப்பது?" என்ற கேள்வி, கழுத்தை அறுக்கக் காத்திருக்கும் கத்தி போல் கண் முன்னால் நிற்கிறது. இதை எண்ணியதும் ஏக்கப் பெருமூச்சு என் இதய அடித்தலத்திலிருந்து கிளம்பியது.

வண்டி ஸ்டேஷனில் நிற்கவும், நான் எழுந்து உட்கார்ந்தேன். ஜன்னல் வழியாக 'ஸ்டேஷன் மாஸ்டர் ரூம்' சுவர்ப்பக்கம் மாட்டியிருந்த கடிகாரத்தில் கண்ணோட்டத்தைச் செலுத்தினேன். வண்டி இருபது நிமிஷங்கள் தாமதமாகத்தான் வந்திருக்கிறது.

'போட்டர்'களின் கூக்குரல், சிற்றுண்டி-பேப்பர் விற்பவர்களின் கத்தல், 'பிளாட்பாரத்தில்' ஜனங்களின் சந்தடி, பெட்டிகளில் ஏறுவோர்—இறங்குவோரிடையே ஏற்பட்ட தகராறு—ஆக ஸ்டேஷன், சந்தைக்களமாகி விட்டது.

"ஐயர்வாள்! ஒரு காபி கொடுங்க."

"ஹாங். காபி!" என்று இழுத்துச் சாய்த்த குரலில் கூறி, வட்டகையில் ஊற்றி ஆற்றிக் கொடுத்து விட்டு வேறு பக்கம் ஓடினார்.

காபியைக் குடித்து விட்டு, மடியிலிருந்து சில்லறை எடுத்து வைத்திருந்து அவரிடம் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

அச்சமயத்தில் கனத்த நபர் ஒருவர் என் பெஞ்சில் 'சிவா' என்று அஸ்வாரஸ்யமாகக் கூறிக் கொண்டே அமர்ந்தார். எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. என்னிடத்துக்குத் திண்டாட்டம் ஏற்பட்டு விடுமோ என்று சட்டென்று அமர்ந்து கொண்டேன்.

"இந்த சகிப்புத்தன்மை கூட உன்னிடம் இல்லையே!" என்ற குரல் கேட்டு வெளியே தலையை நீட்டினேன். இரு வாலிபர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். என் மனதுக்குச் சாட்டையடி கொடுத்ததைப் போல, உபதேசம் பண்ணுவதைப் போல எனக்குத் தோன்றியது. செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளும் குற்றவாளியைப் போல "உண்மைதான்!" என்று என் மனமும் கூறியது.

நான் நினைத்தேன். 'பிறனுடைய சௌகரியத்தைப் பறிக்கத் துரிதமாக முனைவானே தவிர, தன்னுடைய சௌகரியத்தைப் பங்கிட்டுக் கொடுக்க முன்வர மாட்டான், ஒவ்வொரு மனிதனும்! சுயநலக் குட்டையில் அமிழ்ந்து ஊறிப்போன பிராணி உலகில் மனிதனைத் தவிர, வேறு யாருமில்லை; எதுவுமில்லை.'

அவரை ஒரு முறை 'நோட்டம்' பார்த்தேன். வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். தேகம் கனத்திருக்கிறதே ஒழிய முகம் சிறுத்தேயிருந்தது. அவர் இப்பக்கம் அப்பக்கம் திரும்புகையில், கழுத்துப் பக்கம் மடிப்பு விழுந்து தொங்கும் சதை 'சப்போட்' கொடுப்பதைப் போல உருண்டு திரண்டு நின்றது. காய்ந்த தரையில் முளைத்த புல்லைப் போல, வழுக்கைத் தலையில் நரை மயிர்கள் குச்சிகுச்சியாக நின்றன. வெற்றிலைக் காவியேறிய பற்கள்; சப்பை மூக்கு; தீட்சண்ணியமாக ஊடுருவும் விழிகள்! தேகம் பித்த தேகம் போலிருக்கிறது. அடிக்கடி மேல் துண்டால் வியர்வை நீரைத் துடைத்துக் கொண்டேயிருந்தார். அவர் அணிந்திருந்த சட்டை—எப்போது தைத்ததோ—உடலை இறுக்கிப் பிடித்திருந்தது.

நான் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்ததை அவர் கவனித்து விட்டார். வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன், முகத்தை. அப்போது, 'நம்மைப் பற்றி என்ன நினைப்பார்' என்று என் மனம் சங்கடப்பட்டது. அரங்கேற்றத்துக்கு முன்பு ஒத்திகைகள் நிகழ்த்துகிறார்களே அதைப்போலிருந்தது, எனக்கும் அவருக்குமிடையே நிகழ்ந்த பார்வைச் சந்திப்புகள்!

ரயில் நகர்ந்தது. ஸ்டேஷன், மெயின் ரோடு, பல கட்டிடங்கள் எல்லாம் பார்வையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து, மறைந்தே விட்டது. கண்ணுக்குக் குளுமையும், மனத்துக்கு உத்சாகமும் தரும் மனோகரமான பசுமை நிறைந்த வயல்கள் தொலை தூரம் வரைக்கும் தென்பட்டுக் கொண்டிருந்தன. பயிர்களிலே காற்று அலைபோல் விளையாடியது.

அந்த அன்னிய மனிதர் என்னுடன் திடீரென்று பேச ஆரம்பித்து விட்டார். ரயில் பிரயாணத்திலே நமக்குத் தெரியாத மனிதர்களெல்லாம் முதலில் வன்ம எதிரியாகிப் பிறகு ஆயுள் சினேகிதராவது சகஜம்தானே!

"பிள்ளையாண்டனுக்கு எந்த ஊரோ? எங்கிருந்து வருதோ?" என்று முதன் முதலாகக் கேட்டார் அவர்.

"எனக்கா? தூத்துக்குடி கீழூரிலேயிருக்கேன். நீங்க?" என்றேன் சற்று திகைப்பாக.

"நானா? எனக்கு அம்பாசமுத்திரம். கல்லிடைக் குறிச்சியிலே எறங்கிப் போயிடுவேன். தம்பி எவ்வளவு தூரமோ?" என்று பயங்கரமாகக் கேட்டார்.

"நானும் ஒங்களை மாதிரித்தான்!"

புன்னகை புரிந்த வண்ணம் கூறினேன்.

"அப்படியா?" என அதிசயித்து, "ரொம்ப சரி! நம்ம ரெண்டு பேருக்கும்" என்று வெற்றிலைக் காவியேறிய பல்லெல்லாம் வெளியே தெரியக் கூறினார்.

"அங்கு, பெரிய குளம் தெருவுக்கு" என்றேன் நானாக.

"நானும் அங்கேதான். ரெண்டு பேரும் ஒரே ரெயில்லே ஒரே எடத்தை நோக்கித்தான் பிரயாணம் செய்தோம். இப்படி சந்திக்க நேரும்னு என்னைக்காவது நாம் எண்ணிப் பாத்திருப்பமா? தம்பிக்கு என்ன ஜோலியோ? இவ்வளவு தூரம் எங்கே? அதுவும் நம்ம தெருவுக்கு?" என்றார்.

"நமக்கு ஜவுளிக்கடையிலே அலுவல். சிட்டைப்படி நிலுவை வசூலிக்கிறதுதான் என் முக்கிய ஜோலி. இங்க நம்ம 'கிளாக்குளம்' பண்ணையாருக்கார்லா..........."

"ஆமா...அவருக்கென்ன? ஏகப்பட்ட சொத்திருக்கு பிரபலமான குடும்பமாச்சே. ஏன்?" என்று படபடப்போடு இடை மறித்துக் கேட்டார் அவர்.

"அவங்களுக்கென்ன? தூத்துக்குடிக்கு வந்திருந்த சமயம் நம்ம கடைக்கும் வந்திருந்தாங்க. நம்ம முதலாளிக்கும், அவருக்கும் தொன்று தொட்டுப் பழக்கமாம். சிறப்பான உபசரணையெல்லாம் பண்ணினாரு. கூடவந்திருந்த வீட்டுக்கார அம்மாவுக்கு, எங்க-

கடையிலிருந்து பட்டுச் சேலை மேலே கண் விழுந்திரிச்சு. பணம் கொறைவா யிருந்ததுனாலே கொஞ்சம் யோசிச்சாங்க போலுக்கு; எடுத்துக்கறதுக்கு முதலாளி ஊகிச்சுக்கிட்டாரு. இதை ஊகம் பண்ண முடியாதவரு அந்தஸ்ததானத்துக்கு லாயக்கு கிடையாதே! வேணும்னா எடுத்துக்குங்க. பொறவு ஆளை அனுப்புதேன்னு சொன்னாரு. அதனால் நான் வந்தேன். இப்போது என்று கூறிய நான், "நீங்க. எங்கே வந்துட்டுப் போறீரோ?" என்று வினவினேன்.

"இங்கே நிருநெவேலிக்கு ஒரு விஷயமா வந்துட்டுப் போறேன். பாரு தம்பி! எனக்கு ஒரே மவன்; பெல்லனும் பேரு. ரொம்ப நாள் கழிச்சுப் பொறந்த புள்ளே, அவ பொறந்த் ஆறும் மாசத்துலேயே எம் பெஞ்சாதி எமப்பட்டணம் போயிச் சேந்து போனா அந்த வயசிலேருந்து அருமையா; செல்லமா, ஒரு கொறை வைக்காம வளத்துக்கிட்டு வாரேன், ஒரு சுடு சொல் சொல்லியிருக்க மாட்டேன், இது நாள் வரைக்காச்சு, அதுக்கேத்தாப் போல் அவளும் நடந்துக்குவா. இத்தனை குணமான பெண்ணுக்கு அதிர்ஷ்டம் கட்டையாப் போச்சே—தாய்ப்பால் மறக்கு முன்னமேயே தட்டழிய விட்டுட்டுப் போயிட்டாளேயின்னு நினைக் கையிலே எனக்குக் கோஞ்ச நஞ்சமில்லே தூக்கம். அவ எங்கூட இல்லாம நான் சாப்பிடமாட்டேன். அப்படிச் சாப்பிட்டா—சாப்பாடு எவ்வளவு ருசியுடையதாயிருந்தாலும், ஏதோ குறையிருக்கிற மாதிரி தோணும். அவளுக்கு ஏதாவது காய்ச்ச, கீய்ச்ச—நோய் நொடின்னா எனக்கு வந்தாப்பிலேதான். அவளும் அப்படித்தான். அப் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசமாட்டா.

"என்னை ரெண்டாந்திரம் கலியாணம் பண்ணிக்கச் சொல்லி எத்தனையோ பேரு விதவிதமாச் சிபார்சு பண்ணினாங்க. பெண்ணு தரக்கூடத் தயாராயிருந்தாங்க. ஆனா அது எனக்குப் புடித்தமே யில்லே. ஏன்னா, அவ நலத்தை உத்தேசித்துப் பார்க்கறபோது இவ் வெண்ணம் உசிதமாகப் படலே. நாம் கலியாணம் செய்தோம். வேலைக்குப் போயிடறோம். அவ சின்னப் புள்ளையைச் சரியா போஷிக்கணும். அதுட்டே அன்பா நடந்துக்கணும். அப்படி இந்தக் காலத்துலே இருப்பாளான்னா சந்தேகம்தான். அடிப்பா, திட்டுவா; தாறுமாறாகப் பேசுவா. அப்படியில்லாமலிருந்தாலும் அண்டை அயல் வீட்டுக்காரங்க கோள், குசும்பு மூட்டிவிட்டு வேடிக்கை பாப்பாங்க. நாமும் எனனதான் இருந்தாலும் ரெண்டாந்தரக்காரிப் பக்கம்தான் சாய்வோம். என்ன தம்பி நான் சொல்றது? அதனால் கலியாண எழவே வேண்டாம்னுட்டேன் ஒரே தீர்மானமா.

"அவ வளந்து, கல்யாணம் முடிஞ்சு, புள்ளை குட்டிகள் பெற்று சீர் சிறப்பா வாழணும்கிறதுதான் என் ஆசை; ஆதியிலிருந்து அந்தம் வரைக்கும் இருக்கும் ஆசை; அந்த ஆசையைத் தவிர, எனக்கு வேறெவ்விதமான ஆசையும் கிடையாது. என் உயிர் தரிச்சு நிக்கறதுகூட அந்த ஒரே ஆசையினால் தான்னுகூடச் சொல்லலாம் ரெண்டு வருஷத்துக்கு முன்னால்தான் பெரிய மனுஷியானா. நம்ம குலப்பையனா, நல்லவனா, அவளுக்குப் புடிச்சவனாகப் பாத்து அவன் கையிலே புடிச்சுக் கொடுத்தாதான் எனக்கு நிம்மதி ஏற்படும். அவளுக்கு அவ அத்தை மவன்—என் அக்கா பிள்ளை—மேல பிரியம்னு தெரிஞ்சுச்சு. அவனும் ஆள் நல்ல அழகன்; யோக்கி

யன்தான். அவங்க இஷ்டத்தைக் கேட்டேன். சம்மதிச்சுட்டவங்க வெத்திலை கை பாறியாச்சு. வர்ற வெள்ளிக்கிழமை கலியாணம். அவ பேருக்கு நகை நட்டு வகைக்குன்னு பேங்கிலே பணம் போட்டிருந்தேன். எடுத்துப் போறேன். ஆண்டவன் கிருபையிலே அவ நல்லா வாழணும். இதுதான் நான் தினந்தோறும் ஆண்டவனைப் பிரார்த்திக்கும் வேண்டுகோள்;" எனறுகூறி மூச்சு விடாமல் பேசிய பேச்சை முடித்தார் அவர்.

"அப்படியா, ரொம்ப நல்லது. தங்களுடைய பேரு" என்றேன் நான்.

"எம்பேரு கருப்பையா பிள்ளை. ஆனா 'மேஸ்திரிப் பிள்ளை'ன்னு கேட்டாதான் என்னைத் தெரிஞ்சுக்க முடியும்', என்றார்.

நான் என் மனத்தில் நிறுத்தி எடை போட்டேன். தியாகபிம்பமாக—அன்புச் சிலையாக—எனக்குத் தோன்றினார்.

"கல்லிடைக் குறிச்சி, கல்லிடைக் குறிச்சி" என உரக்கக் கூவியது என் காதில் லேசாக விழுந்ததும், தூக்கத்திலிருந்து விடுபட்டுத் திடுக்கிட்டவன் போல திடுக்கிட்டு வெளியே பார்த்தேன். ரயில் ஸ்டேஷன் பிளாட்பாரத்திற்குள் சென்று கொண்டிருந்தது.

"அதுங் காட்டிலேயும் வந்துட்டுதா? பேச்சு வாக்கிலே நேரம் போனதே தெரியலியே!" என்று அங்கலாய்ந்துக் கொண்டே கீழிறங்கி ஸ்டேஷன் கட்டிடந்தைக் கடந்து, அம்பா சமுத்திரம் ஏன் தாவை நோக்கி நடந்தோம்.

நாங்கள் இறங்கியதால் சுமை குறைந்து விட்டது என்று தனக்குள்ளே ஆனந்தப்பட்டு உற்சாக மிததியில் வெறி பிடித்தது போல் 'ஓ' வென்று சத்தமிட்டுச் கொண்டு வேகமாக ஓடியது. ஆனால், அதன்மீது புதிய 'பாரங்கள்' ஏறியிருப்பது தெரியாதோ என்னவோ?

என் மனதில் ஒரு எண்ணம் பட்டது. 'வாழ்க்கையும் அப்படித் தானே இருக்கிறது. பிரம்மப் பிரவந்தனத்துடன் சிக்கலைத் தீர்த்து விட்டு ஆயாசத்தோடு அமர்கையில், மற்றொரிடத்தில் ஏற்படும் சிக்கல் நமக்குத் தெரிகிறதா? சிக்கல் முற்றிய பிறகுதானே புலப்படுகிறது.

நாங்கள் இருவரும் சம்பந்தா சம்பந்தமில்லாமல்,எதையெதைப் பற்றி யெல்லாமோ பேசிக் கொண்டே நடந்து சென்றோம். பிரியும் கட்டம் வந்தவுடன் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு பண்ணையார் இல்லம் போரேன். 'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டாமே!' பின் பண்ணையாருக்குக் கேட்பானேன்?

பசி வயிற்றைக் கிள்ளியது. கர்ண கடுரமாகக் காய்ந்த வெயிலில் ஹோட்டலை நோக்கி நடந்தேன். கதிரவனின் ஒளிக் கிரணங்களால் சூடேறிக் கொதித்த தரை, என் பாதங்களைச் சுட்டுப் பொக்களப் படுத்தியது. ஹோட்டலில் உணவு வயிற்றுப்பசியை அடக்கி, வயிற்று வலியைக் கிளப்பி விட்டுவிட்டது. நொத்து ஸ்தோத்திரம் பாடிக்கொண்டே பண்ணையார் வீட்டுக்குத் திரும்பினேன்.

அந்தத் தெருவின் திருப்பத்தை அடைந்ததும், பெரிய களேபரம் நிகழ்ந்தாற்போல் நிறைந்திருந்த ஜனக் கும்பலைக் கண்டவுடன் எனக்குத் திகைப்பு திணறிக்கொண்டு வந்தது. என்ன

வென்று அறியும் ஆவலில் விரைவாகச் சென்று கும்பலில் கலந்தேன்.

"அடப் பாவி, உருப்படுவானு அவன்? நாசமாப்போறய ஒரு குடியைக் கெடுத்துட்டானே!"

"சே, ரொம்ப வருத்தெருச்சலாருக்கு நல்ல வாலிபப் பொண்ணு மூக்கும் முழியும் நல்லா லட்சணமா—அவ நடந்து வந்தான்னு லச்சுமி வர்ற மாதிரி இருக்கும், கட்ட மண்ணுப் போவன், அவ வாழ்வைச் சிதைச்சுட்டானே!"

"யாரவன்? அடுத்த தெரு அழகேச பிள்ளை மவன் அடங்காப் பிடாரி அருளப்பனு?".

"ஆமா அந்தக் கட்டையில போறவன்தான் இவளைக் கட்டையில்போவ வச்சுட்டான்"

"அவனு? அவன் இப்படி எத்தனை பேரு குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கி விருக்கானே?"

"ஐயோ பாவம்! அந்தப் பிள்ளைவாளை நினைக்கும்போது தான் எவ்வளவு அன்பா, அருமையா, செல்லமா வளர்த்தாரு—பாக்கப் பரிதாபமாருக்கு கொடுத்து வச்சது. அவ்வளவுதான்!"

பலருடைய வாய்களில் நர்த்தனம் புரிந்த இப் பேச்சுகளை உன்னிப்பாகக் கவனித்த எனக்குப் படபடப்பு ஜாஸ்தியாகியது. "என்ன, என்ன?" என்று, அருகில் நின்ற ஒவ்வொருவரையும் பஞ்சரித்து விசாரிக்கலானேன்.

"ஒரு பொண்ணு பச்சநாவியைத் தின்னு உசுரைப் போக்கிக்கிட்டா. மேஸ்திரிப் பிள்ளைன்னு சொல்வாங்க. அவரு மக தான்! அருளப்பன்கிற தறுதலை ரொம்ப நாளாக் கண்ணு வெச்சுக்கிட்டிருந்து, அப்பன்காரன் அயலூர் போன சமயமாப் பாத்து, மூணு நாலு காலிப் பயல்களோட வந்து அவளைக் கெடுத்துட்டானும். அந்தப் பொண்ணு மனம் சகிக்காம காயிதம் எழுதி வெச்சிட்டு, மருந்தைக் கலக்கிச் சாப்பிட்டுட்டு நீட்டி நிமிந்துட்டா. வர்ற வெள்ளிக்கிழமை முகூர்த்தம்; அவ சவம்! அவ அப்பன் அலறுவான்; சுவர்லே மண்டையைப் போட்டு முட்டு முட்டுன்னு முட்டுதான்; உசுரைக்கூட வுட்டுறுவான் போலருக்கு வளர்த்த அருமை அவனுக்கில்லா தெரியும். உம் செத்த பிறகு அழுதென்ன பிரண்டென்ன?" என்றுகூறி அனுதாபப்பட்டார் அவர்.

எனக்கு விஷயம் விளங்கி விட்டது. கூட்டத்தில் இடித்துக் கொண்டு முன்றுக்குச் சென்று பார்த்தேன்.

அந்தப் பெண் கோரைப் பாயில் கிடத்தப்பட்டிருந்தாள். சாவின் பரிவணைப்பிலே சஞ்சலம் போக்கி உள்ளத்தில் பூர்ண அமைதி கண்டிட்டாள் போல, அவளது மின்னொளி வதனம் தெளிவாக, சாந்தமாகக் காட்சி யளித்தது. "கண்ணே நீ போயிட்டயா? செல்வம், என்னை விட்டுட்டுப் போயிட்டயா? உன்னைச் செல்லமா ஒரு குறைவுமில்லாம வளர்த்தேனே, நி எதுக்கம்மா போனே? இனி நீ என்னைப் பாக்க மாட்டியா' பேசமாட்டியா? ஐயோ! ஐயோ!!" என்று கூவி யழுது கண்ணீர் சிந்தியவாறு, பேயறைந்தான் போல், தன் தலையில் ஆத்திரத்தோடு இருகைகளாலும் அடித்தார் மேஸ்திரிப் பிள்ளை.

தலைவிரி கோலமாகத் தோன்றிய அவரைப் பார்க்கப் பயமாகவும், அவரது அலங்கோல அமங்கல ஸ்திதியைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது.

எந்த லட்சியத்தை வாழ்க்கையின் முக்கிய லட்சியமாக முன் வைத்து உரமேற்றி மெருகு கூட்டி வந்தாரோ அந்த இலட்சியம், அஸ்திவாரம் தகர்ந்ததனுல் பொடிசூரணமாகி விட்டது.

நெடு நாட்களாகக் கண்ட ஆசைக் கனவு—இன்பக் கனவு—நனவு என்னும் நிலையில் கனவு மயக்கமாகவே இருந்தால்............ ஐயோ அவருள்ளம் எவ்வளவு வேதனைப்படும்? வயது முதிர்ந்து தள்ளாமை யெய்தும் அவருக்கா இந்தத் துயரச் சுமை? அவரால் சகித்துக் கொள்ள முடியுமா? என எண்ணும்போது, என் கண்களில் நீர் துளிர்த்தது. வெளிக்குத் தெரியாமல் மறைத்துக் கொண்டு, இக்கண்ருவிக் காட்சியைக் காணப் பொருமல் நகர்ந்தேன்.

'மனிதனது எண்ணத்துக்கும், ஆசைக்கும் தகுந்தாற்போல் என்றுமே வாழ்க்கை பூரணத்திருப்தியாக அமைந்ததில்லை. காரணம், வாழ்க்கை ஒரு கட்டுக் கோப்புக்குட்பட்டதில்லை; மனிதனது அசகாய அறிவின் செப்பிடு வித்தைக்குக்கூட அது பிடிபட மறுக்கிறது. அறிவுக்குப் புலப்படாத ஏதோ ஒரு சக்தியின் கையிலிருக்கும் சூத்திரக்கயிற்றில், மனிதர்கள் முடிச்சு போடப்பட்ட பொம்மைகளாக ஆயுள் பரியந்தம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதுதான்!"

நான் செல்கையிலே என் மனம் எனக்கு ஓதிய வேதம்!

விற்பனைக்குத் தயார்!
பல வருஷங்களாக நாவல் உலகில்
எதிர்பார்த்திருந்த
ஆரணி-குப்புசாமி முதலியார்
எழுதிய
கற்பக சுந்தரி
அல்லது
மூன்று கறைகளின் மர்மம்
விலை ரூபா 3. (தபாற் செலவு வேறு.)
ஆனந்தபோதினி [illegible]
தபால்பெட்டி நெ. [illegible] சென்னை
182609

தொடர் கதை:

முடிவும் விடிவும்

ஜெயராஜ

1

மாலை மணி 6.

பகல் முழுவதும் செய்த வேலையின் களைப்பைத் தீர்த்துக் கொள்வதற்காக டாக்டர் சுந்தரம் ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து 'சிகரெட்' பிடித்துக்கொண் டிருந்தான்.

திடீரென்று யாரோ வந்து கதவைத் தட்டும் சப்தம் கேட்டுத் திரும்பினான். எழுந்து போய்க் கதவைத் திறந்தான். அங்கே நின்றார் 'சப் ரிஜிஸ்டரார்' சரவணர். 'வாருங்கள் ஐயா!' என்றழைத்தான் வந்தவரை.

ஆனால், இவன் வரவேற்பைப் பெரிதாகக் கருதவில்லை வந்தவர், 'சார் உடனே, நீங்கள் என் வீட்டிற்கு வரவேண்டும். வண்டி இப்போது வரும். என் மகளுக்கு காய்ச்சல் அதிகமாக இருக்கிறது. உடனே....."

'சரி' என்று கூறிப் புறப்பட்டான் சரவணருடன்.

சுய உணர்வற்று கட்டிலில் கிடந்தாள் ஓர் பெண். கிட்டத் தட்ட ஒரு வாரமாக, அடித்த காய்ச்சலில் இளைத்து துரும்புபோல் தோன்றினாள். கண்களிரண்டும் குழி விழுந்து, கன்னங்கள் கறுத்து அருவருப்பாக் தோற்றமளித்தன. ஆனால்......? அந்த அருவருப்பிலும் அழகின் ரேகைகள் தெரியாமலில்லை. சுருண்ட தலைமயிர். அழகான அடர்ந்த புருவம். நன்றாகப் பொருந்தப் பட்ட உதடுகள்.

வைத்யர்-பரிசீலனையைத் தொடங்கினான். வியாதி,'டைபாய்டு' என்பதைக் கண்டு கொண்டான். தகுந்த மருந்து வகைகளைக் குறித்துக் கொடுத்து விட்டு விடைபெற்றான்.

"தாயில்லாக் குழந்தை சார். தயை வைத்துக் காக்க வேண்டும். உங்கள் பொறுப்பு. ஒரே மகள். உங்களுக்குக் கைம்மாறாக என்ன வேண்டுமானாலும் செய்ய ஆயத்தம்.

"நீங்கள் கவலைப் படாதீர்கள். ஆபத்து ஒன்றுமில்லை. நான் இனி நான் தவறாது வந்து கவனித்துக் கொள்கிறேன். அவசிய மான, நேரங்களில் எனக்கு ஆளனுப்புங்கள்" என்று கூறிச் சென்றான் டாக்டர்.

மகளின் படுக்கையை அடுத்துச் சென்று 'லலிதா' 'லலிதா' என்று அவள் தந்தை கூப்பிட்டுக்கொண் டிருந்தார்.

மறுநாள் மாலை......!

டாக்டர் வந்தார். அச்சமயம் 'லலிதா' கண் விழித்திருந்தாள். அவனைக் கண்டவுடன் 'வணக்கம் டாக்டர்' என்று கூறினாள்.

'வணக்கம்' என்று கூறிவிட்டு, அவள் தேகநிலையை விசாரித் தான் பின் சோதித்து மருந்து கொடுத்து விட்டுச் சென்றார். லலிதாவின் தந்தைக்கு அவன்மேல் அளவற்ற மதிப்புண்டாகி விட்டது.

தன் மகளை ஒரே நாளில், தன்னுணர்வு பெறச் செய்த, அவ ருக்குத் தம் வீட்டில், காப்பி பலகாரம் எல்லாம் கொடுத்ததில் வியப் பென்ன...?

நாட்கள் விரைவாக நகன்றன. லலிதா பூரண குணமடைந் தாள். ஆனால்......? வைத்யர் இன்னும் அவள் வீட்டிற்கு வரத் தான் செய்கிறார். உடல் நோயாளி லலிதாவைக் காணவல்ல. ஆனால்...உள நோயாளியான அவர் அவளைக் காண வருகின்றார்.

லலிதா............?

மறைந்து போன அழகு திரும்பவும் வந்து விட்டது. கண் களிலே அந்தக் குளுமையும் துடிதுடிப்பும். கன்னங்களில் அந்த ரோஜா நிறம். உதடுகளிலே அந்த மென்மை. முகத்தில் பொலிவு. அனைத்தும் வந்து விட்டன. ஓர் புதிய பெண்ணாகி விட்டாள்.

இப்போதெல்லாம், அவர் வருமுன் காப்பி பலகாரம் எல்லாம் ஆயத்தம் செய்து காத்திருப்பாள். சரவணரும் இதைப் பொருட் படுத்தவில்லை. பொருட்படுத்துவ தென்ன? அவருக்கும் மகிழ்ச்சி தான். நண்பர்கள் யாருமின்றி தனிமையில் திரிந்த தன் மகளுக்கு நேரப்போக்கிற்கு ஓர் நண்பன் கிட்டினான் என்ற திருப்திதான்.

அவருக்கென்ன பணத்திற்குக் குறைவா...? அரசாங்க உத்யோ கஸ்தராயினும், அவர் அந்த வட்டாரத்திலேயே பெரிய பணக் காரரில் ஒருவர். அவர் சொத்தை ஆள, 'ஓர் ஆண்மகன் இல்லையே' என்ற கவலையைத் தவிர, வேறு குறை ஒன்றுமில்லை. ஆனால் .....அதனால் என்ன கெட்டுப்போய் விட்டது? தன் அருமை மகளை, தன் அன்புத் தங்கையின் செல்வ மகன் கணேசனுக்கு, கலியாணம் செய்து கொடுத்தால், கவலை தீர்ந்துவிடும், அவ்வளவு தான்..... ...!

அவர் உள்ளத்தில், பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்தரங்க ஆசைகளை, அவர் மகள் எங்ஙனம் அறிவாள் பாவம். தன் பிற் காலத்தைப் பற்றிய கவலையே இல்லாத லலிதா, சுந்தரத்திடம் மிகவும் நன்றாகப் பழகினாள்.

ஓர் நாள்................?

டாக்டர் வரும்பொழுது அவரிடம் இதைக்கொடு என்று கூறி அவள் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தார் சரவணர்.

மாலையில் டாக்டரும் வந்தார். கையில் பணத்துடன் டாக் டரை நெருங்கினாள் லலிதா.

"டாக்டர் சார்!" மிகவும் சிரமப்பட்டு, மரணத்தின் வாயிலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அதற்கு...இதோ இந்த ஏழை செய் யக்கூடிய கைம்மாறு என்று கூறி பணத்தை நீட்டினாள்.

"லலி! உன்னைக் காப்பாற்றியவன் நானல்ல. காப்பாற்றியவன் அவன். அவன் சித்தமில்லையெனில், நான் என்ன செய்தாலும் பயனில்லை."

"அப்படியில்லை டாக்டர். அவனுக்குப் பதிலாக உலகில் பிரதிநிதியாக இருப்பவர்கள் உங்கள் போன்ற வைத்யர் தான். உங்கள் அன்புப் பணிக்கு எங்கள் அன்புப் பரிசுகளைக் கொடுத்துத் தான் ஆக வேண்டும்."

"உங்கள் நன்றியே எனக்குக் கிடைத்த பரிசாகும். உங்களிடமிருந்து பணம் வாங்கினால் நான் பாபியாவேன்"

"செய்த வேலைக்கு கூலி வாங்குவது பாவமா?"

"ஆம்! அரசாங்கம் எனக்குக் கூலி கொடுக்கும்போது, நான் மற்றவர்களிடமிருந்து பணம் வாங்குவது என் மனிதத் தன்மைக்கு பொருந்தியதல்ல.........!"

"ஆனால்...உதவி செய்வதற்கு, தகுந்த விதத்தில் நன்றி தெரிவித்துக் கொள்வதைத்தான் நாங்கள் மனிதத்தன்மை எனக் கருதுகிறோம்."

"ஆம்! அதுதான். ஏழை, பணக்காரன் இவர்களின் மனிதத் தன்மைக்குள்ள வித்தியாசம். பணக்காரன் மனிதத்தன்மையை,-நன்றியை—தெரிவிப்பதற்குப் பணம் தான் கருவியா......?"

"அப்படியானால், அப்பாவிடம் கூறி ஓர் மோட்டார் சைக்கிள் வாங்கித் தரச் சொல்லட்டுமா......?"

—

"லலிதா......இந்த உலகம் மட்டுமல்ல ஈரேழு உலகங்களையும் என்னையும் சேர்த்து விலை பேசினால்கூட, அது உன் அன்பிற்கு ஈடாகுமா...? அத்தகைய, மதிப்பு வாய்ந்த உன் அன்பைப் பெறும் பாக்யம் பெற்ற நான் ....பணத்தால் என்ன இன்பம் காணப் போகிறேன். எனக்கு நீ கொடுக்கப்போகும் பணத்தை, என் நினைவில் யாராவது ஏழைகளுக்குக் கொடு, அப்போது பலன் உண்டு."

"டாக்டர்! நீங்கள் தத்துவ ஞானிபோல் பேசுவது எனக்கு சரியாகத் தோன்றவில்லை. அரசாங்கம் கொடுக்கும் சொற்பக் கூலிக்காக, நீங்கள் உழைத்து, உழைத்து உங்கள் வாழ்நாட்களைக் கடத்திவிடப் போகிறீர்களா...? உங்களுடைய திறமைக்குரியதை, நோயாளியிடம் கேட்டு வாங்க வேண்டியதற்குப் பதிலாக, கேளாமலே வரும்போதுகூட, நீங்கள் மறுப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது."

"லலிதா! நீ கூறுவது உண்மைதான். ஒன்று கூறுகிறேன், கேள். நீ பணக்கார வீட்டுப் பெண் ஆகையால், உனக்கு பணத்தைப் பற்றிய கஷ்டம் தெரியவில்லை. இருநூறு ரூபாயை 'இதோ! பிடி' என்று நீட்டுகிறாய் ஆனால், ஓர் ஏழைக்கு......நான் இந்தப் பணி செய்துவிட்டு அவனிடமிருந்து இருநூறு ரூபாய் வேண்டுமென்று வற்புறுத்தினால், என்ன ஆகும் அவன் கதி? என்பதைக் கற்பனை செய்துபார். உன் பார்வைக்கு அற்பமாகத் தோன்றும் பணத்தைத்தானா உன் நன்றிக் கடையாளமாகத் தர வேண்டும்"

"பின், நீங்கள் வேண்டுவது என்ன?"

'பணத்திற்கும், நாவின் வெறும் வார்த்தைகளுக்கும் உள்ள அன்பை, உள்ளபடியே எடுத்துக்கூறும் வல்லமை இருந்தால், உள்ள அன்பு என்ற உயரிய பண்பிற்கு உலகில் மதிப்பேது......?"

லலிதா, சற்று நேரம் திகைத்து நின்றாள்.

"அப்படியானால், நீங்கள் வேண்டுவது என் உள்ள அன்பா...?'

"இந்தக் கேள்விக்கு விடை உனக்கே தெரியாதா......?"

"அதைத்தான் ஏற்கனவே நீங்கள் திருடிக்கொண்டு விட்டீர்களே."

"லலிதா..............."

"டாக்டர்............?"

இருவரும் புன்னகை புரிந்தனர். கண்கள் பேசிக் கொண்டன. இருமனங்கள் ஒருமனப் பட்டன, சிரித்தனர். ஆம்! ஏழை—பணக்காரன்—என்ற பேதம்—அழிந்து விட்டதோ என்று எண்ணும்படி இருந்தது அந்தச் சிரிப்பு!

2

இரவு...............!

சுந்தரத்திற்கு தூக்கம் வரவில்லை. தனிமையில் கிடந்து புரண்டான். லலிதா—அவனைக் காதலிப்பதும்— அவன் அவளைக் காதலிப்பதும் உண்மைதான். ஆனால், இருவரும் திருமணம் செய்து கொள்வதை அவள் தந்தை வரவேற்பாரா......? பணத்திற்கு அதிபதியாக இருக்கும் அவர் தன் மகளையும், சுந்தரத்தையும் சதிபதியாகக்காண விரும்புவாரா......?

மனதில் ஓர் பெரும் புயல். அவன் காதலித்தது எல்லாம் வீண் தானா? லலிதா—அடுத்தவன் மனைவியாகப் போகும் காட்சியைக் கண்டு அவர் கண்கள் கண்ணீர் வடிக்க வேண்டுமா......?

படுக்கையை விட்டு எழுந்தான். பல புத்தகங்களைப் புரட்டி நோக்கினான். ஒன்றிலும் மனம் செல்லவில்லை. மறுபடியும் படுக்கையில் கிடந்தான். மணி நான்கு. இன்னும் உறங்கவில்லை எழுந்திருந்து காலைக் கடன்களை யெல்லாம் முடித்துவிட்டு, ஆஸ்பத்திரிக்குப் பயணமானான். மணி காலையில் ஆறிருக்கும்.

அதே இரவில்........!

லலிதா—தூங்கினாள். ஆனால், அவள் கனவில்...? தன் நிறத்திற்கேற்ப ஊதாப் பட்டுத் தாவணியணிந்து அவள் நின்றாள். இயற்கையும், செயற்கையும் சேர அழகுத் தேவதையாகத் தோன்றினாள். அவளுடன் அவனுமிருக்கிறான். இருவரும் ஒன்றாகக் கையைப் பிடித்துக்கொண்டு; உள்ளங்கள் ஒன்று கலக்க, உல்லாசமாக உலாவச் சென்றனர். மேல் நாட்டு உடைகளில், அசல் மன்மதனாகவே தோன்றினான் அவன். இரு இளம்பறவைகள் பறந்து விளையாடும் காட்சி எத்தனை இன்பம் பயக்குமோ, அதுபோல இளம் யுவனும் யுவதியும் இன்பவுலகில் பறந்து விளையாடுவதைக் காண இந்தப் பாரினிற்கே மகிழ்ச்சி.

திடீரென, அவர்கள் பிரிக்கப்பட்டனர். யாரோ, ஓர் அரக்கி வந்து அவள் முன்னின்று "ஐயோ! பெண்ணே எட்டாத பழத்தின் மேல், கொட்டாவி விடாதே. பணக்காரன் வீட்டிலே பிறந்த செல்வி நீ, செருக்கென்ற சிறையில் அடைபட்டுக்கிடக்கும் அவ்வளவு நாளும், உன் கனவுக் காதலனைக் காதலனாக அடைவது என்பது முடியாதது. இமயமலை பெயர்ந்து, கன்னியாகுமரி முனைக்கு எளிதில் செல்லக்கூடும். ஆகாயத்தில், மாளிகைகள் கட்டி மக்கள்

மனமகிழ்வுடன் கூடி, வாழ முடியும்! ஆனல், உன் போன்ற செல்வப் பெண், ஏழையின் குடும்பத்தில் தோன்றி, ஏழையாக விருக்கும் ஓர் ஆடவனை மணப்பது என்பது மட்டும் நடக்கக் கூடியதல்ல. வீணே, நடக்கக்கூடாத சம்பவங்கள், நடக்கக்கூடும் எனக்கருதி, உன் வாழ்வை நாசம் செய்து கொள்ள வேண்டாம்" என்று கூறினன்.

திடுக்கிட்டெழுந்த லலிதா, 'ஓ' வென்று கதறி "ஆ! டாக்டர்" என்றலறி விட்டாள். கனவு முடிந்தது.

விழிப்படைந்த, அவள் தந்தை 'என்ன? என்ன?' என்று வினவினர். அவள் விம்மி, விம்மி யழுதாள். இடையே 'டாக்டர் டாக்டர் ஐயோ!' என்று முணங்கினள்.

தந்தைக்கு விஷயம் புரிந்தது. சந்தேகம் அவர் முகத்தில் தோன்றியது.

ஒரே கணத்தில் சரவணருக்கு, டாக்டரைப் பற்றிய நல்லெண்ண மெல்லாமழிந்து அழியாத வெறுப்பு உதயமாயிற்று.

மறுநாள் மாலை.........?

ஐந்து மணிக்கு சுந்தரம் அவளுடைய வீட்டிற்கு வந்தான். அன்புடன் வழக்கம் போல், வரவேற்ருள் லலிதா. ஆனல், அவள் முகத்தில் மகிழ்ச்சியைக் காணவில்லை. ஏதோ! ஓர் தாங்க முடியாத கவலை, அவள் மனதிலிடம் கொண்டிருந்ததை அவனறிந்து கொண்டான்.

"லலிதா! ஏன் மகிழ்வின்றி யிருக்கிருய்...? என்ன நடந்து விட்டது?"

'ஒன்றுமில்லை..."

'இல்லை! ஏதோ நடந்திருக்கிறது, என்னிடம் நீ ஏன் மறைக்கிருய்? நீ என்னைக் காதலிப்பதுண்மையானல், மறைக்க வேண்டிய தொன்றுமில்லையே?"

"டாக்டர்.........?"

அவளால் மேலொன்றும் பேசமுடியவில்லை. தலை கவிழ்ந்தாள். கண்ணீர் துளிகள் முத்து முத்தாய், தரையில் விழுந்தன. விம்மி, விம்மியழ ஆரம்பித்து விட்டாள்.

சுந்தரம், அவள் கையைப்பற்றி, "லலிதா! ஏன் அழுகிருய்? ஏன்...? என்னிடம் கூடக் கூறமாட்டாயா..." என்று கெஞ்சினன்.

ஏதோ! சொல்ல வாயெடுத்தாள் லலிதா. ஆனல், வார்த்தைகள் வெளிவரவில்லை. அவன் நெஞ்சில் தன்முகத்தைப் புதைத்துக் கொண்டு நின்றழுதாள்.

அச்சமயம்...........?

அவ்வறையினுள் நுழைந்தார் அவளுடைய தந்தை. கண்கள் சிவக்க, உடலெல்லாம் துடிக்க ராட்சதன் போல் நின்றர் சரவணர்.

"ஏண்டி? உனக்கு இவ்வளவு தெம்பா? உன்னப்பன் இங்கே இருக்கும்போதே, அடுத்தவனுடன் குலவியிருக்க......? வெளிக்குத் தெரிந்தால், நம் அந்தஸ்து என்னவாகும்.........?" என்றுகூறி கர்ஜித்தார்.

சுந்தரம் அசைவற்ற மரம்போல் நின்றன். லலிதாவின்......... நிலையைக்கண்டு......மனம் நொந்தான்.

"ஏண்டா!......ஏ!......டாக்டர்? படித்து உத்யோகம் பார்த்தால் மட்டும் போதுமா...? வயதுவந்த பெண்ணுடன் கையைப்பிடித்து தனிமையில் தனித்திருக்க எத்தனை தைரியம்...? நான் நினைத்தால் உன்னை இந்த ஊரைவிட்டே விரட்ட முடியும்! உன் வேலை நோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டியது. இவன் நோயாளியாயிருக்கும்போது, உன்னை யழைத்தேன். மருந்து கொடுத்தாய். பணம் தந்தேன். வேண்டாமென்ருய். இப்போது! தெரிந்ததடா உன் சூழ்ச்சி! ஏய் பிச்சைக்காரப் பயலே, உன் அந்தஸ்தென்ன? மதிப்பென்ன...? நாயினும் கடைகெட்ட நீ யார் என் மகளைத் தொட, செல் வெளியே! என்று செப்பி, பிடறியைப் பிடித்து வெளியே தள்ளினர்.

"டாக்டர்" என்றலறினள் லலிதா. ஓங்கி அவள் கன்னத்தில் ஓர் அறைவிட்டார் தந்தை.

"நாயைக் கொழுப்பைப் பார். என் கண்முன்னே, அந்த நாயிடம் சல்லாபிக்க வேண்டுமா...? இன்னும் நீ ஓர்முறை அவனைக் கூப்பிட்டால், உன்னை......" என்று உறுமினர் மறுபடியும் ஓர் கைவீச்சு விட்டார் பஞ்சினும் மிருதுவாய அவள் கன்னத்தில்.

வாசல் வரை சென்று சுந்தரம் நின்ருன்.

"ஐயா! தயவுசெய்து அவளை யொன்றும் செய்யாதீர்கள். குற்றம் செய்தவன் நான். தயவுசெய்து (எனக்காகவல்ல) தெய்வத்திற்காக அவளை மன்னியுங்கள் லலி............நான்...—போகிறேன்" என்று கூறிக்கொண்டே நடந்து விட்டான்.

ஆனல்......?

கண்களில் நீர் பெருக அவனை நோக்கி விட்டுத்தான் கலங்கி நின்ற லலிதா அவனை நோக்கினள். அவள் நெஞ்சம் விம்மியது, அவள் கண்கள் பரிதாபமாக நோக்கின.

அந்தஸ்தில் குறைந்த, காதலில் தோற்கடிக்கப்பட்ட, தன் காதலன் சுந்தரம், தன் வீட்டைவிட்டு, தன் தந்தையால் வெளியே விரட்டப்பட்டு, அனதைபோல் வெளியே செல்லும் காட்சிதனைக் கண்டு அவன் வழிமேல் தன் விழி வைத்து நின்ருள் கொஞ்ச நேரம் பாவம்!

3

வேகமாக லலிதாவைக் கலியாணச் சந்தையில் விற்றுவிட எண்ணினர் சரவணர். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு தானு, ஊரெல்லாம் நெய்க்கலைய வேண்டும்? அவள் தமக்கை மகன் கணேசன் பி.ஏ. செல்வமும், சீரும், படிப்பும் ஒருங்கே பெற்று, லலிதாவை மனைவியாக அடைய வேண்டுமென தவம் கிடக்கையில், அவருக்கேன் கஷ்டம்? அவனுக்கே அவளைக்கொடுக்க நிச்சயித்தார் சரவணர்.

லலிதா—இயன்ற மட்டும் மறுத்துப் பார்த்தாள்— பயனில்லை. அழுதும் ஆதரவில்லை. கதறியும் கவனிப்பாரில்லை. வலுக்கட்டாயமாக அவனையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று

சமூகம் சாதித்தது. கடைசியில், பலவந்தமாக அவள் கழுத்தில் தாலி விழுந்தது. அவள் விருப்பமின்றியே மாங்கல்யம் அவள் கழுத்தை அலங்கரிக்க ஆரம்பித்தது. மனம் அங்கீகரிக்காத மனிதனை மணம் புரிந்தாள். நல்ல ஜோடி என்று உலகம் கூறியது. ஆனால், அவளுக்கல்லவா, நல்ல ஜோடியாகத் தெரிய வேண்டும்.

பெண் கும்பல், மகிழ்ச்சிப் பெருக்கால் நடனமாடியது. மாப்பிள்ளை வீட்டார் மனமகிழ்ச்சியுடன், அந்நாளைத் திருநாளாக்கி அமர்க்களப் படுத்தினர் இளங் குமரன், மணமகனும், அழகிலும், கல்வியிலும், செல்வத்திலும் அவனுக்கு சமமான ஓர் பெண்ணும், தம்பதிகளாக ஆகிவிட்டதை, எண்ணி உள்ளம் பூரித்தனர்.

பெண்ணைப் பற்றிய கவலை தீர்ந்ததென்று தந்தை குதூகலித்தார்.

ஆனால்..........?

டாக்டர் சுந்தரம் மனம் வெதும்பித் துடித்தான். தன்னுடைய உரிமைப் பண்டம் பறிபோவதை எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரிந்தான். வாழ்க்கையில் ஒளி வீசக்கூடிய ஒரே விளக்கு, அவனை விட்டு விலகியபின், இவ்வுலகை விட்டே விலகினால்கூட, என்ன என்று அவன் மனம் எண்ணியது.

அவள்........?

மணமகள்! கனவுகண்ட, காதலிக் காதலனை விட்டு, எவனோ ஒருவனைக் கைப்பிடிக்கும்படியான, நிர்பந்தநிலை தனக்கேற்பட்டதை எண்ணி ஏங்கினாள். சுந்தரத்துடன் இனி எத்தகைய தொடர்புமில்லை என்றுணர்ந்த போது, அவள் உயிர் திக்குமுக்காடியது சிந்திய மூக்கும், அழுத கண்ணுமாகவே இருந்தாள். தன்னுடைய கல்யாணம் என்பதைக்கூட மறந்து விட்டாள்போலும். அன்று, அவளுடைய நினைவு அனைத்தும், சுந்தரத்தின் நினைவே தான். மனமொவ்வாத் திருமணம் எனப்படும், மாறு பெயர் கொண்ட, சமூகத்தின் இரக்கமற்ற 'கொலை பாதகம்', நடந்தேறியது. குமாரி லலிதா சரவணர், திருமதி லலிதா கணேசன் ஆனாள்.

அன்றிரவு........?

ஊர்வலம். மெதுவாக ஊர்ந்து சென்றது தம்பதிகளை ஏற்றிச் சென்ற கார். பெருத்த ஜனக்கும்பல் பின் தொடர்ந்தது. ஒவ்வொரு வீட்டின், முன்னும் நின்று நின்று சென்றது கார். ஆனால்.....?

சுந்தரத்தின் வீட்டின் முன் நிற்கவில்லை. மெதுவாகச் சென்றது. அவ்வீட்டின் வருகைக்காகவே, ஆவலுடன் காத்திருந்த மணமகள், டாக்டர் சுந்தரம் நிற்கிறாரா இல்லையா என்பதைக் கவனிக்க கண்களை ஏறெடுத்துப் பார்த்தாள்.

ஆம்! எலும்பும் தோலுமாய், மெலிந்துபோன, ஓர் மானிட உருவம் நின்று, கண்களில் நீர் பொங்க, அவளை நோக்கியது. அவள் கண்களும், அவன் கண்களை ஊடுருவிச் சென்றன. இரு ஜோடிக் கண்களிலும், நீர்த்துளிகள் ததும்பி நின்று விளக்கு வெளிச்சத்தில் முத்துக்கள் போன்று பிரகாசித்தன. 'டாக்டர்' என்று கதறி விடலாமா என்றிருந்தது அவளுக்கு! இன்னுமொரு முறை அவன் லலிதா வென்று அழைப்பதை அவள் காதுகள் கேட்குமா......? அந்த ஒலியின் இங்கிதத் தொனியில் அவளிதயம் இன்புறுமா......?

அவளுடைய குயிலினுமினிய குரல் இனி அவன் காதில் தொனிக்குமா......? அவளுடைய நடையழகைப் பற்றி எத்தனை வர்ணனைகள் கூற முடியுமா...? அவள் கையைப் பற்றி லலிதா, நீயே என் உயிர், நீயே என் சொத்து, நீயே என் சுகம், உரிமை என்று கூறினானே; இனி அவனுக்கு அவள் உயிரளிக்கப் போகிறாளா...? சொத்தாவாளா......? இனி அவள் அவன் உரிமையா...? ஏதோ! நாட்டிலுள்ள, பிற பெண்களைப் போல், அவளும் ஒருத்தி காற்றில் ஆடிய அவள் தலைமயிரை எவ்வளவு தடவை தன் கைகளால் கோதிவிட்டான் இனி.......?

அவன் மார்பின்மேல் தலைவைத்துப் படுத்துக்கொண்டு, உலகை மறந்து கிடந்தாளே......? அவளுடைய, உஷ்ண பெருமூச்சு அவனுக்கு எத்தகைய இன்பத்தைக் கொடுத்தது, அந்த நாளும் இனி வந்திடுமமா......?

அவள் கையால், கைக் குட்டைகள் தைத்து அவனுக்கு அன்புப் பரிசளித்தாளே, இனி அவனுக்கு அவை கிடைக்குமா.....? அவன் வருகைக்காக, ஆவலுடன் காத்து நின்று, அவன் வந்தவுடன் முகமலர்ச்சியுடன், ஆலிங்கனம் செய்து வரவேற்பாளே, இனி அவள் அங்ஙனம் செய்ய முடியுமா...? தன் கையால் அவள் கூந்தலில் மலர் அணிவித்து, நீதான் இப்பூவுலகத்துப் பெண்களிலெல்லாம் சுந்தரி என்று கூறும் போது, அவள் காணுவாள். அவன் சிரிப்பான். இந்த நாடகம் இனி நடைபெறுமா...? லலிதாவின் கையினால் தரும் குளிர்ந்த, பானத்தை வாங்கிக் குடித்து, நன்றிக் கடையாளமாக, அவள் கன்னத்தில் ஓர் தட்டுத் தட்டுவானே அதில் அவள் எவ்வளவு இன்பம் எய்தினாள் ஆனால்......இனி......?

மலையுச்சியும், மருவும் ஒன்று சேரும் நாள் எந்நாள்......? வட துருவமும் தென் துருவமும் ஒன்றுகூடும் நாள் எந்நாள்...? மலரை விட்டுப்பிரிந்த காார் மறுபடியும் பின்னை உபயோகிக்கப்படும் நாள் எந்நாள்? மாங்கல்யம், கழுத்தில் ஏந்திய மங்கையும், மங்காத காதல் கொண்ட யுவனும் சந்திக்கும் நாள் எந்நாள்......? அந்நாள் இப் பூவுலகத்தில் விடியுமோ......?

இரு ஜதை கண்களும், ஓர் நிமிடம்தான் நோக்கின. கண்ணீரை ஆறுக வடித்தன. வற்றாத காதல் கடலிலின்று பொங்கியெழுந்த நீர் துளிகள், கண்களிலின்று வெளியேறின. தீராத, அன்பு கொண்ட நெஞ்சங்கள் விம்மின. 'பிரியோம்' என்று சத்தியம் செய்து கொடுத்த கைகள் பிரிந்து நின்றன. அன்று, புன்னகை தவழ விரிந்து நின்ற உதடுகள், இன்று மந்திர சக்தியால், கட்டுப் பட்டன போல, அசையாது நின்றன! அன்று, பாகத்தால், முத்தத்தால் இன்பம் அடைந்த உதடுகளின்று, துக்கத்தால் காய்ந்து போயின: ஜனக் கும்பல், ஒன்று மறியாததுபோல், நடந்துகொண்டேயிருந்தது.

அந்த ஒரு நிமிட சந்திப்பில்தான் எத்தனை இன்ப வேதனை! துயரக் கண்ணீர்! அவள் அவனிடம் எழுந்து ஓடிவிடலாமா வென்று எண்ணுகிறாள், ஆனால், மாங்கல்யம் மறுக்கிறது! அவன் அவளைத் தூக்கி வந்து விடலாமாவென்று எண்ணுகிறான்; ஆனால், தாலி தடுக்கிறது.

(தொடரும்,)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

விஜய வருஷம் ஆடி மீ கலியுகாதி 5055, சாலிவாகனம் 1876,
பசலி 1362 ஹிஜிரா 1372, கொல்லமாண்டு 1128,
இங்கிலீஷ் 1953 ஜூலை மீ—1953 ஆகஸ்டு மீ

ஆங்கில தேதி	தமிழ் தேதி	வாரம்.	திதி.	நட்சத்ரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	16	வியா	பஞ்26-45	பூர7-10	ஸி7-10ம	ஸ்கந்த பஞ்சமி, சஷ்-உப
2	17	வெ	சஷ்32-50	உ14-42	ஸி14-42அ	...ரிகாள், குமார ஷஷ்டி
3	18	சனி	சப்38-25	அ21-55	ம60	வைவஸ்வத ஸப்தமி
4	19	ஞா	அ43-05	சித்28-23	ச60	நாமக்கல் ப்ராணி வாங்க
5	20	திங்	நவ46-23	சு33-33	அ33-33ம	ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரம்
6	21	செவ்	தச47-55	வி37-05	ம37-05சி	லக்ஷ்மீ விரதாரம்பம்
7	22	புத	ஏ47-38	அ38-50	ச60	சர்வ-மத்வ-ஏகாதசி
8	23	வியா	த45-25	கே38-45	மி38-45சி	தேதி ...ழ
9	24	வெ	திர41-35	மூ36-58	அ36-8ச	
10	25	சனி	சது36-15	பூ33-43	அ60	
11	26	ஞா	○பௌ29-45	உத்29-15	அ60	
12	27	திங்	பிர22-23	திரு23-48	அ23-48சி	
13	28	செவ்	துதி14-35	அ18-08	சி18-08ம	
14	29	புத	திரு6-35 சது58-53	சத12-13	சி12-13அ	
15	30	வியா	பஞ்51-30	பூர6-30	சி60	
16	31	வெ	சஷ்44-55	உ...-18 ரே56-53	அ60	
17	1	சனி	சப்39-18	அ53-33	சி60	
18	2	ஞா	அ34-58	பர51-25	மி51-25சி	
19	3	திங்	நவ31-48	✲50-33	ம50-33	கிருத்திகை விரதம்
20	4	செவ்	தச29-58	ரோ 50-55	அ50-55சி	...ரிகாள்
21	5	புத	ஏ29-25	மிரு52-38	ச60	சர்வ-மத்வ-ஏகாதசி
22	6	வியா	த30 08	திரு55-30	ம55-30அ	சுபம் ...லக்க
23	7	வெ	திர32-05	புன59-30	59-30ம	...னி நாள், பிரதோஷம்
24	8	சனி	சது35-08	பூச60-00	சி60	...ஸ்பகை
25	9	ஞா	●39-13	பூச4-35	ச60	சர்வத்ர அமாவாசை
26	10	திங்	பிர44-08	ஆ10-35	சி10-35ம	ஆஷாட, சிரா...ண சுத்தம்
27	11	செவ்	துதி49-45	ம17-20	சி60	...களை ...ளரி விரதம்
28	12	புத	திரு55-50	பூர24-40	அ60	ஆடிப்பூரம்
29	13	வியா	சது60-00	உ32 13	ம32-13சி	யாத சதுர்த்தி விரதம்
30	14	வெ	சது2-00	அ39 43	அ39-43சி	சுபம் செய்ய
31	15	சனி	பஞ்8-00	சித்46 48	ம46-48அ	ஷஷ்டி உபவாசம்
32	16	ஞா	சஷ்13-18	சு52-55	ச52-55ம	சி.மரவி நா-14-07

		குரு சுக்	புதன் அங்
	4-கட-அங் 13-சிம்-சுக் 21-புதன்-வ-கி 32-சிம-சூரி		சூரி கேது புதன(வ)
ரா			
			சனி செவ்

Edited, Printed and Published by N. MUNUSWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.

வெளி வந்துவிட்டது!

ஸ்ரீமத் கம்ப இராமாயண வசன சங்கிரகம்

(சப்த காண்டங்கள் அடங்கியது)

(நான்காம் பதிப்பு)

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விவரித்துக் கூறும் இந்த இராமாயணம் புண்ணிய மிக்க கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதா லுண்டாகும் பயன்கள் அளவிடுதற்கு அரியனவாகும். இதனை பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலட்சுமி கடாக்ஷமுண்டாகும்.

மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.
முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.
ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.

விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

மதனாம்பாள்

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ் செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக் கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2-பாகங்கள் விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

ஆனந்த போதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

மலையாள அஷ்டாங்க ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது

மேகரோக நிவாரணி!

தாது விருத்திக்கும் இரத்த விருத்திக்கும் நிகரற்றது.

"எலிக்ஸ்ரைஸ்"

பத்தியம் கிடையாது: ருசிகரமானது

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்துக்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேகவியாதி, துர்நீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப்படைகள், உடம்பு எரிச்சல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் நோவு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திரநோய், மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப் போகுதல் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, இந்திரியத்தை இறுகச் செய்து ஆண் நரம்புகளை முறுக் கேற்றி, மனோ உற்சாகம் மேனிப் பிரகாசம், குழிவிழுந்த கன்னங்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களையும் வசீகரமாக்கி, புத்துயிர் அளித்து, இல்லற இன்பத்தை அனுபவிக்கச் செய்து, யௌவனத்தைத் தரும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். **20-நாள் மருந்து 40-வேளைக்கு (பூரண குணத்துக்குப் போதுமானது) ரூபா 2-4-0.** தபாற்கூலி 0—15—0.

காசா

காசம், இருமல், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு தலை சிறந்த ஔடதமாகும். (இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது.) இருமல், காசம், இளைப்பு, சளி, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார் தடிப்பு மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச் செய்து கபத்தை அறவே ஒழித்து, குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து

விலை ரூபா **2-8.** தபாற்கூலி 0-15-0.

(காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்

இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்மலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், இரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகாசங்களின் ரோகத்தை குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு **1-4-0.** அஸ்போ பாஸ்பெட் சேர்ந்தது. 1—8—0. தபாற்கூலி 0—15—C.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. வாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

சர்வமேக நிவாரணத் தைலம்

இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாயு, தனுர்வாதம், முழங்கால் வாதம், குதிக்கால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், தேக இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன் விலை ரூபா. 1—8—0 தபாற்கூலி 0—15—0

சீதபேதி (டிசெண்டரி) பவுடர்

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடிவயிற்று நோய் முதலான வியாதிகள குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8. தபாற்கூலி 0—15—0.

கூந்தல் வளரும் தூளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் கலந்து பிரதி தினம் மயிருக்குப் பூசி வந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12- தபாற்கூலி 0—15—0.

கார்டோலின் ஆஸ்தமா நிவாரணி.

சளி இருமல், சுவாச காசம் முதலிய பிரான்கியல் ஆஸ்தமா நோய்கள் 10 நாளில் தீரும். ஆஸ்மா இருமல் எந்த நிலையில் இருந்தாலும் குணத்திற்கு உத்திரவாதம். குணமில்லை என்று நிரூபித்தால் பணம் திருப்பித் தரப்படும் பத்தியம் இல்லை. 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 12—0—0.

தபாற்கூலி 0—15—0.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

கப் கியூர் என்னும் க்ஷய அரி

கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி, இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாச காசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈளை இருமல், தொண்டை எரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுதலினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதி கொண்டிருந்தவரை குணமாக்கச் செய்யும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி 0-15-0.

ஜீ. கியூர்

இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணத்தால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக் கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி 0—5—0.

காஸ்டோலின்

கீழ்க்குறித்தசரும வியாதிகளுக்கு காஸ்டோலின் ஓர் இணையற்ற "சஞ்சீவி"—அரிப்பு, மண்டைக் கரப்பான், தாமரைப்படை, கண்டமாலை, மேகப்பத்து, அரையாப்புக்கட்டி, கரப்பான், அழுக்குத் தேமல், கன்னப்புற்று, குழிப்புண், மார்ச்சிலந்தி, முகப்பரு, முகச்சொறி, பித்தவெடிப்பு, தினவு, சேற்றுப்புண், சொறி, சிரங்கு, நாரைப்புண், நாம்புச் சிலந்தி, விஷக்கடிகள், வெட்டுக்காயம், வெண் குட்டம், தேள் கடி, ஆறாத ரணங்கள், புரை புண் முதலிய எந்த நோயையும் மிக விரைவில் குணப்படுத்தி நலம் செய்வதாகும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 0—8—0.

3 டப்பி வரையில் தபாற்கூலி 0—15—0.

கோல்டனல்

இரத்தமின்மை, பலவீனம், பித்தசோகை, காமாலை முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து. சாப்பிட்ட 10 நாட்களில் இரத்தம் பெருகும், நரை கறுக்கும், பசியும் உண்டாகும். புளியேப்பம், குடல் புண், வயிற்றுவலி, குன்மம் முதலிய வயிற்றுக் கோளாறுகள் அறவே ஒழியும். குணத்திற்கு உத்திரவாதம். பத்தியம் இல்லாதது. 4 மாதம் உபயோக மருந்தின் விலை 2—0—0 தபாற்கூலி 0—15—0.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6. ஸாஹிப் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

18709

ஜாதக சாகரம்

மூலமும், விருத்தியுரையும்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரிய முழுமுதற் பரம் பொருள் அருளிச் செய்த, வேதம் நான்கினுடைய அங்கங்களாயுள்ள வேதாங்கம் ஆறினுள், நேத்திரங்களாய் மிளிர்ந்திலங்கும் சோதிட சாஸ்திரமானது கணித ஸ்கந்தம், ஜாதகஸ்கந்தம், ஸம்மிதாஸ்கந்தம் என்னும் மூன்று பிரிவுகளை யுடையதாகும். இவற்றுள் இந்நூல் ஜாதக ஸ்கந்தத்தைப் பற்றியதென்க. ஜாதக பலன்களை மிக திட்பநுட்பமாக அறிந்து மக்களின் முக்கால நிகழ்ச்சியின் பயன்களை மொழிவதற்கு ஜனனகால நிச்சயம், கிரக பாவ ஸ்புடங்கள், கிரகங்களின் அறுவகைப் பலங்கள் வர்க்கங்கள் முதலியன அவசியமாம் போன்றதாகும். இதனை, "செப்பரிய பல பாகம் பகரவேண்டில், செங்கதிரோன் முதல் நவக்கோள் செறிபலங்கள் தெரிந்தே........சாற்றிடு பத்தொன்பதென தகு புடங்கள் வரைந்தே, இப்புவியில் உரைத்தவர்க்கே சித்திக்கும் பலன்கள்" எனவரும் ஜாதகாலங்கார வசத்தினால் இனிதறியலாம்.

இதன் விலை ரூபா 3—0—0

ஜாதக சாகரம்

இரண்டாவது பாகம்

அச்சில் இருந்த ஜாதக சாகரம், இரண்டாம் பாகம், அநேக விஷயங்களுடன் வெளியாகி இருக்கிறது. இதில் ஜாதகம் புதிதாக கணித்துப் பலன் சொல்லும் திறமை யுண்டாகும் அளவுக்கு ஒவ்வோரிடத்திலும் தக்க முறைகளுடன் முழுதும் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதைப்படித்து ஜாதகங் கணித்து கர்ப்பசிஷ்ட தெசை புக்தி நிலுவை கண்டு கொள்ளவும். மற்ற தெசைகளில் அந்தர, அந்தராந்தர, ஸூக்ஷ்ம, ப்ராண புக்திவரை பிரித்துக் கொள்ள வழிகளும் சொல்லப்பட்டும், பதங்களும் பிரித்து அமைக்கப்பட்டிருக்கின்றதுடன் லக்னாதி துவாதச பாவங்களினால் அறியவேண்டிய பலன்களையும், பாவ, கிரக, காரக ஆதிபத்தியாதி விவரங்களையும், அந்தந்த ஸ்தானங்களிலிருக்கும், கிரக தெசைகளில் மேற்படி கிரகங்களினால் நேரக்கூடியபலன்கள், பின்னும் கோச்சார பலன்கள், அதிலுள்ள முக்கிய விசேஷம், அவை நேரிடாதிருக்கக் காரணம், பலன்கள் நேரிடும் சமயம் உண்டாகக்கூடிய விசேஷ பலன், அற்ப பலன், நிதானமான நடுநிலைமையான பலன், இவைகளையும் இன்னும் மற்ற முக்கியமானவைகளையும் அதிசயமான விசேஷ பலன்களுடன் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2. (தபால் செலவு 7 அணா.)

1-ம் 2-ம் பாகம் சேர்த்து வாங்கினால் விலை ரூபா 4-8-0.

(தபால் செலவு 0—11—0.)

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.



இந்த அபூர்வ மருந்தானது அநேககொடிய வியாதிகளை ஆச்சரியமாக கண்டிக்கக் கூடியது. வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள்சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தை டமையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூ. 1. 40-நாள் மருந்து விலை ரூ. 1-12-0.
போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு அ. 10. 40-நாள் மருந்துக்கு ரூ. 1,

அயத்தங்கத் திராவகம்

தனலட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.